வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.

27.°C 26.°C

பக்கம் 32 | சுடர்: 28 | கதிர்: 351 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 27, புதன் 13.11.2013

## போரில் உயிர் நீத்தோருக்கு ஒப்ராய் அஞ்சலி



யாழ்ப்பாணம், நவ. 13
இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் உயிரிழுந்தவர்களுக்காக, தமிழர் தாயகத்தின் யாழின் நுழைவாயிலான ஆனையிறவில், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார் கனேடிய நாடாளுமன்றச் செயலர் தீபக் ஒப்ராய்.
கனேடிய அரசு சார்பில் பொது நலவாய மாநாட்டில் பங்கேற்க இலங்கை வந்துள்ள கனேடிய

21

## வெளிநாட்டு அமைச்சர்கள் வடக்குக்கு

யாழ்ப்பாணம், நவ.13
பொது நலவாய மாநாட்டின் சமூக அமர்வுகளில் பங்கெடுக்க வந்த வெளிநாட்டு அமைச்சர்கள், சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உள்ளடங்கலாக 50 பேர் கொண்ட குழுவினர் இன்று புதன்கிழமை வடபகுதிக்கு வருகை தரவுள்ளனர் எனத்

21

## வடக்கு மாகாணத்தில் மீள்குடியமர்வு பூர்த்தி

### ஆளுநர் சந்திரசிறி கூறுகிறார்

யாழ்ப்பாண்ணம், நவ.13
வடக்கில் உள்நாட்டுப் போரினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் பூரணப்படுத் தப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.
வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு முதன்மை உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்

21

# இசைப்பிரியாவின் காணொலி வேண்டும் உடனடி விசாரணை

### யாழில் வலியுறுத்தினார் கனேடிய நாடாளுமன்ற செயலர் தீபக் ஒப்ராய்

யாழ்ப்பாணம், நவம்பர் 13
'சனல் - 4' தொலைக் காட்சியினால் வெளியிடப்பட்ட இசைப்பிரியாவின் காணொலி தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும். அத்துடன் இந்த விடயம் உள்ளடங்கலாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு கனடா தொடர்ந்தும் வலியுறுத்தும் என்று கனேடிய வெளி விவகார அமைச்சு மற்றும் சர்வதேச மனித உரிமை விவகார நாடாளுமன்றச் செயலர் தீபக் ஒப்ராய் நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்தார்.
இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் கனேடியப் பிரதமர் கலந்துகொள்ளவில்லை. அவருக்குப் பதிலாகப் பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க இலங்கை வந்துள்ள தீபக் ஒப்ராய் நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை



ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் பின்னர் உதயன் அலுவலகத்துக்கும் வருகை தந்தார். 'உதயன்' இயக்குநர் ஈ.சரவணபவன், பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோருடனும் அவர் கலந்துரையாடினார்.
இதன்பின்னர் அவர் 'உதயனு'க்கு

21

## வாழ்விடங்களை விடுவிக்குமாறுகோரி வலி.வடக்கு மக்கள் உணவு தவிர்ப்பு

### மாவிட்டபுரத்தில் நேற்று பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்பு



யாழ்ப்பாணம், நவ.13
பல்வேறு அச்சுறுத்தல்களையும் தாண்டி வலி.வடக்கு மக்களின் வாழ்வுரிமைக்கான உணவு தவிர்ப்புப் போராட்டம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முன்பாக நேற்று செவ்வாய்க் கிழமை ஆரம்பமானது.
நேற்றைய முதல்நாள் போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.
இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வலி.வடக்கு பிரதேசங்களை விடுவிக்குமாறு கோரியும் தமது வாழ்விடங்கள் இடிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு கோரியும் மக்கள் இந்த உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள னர்.
கொழும்பில் பொது நலவாய மாநாடு

21

## இன்னுமா இல்லை உரிய நடவடிக்கை?

### உதயன் தாக்குதல்கள் குறித்து ஒப்ராய்



யாழ்ப்பாணம், நவ.13
உதயன் மீதான தாக்குதல்கள் தொடர்பில் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமை எனக்கு அதிருப்தியையும் ஆச்சரியத்தையும் அளிக்கின்றது. ஊடகங்களைப் பாதுகாக்க இலங்கை அரசு தவறியுள்ளமை தொடர்பில் கனேடிய அரசின்

21

## மாநாட்டில் யாரும் பங்கேற்கக் கூடாது தமிழகச் சட்டசபை நேற்றுத் தீர்மானம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பு

சென்னை, நவ.13
இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்தப்படுவது போர்க் குற்றவாளிகளைப் பாதுகாப்பது போல் உள்ளது. எனவே மாநாட்டில் இந்தியா பங்கேற்றால் இலங்கையின் போர்க்குற்றத்தை அங்கீகரித்தது போலாகிவிடும். இலங்கையை அங்கீகரித்த பழி இந்தியாவுக்கு ஏற்படுவதை தமிழர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.
எனவே தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து மத்திய அரசு, மாநாட்டுக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட யாரும் பங்கேற்கக் கூடாது என்றும், இலங்கையைப் பொதுநலவாய அமைப்பிலிருந்து தற்காலிகமாக நீக்க வேண்டும் என்றும் தமிழக சட்டசபையில் நேற்று மாலை தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
தமிழக சட்டசபையில் நேற்று மாலை

21

## தமிழகத்தில் கடையடைப்பு

சென்னை, நவ. 13.
பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கெடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழகத்தில் நேற்றுக் கடையடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. முழுஅளவில் நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தினால் தமிழகத்தின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

21

## யாழ்.– கொழும்பு விமான சேவை 18 ஆம் திகதி வரை நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ.13
யாழ்ப்பாணத்துக்கும் - கொழும்புக்கும் இடையிலான விமான சேவைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
பொதுநலவாய

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உண்மையைக் கண்டறியவே வடக்குக்கு நேரில் வந்தேன்

## முதலமைச்சரை சந்தித்த பின்னர் கனேடிய நாடாளுமன்றச் செயலர்

யாழ்ப்பாணம், நவ.13
இலங்கைப் பிரச்சினை தொடர்பில் ஏற்பட்டுள்ள பல கேள்விகளுக்கு விடை தேட வேண்டியிருந்ததனால் வடக்குக்கு நேரடியாகப் பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இங்கு வந்து நேரடியாகப் பார்த்த போது பல உண்மைகளைத் தெரிந்து கொண்டுள்ளேன். இவ்வாறு தெரிவித்தார் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சுக்கான நாடாளுமன்றச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தீபக் ஒப்ராய்.



பல கேள்விகளுக்கு விடை தேட வேண்டியிருந்ததனால் வடக்குக்கு நேரடியாகப் பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இங்கு வந்து நேரடியாகப் பார்த்த போது பல உண்மைகளைத் தெரிந்து கொண்டுள்ளேன்.

உள்ளூர் விமானப் போக்குவரத்து திடீரென நேற்று முன்தினம் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் ஏ-9 வீதி வழியாக வாகனத்தில் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்துக்கு வந்த தீபக் ஒப்ராய் தலைமையிலான குழுவினர், யாழ்.நகர் விடுதியில் வட மாகாண முதலமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
எம்மைப் பொறுத்தவரை இலங்கைப்பிரச்சினை தொடர்பான கேள்விகளுக்குப் பதில் காணவேண்டியவர்களாகவே இருக்கிறோம். இதற்காகவே வடக்குக்கு நேரடியாகப் பயணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமும் எமக்கு ஏற்பட்டது. தரை வழியாகவே வடக்குக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது.
இங்கு வந்ததன் மூலமாக உண்மை நிலைமைகளை பார்க்கவும் நேரடியாகக் கேட்டறியவும் முடிந்தது. இந்த விடயங்கள் தொடர்பில் விரைவில் கருத்து வெளியிடவுள்ளேன்.
இலங்கையில் சிறந்த நிர்வாகத்துக்குரிய பிரமாணங்களின் அடிப்படையில் நல்லாட்சி நடைபெறுகின்றதா? என்பதை ஆராய்வதே எமது நோக்கம்.
வடக்கு முதலமைச்சருக்குரிய கடப்பாடு, காரியங்கள் மிகவும் பாரதூரமானவை. எதுவாகினும் திறம்படச் செயற்பட வேண்டும்-என்று தீபக் ஒப்ராய் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

## சிறுவர் தடுப்பு இல்லத்தை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், நவ.13
அச்சுவேலியிலுள்ள சிறுவர் தடுப்பு இல்லத்தைப் புனரமைப்பதற்கு சிறுவர், மகளிர் அமைச்சு 1.46 மில்லியன் ரூபா வழங்கியுள்ளதாக வட மாகாண நன்னடத்தைச் சிறுவர் பராமரிப்பு திணைக்கள பணிப்பாளர் ரி.விஸ்வரூபன் தெரிவித்தார்.
குற்றச் செயல்களில் ஈடுபடும் சிறார்களைத் தடுத்து வைத்து வழிப்படுத்தும் இல்லம் அச்சுவேலியில் இயங்கி பின்னர் அரியாலையில் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது.
அச்சுவேலியிலுள்ள இந்தத் தடுப்பு இல்லம் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. அதனைப் புனரமைப்புச் செய்யவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர்நல மேம்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு மன நல டிப்ளோமா கற்கை நெறியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நல்லூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஒன்றரை வருடகால இந்தப் பயிற்சி நெறியை சிறுவர் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த ஆரம்பித்து வைத்தார்.
அந்த நிகழ்விலேயே குறித்த நிதி ஒதுக்கீடு குறித்து விஸ்வரூபன் தெரிவித்தார். (ஐ-4)

## வாகனத்தில் வந்தோரால் கடத்தப்பட்டார் யுவதி

### புன்னாலைக் கட்டுவனில் பரபரப்பு

யாழ்ப்பாணம், நவ.13
இளம் பெண் ஒருவர் நேற்று மாலை இனந்தெரியாதோரால் சன நடமாட்டம் உள்ள இடத்தில் வைத்து வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டார். புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நடைபெற்ற சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.
இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:
புன்னாலைக்கட்டுவன் பலாலி வீதியிலுள்ள ஆயக்கடவை பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் இளம் பெண் ஒருவர் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார். அப்போது எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் அவரை வழிமறித்து கதைக்கத் தொடங்கினார். திடீரென ஒரு வாகனம் அங்கு வந்தது. வாகனத்தில் இருந்தவர்களும் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞரும் சேர்ந்து பல வந்தமாக யுவதியை வாகனத்தில் ஏற்றிக் கொண்டு தப்பிச் சென்றனர்.
வாகனம் முன்னே செல்ல குறித்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் பின்னே சென்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். யுவதி கடத்தப்பட்ட இடத்தில் அவரது சைக்கிள், கைப்பை, கையடக்கத் தொலைபேசி என்பன அநாதரவாகக் கிடந்தன.
இச்சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் சுன்னாகம் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ங-86)

## வெடி விபத்தில் இராணுவ பொலிஸ் காயம்

யாழ்ப்பாணம், நவ.13
முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் இடம்பெற்ற வெடி விபத்தில் இராணுவ பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படு காயமடைந்துள்ளார்.
முல்லைத்தீவு கொக்காவில் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாம் ஒன்றில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் இந்த வெடிவிபத்து இடம்பெற்றுள்ளது.
சம்பவத்தில் குறித்த முகாமில் இராணுவ பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் உபாலி விஜயநாயக்க (வயது 30) என்பவர் காயமடைந்து ஆபத்தான நிலையில் கிளிநொச்சி பொது வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-6)

## பாலாமைகள் மீண்டும் திரும்பின கடலுக்கு

### பிடித்தவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ.13
மண்டைதீவில் சட்டவிரோதமாகப் பிடிக்கப்பட்ட 19 பாலாமைகளும் நேற்றுக் கடலுக்குத் திரும்பின. அவற்றைப் பிடித்தவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.
யாழ்.குருநகரைச் சேர்ந்த 5 பேர் மண்டை தீவுக்குச் சென்று நேற்றுமுன்தினம் கடலில் 19 ஆமைகளையும் சட்டவிரோதமாகப் பிடித்துள்ள னர். பின்னர் அவற்றை ஓட்டோவில் எடுத்துக்கொண்டு திரும்பும் போது கடற்படையினரிடம் மாட்டிக்கொண்டனர்.
கடற்படையினரால் ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ்.மகேந்திரராஜா முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டனர். மன்றில் ஐந்து பேரும் தம் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 2ஆயிரம் ரூபா வீதம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மன்றின் உத்தரவுக்கமைய 19 ஆமைகளும் கடலில் விடப்பட்டன.
(ஐ-

## நாவாந்துறைக்கான பஸ் சேவையை மீள ஆரம்பித்தது யாழ்.மாநகர சபை

### மீன்பிடி அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க

யாழ்ப்பாணம், நவ.13
நாவாந்துறைக்கான பாடசாலை பஸ் சேவை, வட மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனின் வேண்டுகோளுக்கிணங்க மீளவும் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்தார்.
யாழ்.மாவட்ட மீனவ சம்மேளனத்தில் நேற்றுமுன்தினம் மதியம், வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிப மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.
நாவாந்துறைக்கான பஸ் சேவை ஒன்று யாழ்.மாநகர சபையினால் நடத்தப்பட்டதாகவும், அந்த சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை மீள நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.
பிரச்சினையைக் கேட்டறிந்த அமைச்சர் உடனடியாக யாழ்.மாநகர சபை ஆணையாளருடன் தொலைபேசியூடாக தொடர்புகொண்டு பஸ் சேவையை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுத்தார். இதனை ஏற்றுக் கொண்ட ஆணையாளர் சேவையை மீள ஆரம்பிப்பதாக உறுதிமொழி வழங்கினார்.
இதற்கமைய நேற்று முதல் யாழ்.மாநகர சபையினால் குறித்த பாடசாலை பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
மேற்படி நடவடிக்கையை உடனடியாகவே முன்னெடுத்த ஆணையாளருக்கும், முதல்வருக்கும் நன்றியைத் தெரிவிப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ-5)

## இராணுவ வாகனம் மோதியதில் பெண் காயம்

யாழ்ப்பாணம், நவ.13
வீதியோரமாக மோட்டார் சைக்கிளுடன் நின்றிருந்த பெண்ணை இராணுவ வாகனம் மோதி காயப்படுத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது. சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
அல்வாய் மாலி சந்தியில் நேற்றுமுன்தினம் மதியம் 2 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
பாடசாலையில் கற்கும் தனது பிள்ளையை ஏற்றுவதற்காக அந்தத் தாயார் தனது மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். வீதியில் எதிரே இராணுவத்தினரின் ஸ்ரீ19053 இலக்க வாகனம் வந்துள்ளது.
இராணுவ வாகனம் கடந்து செல்வதற்காக குறித்த பெண் வீதி ஓரமாக தனது மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளார். எனினும் வாகனம் அவரை மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. காலில் காயமடைந்த அவர் உடனடியாக நெல்லியடி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறைப்பாடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## விதிமுறைகளுக்கு அமையவே ஆள் சேர்ப்புக்கு விண்ணப்பம்

### அரசியல் தலையீடு இல்லை என்கிறார் முதல்வர்

யாழ்ப்பாணம், நவ.13
சட்ட விதிகளுக்கு அமைவாகவே யாழ்.மாநகர சபையின் வெற்றிடங்களுக்கு ஆள் சேர்ப்புச் செய்யப்படுவதற்கு விண்ணப்பம் கோரப்பட்டது என மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தெரிவித்தார்.
நேற்றுநடைபெற்ற மாநகர சபையின் மாதாந்த கூட்டத்தில் யாழ்.மாநகர சபைக்கான ஆள்சேர்ப்புத் தொடர்பாக விளக்கமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:
மாநகர சபைப் பணியாளர் நியமனம் தொடர்பாக வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் வெளியிடப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையிலேயே பத்திரிகையில் விளம்பரப் படுத்தப்பட்டது. இதில் எவ்வித அரசியல் நோக்கங்களும் இல்லை.
எல்லோருக்கும் நியமனம் வழங்க வேண்டும் என்பதே அனைவரினதும் விருப்பமாகும். அந்த அடிப்படையில் தான் வெளிப்படைத் தன்மையுடன் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்பட்டன. ச[illegible] திட்டங்களை மீறி எதனையும் செய்ய முடியாது.
மாநகர சபையின் எல்லைக்குள் வசிக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்பதே எமது விருப்பம். ஆனால் இதற்கு எதிரணியினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் - என்றார். (ஐ-7-400)

## மருத்துவர் வீட்டில் நல்லூர்ப் பகுதியில் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.13
யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் மருத்துவர் வீட்டில் 30 ஆயிரம் ரூபா பணம் மற்றும் ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
நாவலர் வீதி, கைலாச பிள்ளையார் கோயிலை அண்மித்துள்ள மருத்துவரின் வீட்டிலேயே கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் திருட்டு இடம்பெற்றுள்ளது.
அன்றைய தினம் சூரன் போர் என்பதனால் பிற்பகல் 4 மணிக்கு வீட்டார் அனைவரும் கோயிலுக்குப் புறப் பட்டுச் சென்று பிற்பகல் 5.30 மணிக்கு வீட்டுக்கு திரும்பியுள்ளனர்.
குறித்த இடைவெளியில் வீட்டின் பின் கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் இலத்திரனியல் பொருள்கள் பலவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் கைரேகைகளைப் பதிவு செய்து சென்றுள்ளனர் - என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ -4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாட்டிறைச்சி அழிப்பு

நவாலி,நவ.13

நவாலி பிரசாத் சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக் கடையில் சட்ட விரோதமாக விற்பனைக்கு வைத்திருந்த 22 கிலோ மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இ.சோதீஸ் தலைமையிலான குழு திடீரென மேற்கொண்ட பரிசோதனையில் அனுமதி பெறாமல் விற்பனைக்கு வைத்திருந்த இறைச்சி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டது. (வ-100)



# போருக்கான நோக்கம் இதுவரை நிறைவேறவில்லை

### கனேடிய நாடாளுமன்றச் செயலாளருடனான சந்திப்பில் ஆயர் கருத்து



யாழ்ப்பாணம், நவ.13

எதனை எதிர்பார்த்து போர் நடந்ததோ அந்த எதிர்பார்ப்பு இன்னும் நிறைவேற்றப்படவில்லை. உரிமைகளும் வழங்கப்படவில்லை என்று சர்வதேச மனித உரிமைகள் மற்றும் வெளி விவகாரம் ஆகியவற்றுக்கான கனேடிய நாடாளுமன்றச் செயலாளர் தீபக் ஒப் ராயிடம் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

வடக்குக்கு நேற்று பயணம் மேற்கொண்ட தீபக் ஒப்ராய் ஆயர் இல்லத்தில் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அவருடன் இலங்கைக்கான கனேடியத் தூதர் உட்பட சில அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

வடக்குக்குப் பயணம் செய்யவுள்ளதாகத் திட்டமிட்டிருந்த நிலையில் உள்ளூர் விமான சேவை திடீரென நேற்று முன்தினம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதனால் ஏ-9 வீதி வழியாக வாகனத்திலேயே வடக் குக்கு பயணம் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும்நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக் கையில் குறிப்பிட்டதன்படி நிறைவேற் றப்படவேண்டிய பல செயற்பாடுகள் தற்போது எந்த நிலையில் உள்ளன?, எதற்காக காலம் கடத்தி வருகின்றனர்.?, காணாமற் போனோர் தொடர்பில் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எமக்கான உரிமைகள் மறுக்கப்படுகின்றனவா என்பன உட்பட வடக்கில் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை அறிந்து கொள்வதற்காகவே வடக்குக்கு பயணம்மேற்கொண்டேன். இந்தியாவும் பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணிப்பது தமது நிலைப் பாட்டை உறுதிப்படுத்துகிறது.

இந்த நிலையில் பொதுநலவாய மாநாட்டுக்கான தலைமைத்துவத்தை இலங்கைக்குக் கொடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதனால்தான் கனேடியப் பிரதமர் அதில் கலந்து கொள்ளவில்லை என்று தீபக் ஒப்ராய் தெரிவித்தார்.

இதேவேளை போர்க் காலத்தில் என்ன நடந்தது, எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்பது உட்பட பல விடயங்கள்தெரியாமல்உள்ளன. சமயங்களுக்கிடையிலான முறுகல் நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. என்று யாழ்.ஆயர் தீபக் ஒப்ராயிடம் தெரிவித்தார். (வ-4)

### சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இடவசதி இருந்தும்

# வாகனங்களால் சிரமம் பயணிப்போர் விசனம்

தென்மராட்சி, நவ .13

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் போதியளவு இடவசதி இருந்த போதிலும் முந்திச் செல்ல முற்படும் வாகனங்களால் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் செயற்பாடுகள் தினமும்இடம்பெற்றுவருகின்றன.

சாவகச்சேரி நகரசபையால் பஸ் நிலையம் அமைக்கப்பட்டு பயணிகள் வாகனங்களில் ஏறிச் செல்லக் கூடிய கட்டட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியூடாகச் செல்லும் இ.போ.ச.பஸ்களும், தனியார் பஸ்களும் அவற்றுக்குரிய தரிப்பிடக் கட்டடத்துக்குள் நிறுத்தப்படாமல் வாகனங்கள் செல்வதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வரிசையில் நிறுத்தப்படுகின்றன. இதனால் பஸ் நிலைய் வீதியில் மக்கள் செல்ல முடியாத நிலை ஏற்படுகிறது. அத்துடன் பஸ் நிலையத்தில் வாகனத்தில் இருந்து உயர் அழுத்த ஒலி எழுப்புவதால் அந்தப் பகுதியில் நிற்கும் பொதுமக்களுக்கு அது பாதிப்பை ஏற்படுத்துகிறது.

இவற்றைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து வருகை தரும் அனைத்து பயணிகள் வாகனங்களையும் உரிய தரிப்பிடக் கட்டடத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றிச் செல்ல பொலிஸாரும் தென்மராட்சி தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினரும் சாவகச்சேரி நகர சபையினரும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை பஸ் நிலையக் கட்டடத்துக்கு வெளியே பஸ்களை நிறுத்தி பயணிகளை ஏற்றிச் செல்லவேண்டும் எனவும் கட்டடத்துக்கு வெளியே நிறுத்தும் பயணிகள் வாகனத்துக்கு குற்றப்பணம் அறவிடப்படும் என தென்மராட்சி தனியார் பஸ் சேவைகள் சங்கத்தினர் தமது சங்க அங்கத்தவர்களுக்கு அறிவித்த போதிலும் அதனை செவிமடுப்பதாக தெரியவில்லை எனவும் தெரிவித்தனர்.

வாகனங்கள் உயர் அழுத்த ஒலி எழுப்புவதால் பஸ் நிலைய சுற்றாடலில் உள்ள வர்த்தக நிலையங்கள், சந்தையில் நிற்போர் அசௌகரியம் ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். (வ)

## 150 இந்திய மீனவர்கள் 2013 இல் இதுவரை கைது

கொழும்பு, நவ.13

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 32 இழுவைப் படகுகளுடன் 150 இந்திய மீனவர்கள் இந்த வருடம் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியக் கடல் எல்லையில் இருந்து இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கண்காணித்து வரும் நிலையில் இந்த வருடம் இதுவரை 150 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் பாரப்படுத்தப்பட்டனர். கைது செய்யப்பட்ட மீனவர்கள் விடுதலை செய்யப்பட்ட போதும் இழு வைப் படகுகளை மீனவர்களுக்கு அவை வழங் கப்படாமல் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

இழுவைப்படகுகளைப் பாவிப்பதால் கடல் வளங்கள் பெரிதும் பாதிப்படைவதுடன் குடாநாட்டு மீனவர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். இதனைத் தடுத்து நிறுத்தும் நோக்குடனேயே படகுகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன - என்றார். (த-14)

### மேட்டு நிலச் செய்கைக்காக

# நீர்ப் பம்பி மூலம் குளத்திலிருந்து நீர்

### விவசாயத் திணைக்களம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.13

மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கான நீரை குளத்திலிருந்து நீர்ப் பம்பி ஊடாகப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை நீர்பாசனத் திணைக்களத்துடன் இணைந்து விவசாயத் திணைக்களம் மேற்கொண்டு வருவதாக வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஹால்டின் தெரிவித்துள்ளார்.

மேட்டு நிலப் பயிர்ச் செய்கைக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாமைக்கு முன்னாயத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பெரிய குளங்களில் இருந்து நீர்ப் பம்பிகளைப் பயன்படுத்தி விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பெற்றுக் கொடுப்பதற்கு ஏதுவாக இந்தத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேட்டு நிலப் பயிர்ச் செய்கை அதிகளவு முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் முதற் கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைவிட ஏனைய மாவட்டங்களில் நீர்பாசனக்குளங்கள், கால்வாய்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)

### இரணைமடு குளத்து நீரை வழங்கக் கோரி

# குடாநாட்டில் கையெழுத்து வேட்டை



யாழ்ப்பாணம், நவ.13

குடிப்பதற்கு நன்னீர் வசதியின்றி அல்லலுறும் யாழ். குடா நாட்டு மக்களுக்கு இரணை மடு குளத்து நீரை வழங்குவதற்காக வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும்- ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இணைந்து நல்ல தீர்வை வழங்க வேண்டும்.

இதற்காக வலி.தென்மேற்கில் உள்ள பொது அமைப்பு ஒன்று குடாநாடு முழுவதும் 10 ஆயிரம் கையெழுத்துக்களைப் பெற்று அனுப்புவதற்கான பணியை ஆரம்பித்துள்ளது.

அத்துடன் யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் மற்றும் உள்ளூராட்சி சபை பிரிவுகள் ஆகியவற்றிலுள்ள மக்களிடத்தும் கையெழுத்து திரட்டும் பணி இடம்பெற்று வருகிறது.

யாழ்.மாவட்டத்தின் பெரும்பாலான பிரதேசங்கள் வறட்சியாலும் ஏனைய பிரதேசங்கள் நிலத்தடி நீர் மாசுபட்டும் மலக்கழிவு கலந்தும் நைதரசன் அளவு அதிகரித்த நிலையிலும் முற்று முழுதாக குடி தண்ணீர் பாதிப்படைந்துள்ளது.

இதனைவிட வலிகாமத்துக்கு சுன்னாகத்தில் இருந்து குழாய் மூலம் வழங்கப்பட்ட குடிதண்ணீர் கழிவு ஒயில் கலந்துள்ளது. இதனால் வலிகாமத்துக்கான குழாய் நீர் விநியோகம் முற்றாகப்பாதிக்கப்பட்டுள்ளது. தீவகப் பிரதேசம் கடும் வறட்சியால் தற்போது சொல்லொணா துயரங்களை மக்களும் அரச நிறுவனங்களும் எதிர்கொள்கின்றன.

எனவே, கிளிநொச்சி மாவட்ட மக்களையும், விவசாயிகளையும் பாதிக்காத வகையில் தொப்புள் கொடி உறவு கொண்ட யாழ். குடாநாட்டு மக்களுக்கு உங்களின் மேலதிக நீரை வழங்குவதற்கு வழி செய்யுமாறு கோரியே ஜனாதிபதிக்கும் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும்ஏனைய உயர்மட்ட பிரதிநிதிகளுக்கும் 10 ஆயிரம் கையெழுத்துக்களுடன் விண்ணப்பம் அனுப்பி வைக்க மக்களின் கையெழுத்து பெறும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (வ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் ஆற்றுப்படுத்துதல் தொடர்பான கருத்தமர்வு



ஆற்றுப்படுத்தல் தொடர்பான விழிப்பூட்டும் கருத்தமர்வு ஒன்று மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. மன்னாரில் இயங்கிவரும் மாற்றாற்றல் உள்ளோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஓர் அலகான பெண்கள் வள நிலையம் இதனை ஏற்பாடு செய்து நடத்தியது.

கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் தன்னார்வத் தொண்டுப் பணிகள், மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபடுபவர்களை வலுப்படுத்தும் நோக்குடன் இது இடம்பெற்றிருக்கிறது.

குடும்பம், சமூகம், பெண்கள், பால், பால்நிலை மற்றும் அவற்றுடன் தொடர்புடையதான சட்டங்கள் குறித்து இதில் தெளிவுபடுத்தப்பட்டது.

பெண்கள் வள நிலையத்தின் உளவள ஆற்றுப்படுத்துநர் திருமதி ஜெசி அரியரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆற்றுப்படுத்தல் கருத்தமர்வில் சட்ட உதவி ஆணைக் குழுவின் திட்ட உத்தியோகத்தர் எஸ். டினேஷ் வளவாளராகக் கலந்து கொண்டு உரிய விளக்கங்களை வழங்கினார். (சுரி)

# இ. போ. ச. பணியாளர் 92 பேருக்கு இன்று பணிக் கொடை

யாழ்ப்பாணம், நவ.13

இலங்கை மத்திய போக்குவரத்து சபையில் வேலை செய்து இளைப்பாறியவர்களுக்கான பணிக் கொடைக் கொடுப்பனவு இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். மாவட்ட தொழில் திணைக் களத்தில் வைத்து வழங்கப் படவுள்ளது.

காரைநகர் டிப்போவைச் சேர்ந்த என். சுந்தரலிங்கம், வி. தர்மபாலா, ஜி. ஹென்ரி, ரி. சிவராஜா, எஸ். ஜெயபாலன், எம்.குணரட்ணம், எஸ். செல்வராசா, எஸ் சிறிதரன்.ரி. குலநாயகம், ரி. ஸ்ரீஸ்கந்தராஜா.எஸ். சிவகுருநாதன், சி. ரி ஜெகநாதன், எ. பரமானந்த சிவம், கே.நரேந்திரன், சி. கந்தசாமி, எம். திசைநாதன் ஆர். அமுதசிங்கம், என். யோகநாதன் ஆகியோருக்கும்-

பருத்தித்துறை டிப்போவில் கே. எ. செல்வநாயகம்,கே. காந்தசபேசன், எ. சந்திரசேகரம், எஸ்.பரமேஸ்வரன், ஜி. பொன்னம்பலம், ரி. தேவநேசராசலிங்கம், பி. யோகராஜா,கே. ஞானகேந்திரன்,எ. தர்மதேவா, ரி. யோகநாதன்,ரி. ஞானேஸ்வரன், எம். பரம்ஜோதி, ஆர். செல்வகதிரமலை, கே. சின்னையா, ஆர். வசந்தகுமார்.கே. பரமசாமி, எம். சிவரட்ணம் ஆகியோருக்கும்-

யாழ்ப்பாண டிப்போவைச் சேர்ந்த ஐ. செல்வரட்ணம்,கே. சண்முகம், என். சுந்தரமூர்த்தி,ஷ. ரங்கநாதன், கே. சிவஞான சுந்தரம், ஆர். கணேசன், என். துரைரத்தினம், கே. தங்கராஜா, எம். அழகரத்தினம், எஸ். மதியாபரணம், கே. சிவராஜா, கே. நேசரட்ணம், எஸ். ஸ்ரீதரன், எஸ். ஜெயகுமார், எம். மகேஸ்வரன், கே. கோகுலமுருகேசுலிங்கம், கே. குணராஜா.-

ஏ.ஏ.தங்கராஜா, வி. கதிர்காமநாதன், ஐ. பத்மநாதன், பி. சிவஞானவேல், ரி. தர்மகுலசிங்கம், எ. அன்றுவ், கே. சிவராஜா, கே. சண்முகலிங்கம், கே. ஸ்ரீபஞ்சலிங்கம், ஆர். ராஜேந்திரம், ஆர். கனகசபை, எம். சிவசுப்பிரமணியம், வி. நாகராஜ். பி. சிவராஜசிங்கம், ஐ. துரைரத்தினம், எஸ். யோகராஜா. கே. யோகரட்ணம், -

எஸ். செல்வரட்ணம், வி. கிருஸ்ணராஜா, எம். செல்லத்துரை. ஆர். குணரட்ணம், எம். மிசியஸ், எ. அரிசிவகுமார், எ. செல்வராஜா, எஸ். தவரட்ணம், சி. தெய்வேந்திரா, எம். இந்திரகுமார்,ஈ. லோகநாதன்,கே.தனபாலசிங்கம்- எம். மகேந்திரன், என். மகேந்திரன், ஆர். ஸ்ரீபவன், ரி. தன்பாலசிங்கம்,கே. கனகேசன், ஆர். இராஜநேசராஜன், எ. குமாரலிங்கம், எஸ். சிவகுமார், எஸ். தேவரங்கன், எஸ். நல்லதம்பி, வி. வில்வமூர்த்தி ஆகியோருக்கும் இந்தப் பணிக்கொடை கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தேசிய அடையாள அட்டை மற்றும் 25 ரூபா முத்திரையுடன் திணைக்களத்துக்கு வருகை தந்து கொடுப்பனவை பெற்றுக் கொள்ளுமாறு உதவித் தொழில் ஆணையாளர் திருமதி ஆர்த்தி தவநாதன் அறிவித்துள்ளார். (ஒ-14)

# மாந்தை கிழக்குப் பகுதியில் புனரமைக்கப்படாத 171 வீதிகள்

முல்லைத்தீவு, நவ. 13

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள 171 வீதிகள் புனரமைக்கப்படாமையால் இவற்றைப் பயன்படுத்தும் 2 ஆயிரத்து 698 குடும்பங்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிர தேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளில் அமைந்துள்ள சுமார் 71 கிராமங்களில் உள்ள பெரும்பாலான வீதிகள் கடந்த முப்பதுவரு டங்களுக்கும் மேலாக புனர மைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

“ சுமார் 71 கிராமங்களில் உள்ள பெரும்பாலான வீதிகள் கடந்த முப்பது வரு டங்களுக்கும் மேலாக புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

வீதி அபிவிருத்தித் திணைக் களத்துக்குரிய பாண்டியன் குளம்- வவுனிக் குளம் வீதி, கிடாய்பிடித்தகுளம் வீதி, கொம்புவைத்தகுளம் வீதி, இராமையன்கல் வீதி, ஒட் டறுத்தகுளம் வீதி, மூன்று முறிப்பு வீதி ஆகியன உட்பட ஒன்பது வீதிகளில் இதுவரை புனரமைப்புப் பணிகள் இடம்பெறாத நிலையே காணப்படுகின்றது. இந்தப் பிரதான வீதிகள் யாவும் குன்றும் குழியுமான நிலையிலேயே காணப்படுகின்றன. இதனைவிட மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான 185 வீதிகளில் 23 வீதிகள் மாத்திரமே இது வரை புனரமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பிரதேச சபைக்குச் சொந்தமான 162 வீதிகளும், வீதி அபிவிருத்தித் திணைக் களத்துக்குரிய 9 வீதிகளுமென மொத்தமாக 171 வீதிகள் இதுவரை புனரமைக்கப்படவில்லை. இதனால் இந்தப் பிரதேசத்தில் வாழும் சுமார் 2 ஆயிரத்து 698 வரையான குடும்பங்கள் தமது அன்றாடப் போக்குவரத்தில் இடர்களை எதிர் கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. (க-6)

# சுகிர்தனுக்கு மீண்டும் அச்சுறுத்தல்

வலி.வடக்கு மக்களின் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நிறுத்த வேண்டும் என வலி.வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் சோ. சுகிர்த்தனுக்கு மீண்டும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வலி.வடக்கு மக்களால் இராணுவத்தின் நில அபகரிப்புக்கு எதிராக மாவிட்டபுரத்தில் உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போராட்டத்தை நிறுத்துமாறு வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தனுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. அத்துடன் அவரது வீட்டின் முன்பாக மாட்டுத் தலையும் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மீண்டும் திங்கட்கிழமை இரவும் தொலை பேசியூடாக அவருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (த-5)


## மரண அறிவித்தல்

**திருமதி சிவலிங்கம் புவனேஸ்வரி**

மாப்பாணை ஊரி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது இணுவில் வீதி, சுதுமலை வடக்கு மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் புவனேஸ்வரி நேற்று (12.11.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் வீதி,
சுதுமலை வடக்கு மானிப்பாய்.

தகவல்:
பிள்ளைகள்.
077 9671905, 077 5301154

(40068)(14.8)


# உப அலுவலகத்தின் முன்பாக பற்றைகள்

## கவனிக்காத பிரதேச சபையினர்

சாவகச்சேரி, நவ. 13

டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் சாவ கச்சேரி பிரதேச சபையினருக்கு சரசாலை பிரதேச சபையின் உப அலுவலகத்துக்கு முன்பாக பெரியளவில் பற்றைகள் வளர்ந்திருப்பது தெரியவில்லையா? இவ்வாறு சரசாலைப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பிரதேச சபையினர் சரசாலைப் பகுதியில் அமைந்துள்ள குடியிருப்பாளர் வளவுகளுக்குள் சிறு செடிகள் காணப்பட்டால் கூட டெங்கு நுளம்பு உற்பத்திக்கு வாய்ப்பு வழங்குவதாக வழக்குப் பதிவு செய்யப் படும் எனப் பயமுறுத்துகின்றனர்.

இந்த நிலையில் சரசாலை அலுவலகத்துக்கு முன்பாகக் காணப்படும் அடர்ந்த பற்றையை துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்காதது குறித்து இப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். (வ)


## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.



## மரண அறிவித்தல்



**சின்னத்தம்பி இராமகிருஷ்ணன்**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், பள்ளகமம் முருங்கனை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராமகிருஷ்ணன் நேற்று (12.11.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் லூர்த்தம்மாவின் அன்புக்கணவரும் மனோறஞ்சன் (கனடா), உதயராணி ஆகியோரின் அன்புத்தந்தையும் குறையன்பன், றஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் மனோஜினி (கனடா), பிரதீபா (கனடா), யதுஸ் (கனடா), தர்மிஹா, தரன்ஷிஹா, தர்மிலன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பள்ளகமம், முருங்கன்.

தகவல்:
குடும்பத்தினர்

(40068)(14.8)



## மரண அறிவித்தல்

**பொன்னையா தர்மலிங்கம் (குட்டிக்கிளி)**



சோறாம்புலம், பொலிகண்டியினை பிறப்பிடமாகவும் ஆலடி ஒழுங்கை, பொலிகண்டியினை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தர்மலிங்கம் (குட்டிக்கிளி) நேற்று (12.11.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் அன்னராணியின் அன்புக் கணவரும் பிருந்தா (ஆசிரியர் தொண்டைமானாறு வீரகத்தி பிள்ளை வித்தியாலயம்), லாவண்யா, பிரசன்னா (லண்டன்), பீரதீபா (ஆசிரியர் யோகபுரம் மகாவித்தியாலயம்), முத்துநிலா, பிரதாப், நிருத்திகா, கீர்த்தன் (மாணவன் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அரிகரன், ராஜேஸ்வரன், சுசிந்திரன் (வைத்தியர்) ஆகியோரின் மாமனும் சிறிராம், டிலக்ஸ்மன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2013) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணிக்கு ஊறணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடி ஒழுங்கை,
பொலிகண்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(40068)(14.8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெயந்தி நகர் கொலை; ஆறு பேருக்குப் பிணை

யாழ்ப்பாணம், நவ.13

கிளிநொச்சி ஜெயந்தி நகரில் ஒருவரை மொட்டையான ஆயுதத்தால் அடித்துக் கொலை செய்த குற்றச்சாட் டில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 6 பேர் யாழ்.மேல் நீதிமன்றி னால் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இவர்கள் தொடர்பான பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு பிணை அனுமதி வழங் கப் பட் டது.

கடந்த ஜனவரி மாதம் 14 ஆம் திகதி ஜெயந்தி நகரைச் சேர்ந்த கணபதி செல்வரத்தினம் என்பவர் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்தவர்களான கந்தசாமி கஜந்தன், கந்தசாமி பூவேந்தன், கந்தசாமி ஷயந்தன், பால சுப்பிரமணியம் மோகன தாஸ், நவரட்ணடம் சந்திர சுரேஷ், நவரட்ணம் சந்திரகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டுக் கிளிநொச்சி நீதிமன்றினால் கடந்த ஜனவரி தொடக்கம் இவர்கள் விளக் கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையிலேயே நேற்று முன்தினம் இவர்களின் பிணை விண்ணப்பம் பரீசீலிக்கப்பட்டு பிணை அனுமதி வழங்கப்பட்டது.

இதன் படி ஒவ்வொருவரும் தலா 50 ஆயிரம் ரூபா ரொக் கப்பிணையிலும், தலா ஒரு இலட்சம் ரூபா பெறு மதியான இரண்டு ஆள் பிணையிலும் செல்ல அனு மதிக்கப்பட்டனர். (கு-4)

மாணவர் பிரச்சினையைக் கண்டறிய

## பொலிஸார் சிவில் உடையுடன் பாடசாலைகளில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், நவ.13

பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் இடையூறுகள் தொடர்பில் கண்டறிவதற்காக பொலிஸார் சிவில் உடையுடன் பாடசாலைகளில் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முதற் கட்டமாக யாழ். பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளில் இந்தச் செயற்றிட்டம் மேற்கொள் ளப்பட்டு வருவதுடன் ஏனைய 17 பொலிஸ் பிரிவு களிலும் இதனை நடை முறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் இடம்பெறும் பெரிய குற்றங்கள், பாடசாலை செல்லும் வழியில் இடம் பெறும் இடையூறுகள் தொடர்பில் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பாடசாலை செல்லும் மாணவிகளுக்கு வழியில் இளைஞர்களால் ஏற்படுத் தப்படும் இடையூறுகளைப் பொலிஸார் நேரடியாகக் கண்காணித்து வருகின்றனர். அத்துடன் வீதியில் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய வாகன நெரிசல் காரணமாகத் தாமதிக்கும்பயணத்தை இலகுபடுத்துவதுடன் பாதுகாப்புக் கடமையிலும் ஈடுபடவுள்ளனர். (வ-14)

## கைதாகிய இருவரும் பிணையில்

தென்மராட்சி, நவ. 13

இராணுவத்தினர் பயன்படுத்தும் தகரப் பெட்டிகளை வாகனத்தில் கொண்டு சென்ற புத்தளத்தைச் சேர்ந்த இருவரைக் கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இருவரையும் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது தலா 50 ஆயிரம் பெறுமதியான ஆள் பிணையில் செல்ல நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது. (வ-9)

# சுதேச வைத்திய முறையில் மீண்டும் ஐரோப்பிய மருந்து

அச்சுவேலி,நவ.13

சுதேச வைத்திய சிகிச்சையில் ஐரோப்பிய மருந்து வகைகளைப் பயன்படுத்தும் நடைமுறை மீண்டும் பின்பற்றப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில தனியார் ஆயுள் வேத மற்றும் சுதேச வைத்தியர்கள் மறைவிடங்களில் ஐரோப்பிய ஆங்கில மருந்து வகைகளை இரகசியமாக நோயாளருக்கு வழங்கி வருவது கண்டறியப்பட்டுள்ளது.

தனித்துவமான ஆயுள் வேத- சுதேச மருத்துவத்தில் ஐரோப்பிய-ஆங்கில மருத்துவ வகைகளைக் கலப்பது சுதேச வைத்திய முறையை பாதிப்புக்கு உள்ளாக்குவதோடு நோயாளருக்குப் பக்கவிளைவையும் ஏற்படுத்துவதால் தனித்துவமான முறையில் ஆயுள் வேதபாரம்பரியத்தைப் பேணுமாறு தனியார் ஆயுள்வேத, சுதேச வைத்தியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதோடு கண்காணிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

கண்காணிப்பின் போது ஆயுள்வேத-சுதேச மருத்துவர்களிடம் இருந்து ஆங்கில-ஐரோப்பிய மருந்து வகைகள் கைப்பற்றப்பட்டதுடன் அவர்கள் எச்சரிக்கப் பட்டனர். சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இந்த வகையில் எச்சரிக்கைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

கலப்பட வைத்தியமுறை குறைவடைந்த போதிலும், மீண்டும் சில வைத்தியர்களால் அத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதால் சம்பந்தப்பட்டவர்கள் கண்காணிப்புக்கு உள்ளாக்கப் பட்டிருப்பதாகச் சுதேச வைத்தியத் திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்-தார்.

குறித்த வைத்தியத்துறையில் கலப்பட சிகிச்சை முறை தொடர்பாக ஒய்வு நிலை சுதேச வைத்திய திணைக்கள ஓய்வு நிலையப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்:

"ஆயுள்வேத-சுதேச வைத்தியத்தில் அரிய மூலிகைகள், மருந்துகள் இருக்கும் போது ஆங்கில மருந்து வகைகளைப் பயன்படுத்தி ஆயுள் வேத -சுதேச வைத்தியர்கள் நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பது துறைசார் நிலையில் ஏற்றுக்கொள்ள முடியாதது. சம்பந்தப்பட்டவர்கள் வருவாயை நோக்காகக் கொண்டு ஆயுள்வேத மருத்துவ பாரம்பரியத்துக்கு துரோகம் இழைக்கின்றனர்" எனக் கூறினார். (வ-11)

## நாவாந்துறை அம்மன் ஆலயத்தில் திருட்டு



யாழ்ப்பாணம், நவ.13

நாவாந்துறை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் வைக் கப்பட்டி ருந்த 60 ஆயிரம் ரூபாபெறுமதியான மணிகள் மற்றும் பித்தளைப் பொருள்கள் இனந்தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்றது.

நன்கொடையாளர்களால் ஆலயத்துக்கு பெறுமதிமிக்க பொருள்கள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் இனந் தெரியாத நபர்கள் உள் நுழைந்து பொருள்களை ஓரிடத்தில் குவித்து அவற்றை எடுத்துச் செல்ல ஆயத்தமாகிய போது சன நடமாட்டத்தை அவதானித்தால் கண்டதையடுத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மணிகள் மற்றும் பித்தளைப் பொருள்களை மட்டும் எடுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.

கடற்றொழிலுக்குச் செல்ல ஆயத்தமான அந்தப் பகுதி தொழிலாளர்கள் அதனைக் கண்டு ஆலயத்துக்குள் சென்று பார்த்தபோது பெறுமதிமிக்க பொருள்கள் ஆலயத்தில் ஓரிடத்தில் குவிக்கப்பட்டிருப்பதைக் கண்டனர்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. (வ-14)

## நடமாடும் பற்சிகிச்சை முகாம்

தென்மராட்சி, நவ.13

தென்மராட்சி கிழக்குப் பிரதேச கொடிகாமம், எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 7இற்கு உட்பட்ட வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான நடமாடும் பற்சிகிச்சை முகாம் சுகாதாரப் பகுதியினரால் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

பிரதேசத்தில் இயங்கும் 15 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான நடமாடும் பற்சிகிச்சை முகாம் எதிர்வரும் 23ஆம் திகதி வரை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, உசன் இராமநாதன் ம.வி., மிருசுவில் றோ.க. த.க.பாடசாலை ஆகிய நிலையங்களில் நடத்தப் படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான டிப்ளோமா ஆரம்பம்



யாழ்ப்பாணம், நவ.13

நல்லூர் பிரதேச செயலகத்தில் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி நேற்று முன்தினம் திங்கட் கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் அமைச்சு அதிகாரிகள் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். முன்னதாக நல்லூர் பிரதேச செயலகத்தில் சிறுவர் செயலகத்தையும் அமைச்சர் திறந்து வைத்தார். (வ-7)

## மாணவர் கௌரவிப்பு

தென்மராட்சி, நவ. 13

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் கடந்த தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பும், மருத்துவர் எஸ்.அம்பிகைபாகனால் வழங்கப்பட்ட பாடசாலைப் பெயர் வளைவு திறப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு இடம் பெறும்.

பாடசாலை அதிபர் திருமதி சி.கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்து கொள்வார். (வ-9)

## கலைமன்ற கலாசார மண்டபம் மீண்டும் மக்கள் பாவனைக்கு

தென்மராட்சி, நவ.13

தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபம் பத்து மாதங்களின் பின்னர் மீண்டும் பொதுமக்களின் பாவனைக்காக வழங்கப்படவுள்ளது. நிர்வாகத்தினர் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக குறித்த மண்டம் கடந்த பத்து மாதங்களாகப் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வழங்கப் படாமல் மூடப்பட்டிருந்தது.

குறித்த மண்டபத்தை பொதுமக்கள் பாவனைக்கு விடக் கோரிச் சாவகச்சேரி நகர சபையினர் மேற்கொண்ட முயற்சியின் பயனாகக் கலைமன்றத்துக்கான நிர்வாகிகள் தெரிவு நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

கூட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக மீண்டும் க.மோகனராஜலிங்கம் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக கு.பிரணவனும் பொருளாளராக கா.சற்குணதேவனும் மேலும் 12 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

கலைமன்ற கலாசார மண்டபம் மீண்டும் பொது மக்கள் பாவனைக்கு வழங்கப்படுமென தலைவர் க.மோகனராஜலிங்கம் தெரிவித்தார். (வ-9)

"-"

நிர்வாகத்தினர் இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக குறித்த மண்டம் கடந்த பத்து மாதங்களாகப் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வழங்கப் படாமல் மூடப்பட்டிருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரமிக்க சீக்கியர்களில் மன்மோகனுக்கு முதலிடம்

புதுடில்லி, நவ.13
உலகின் மிகவும் அதிகாரமிக்க சீக்கியர்கள் பட்டியலில் பிரதமர் மன்மோகன் சிங் முதலிடத்தைப் பிடித்துள்ளார். உலகின் மிகவும் அதிகாரமிக்க சீக்கியர்கள் பட்டியல் லண்டனில் வெளியிடப்பட்டுள்ளது.
அந்தப் பட்டியலில் பிரதமர் மன்மோகன் சிங் முதலிடத்தை பிடித்துள்ளார். அத்துடன் அவர் ஒரு சிறந்த சிந்தனையாளர், அறிஞர் என்று பாராட்டப்பட்டுள்ளார்.
பஞ்சாப் முதல்வர் பர்காஷ் சிங் பாதலுக்கு இந்த பட்டியலில் நான்காவது இடம் கிடைத்துள்ளது. மூன்றாவது இடத்தில் சீக்கிய தலைவரான ஜாதேதர் சிங் சாஹிப் கியானி குர்பசன் சிங் உள்ளார்.
பிரதமர் மன்மோகன் சிங்கின் மனைவி குர்ஷரண் கௌர் அதிகாரமிக்க சீக்கியர்கள் பட்டியலில் 13வது இடத்தைப் பிடித்துள்ளார்.
உலகின் மிகவும் அதிகாரமிக்க சீக்கியர்கள் பட்டியலில் பிரபல பத்திரிகையாளரும், எழுத்தாளருமான குஷ்வந்த் சிங் 22ஆவது இடத்தில் உள்ளார்.
கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங்கிற்கு அதிகாரமிக்க சீக்கியர்கள்பட்டியலில்28ஆவது இடம் கிடைத்துள்ளது. (ற)



இந்தியாவின் கேரள மாநிலத்தில் அமைந்துள்ள புராதன கேரள கலைகளை விவரிக்கும் அருங்காட்சியகத்துக்கு பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் மற்றும் அவரது மனைவி கமிலா ஆகியோர் நேற்றுமுன்தினம் வருகை தந்தனர். அவர்களுக்கு கதகளி நடனக் கலைஞர்கள் 'நரகாசுரவதம்' காட்சிகளையும், களறிபயட்டு கலைஞர்கள் தங்களது திறமைகளையும் வெளிக்காட்டி மகிழ்வித்தனர்.

## புதுடில்லியை உலுக்கிய நிலநடுக்கம்

புதுடில்லி, நவ.13
இந்தியத்தலைநகர் புதுடில்லியில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நேற்றுப் பின்னிரவு 12.41 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 3 புள்ளிகளாக பதிவானது.
இந்தநிலையில் தொடர்ந்து 2ஆவது முறையாக சரியாக ஒருமணி நேரம் கழித்து பின்னிரவு 1.41 மணிக்கு மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 3.3 புள்ளிகளாக பதிவாகியது.
மிதமான இந்த இரு நிலநடுக்கங்களால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. (ற)

# பிரதமரின் அதிரடியால் இலங்கைக்கு அதிர்ச்சி

## கூறுகின்றார் ஜி.கே.வாசன்



சென்னை, நவ.13
பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொள்ளாதமை இலங்கை அரசுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளார் இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன்.
ஜப்பானுக்கு உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த ஜி.கே. வாசன் நேற்றுமுன்தினம் இந்தியா திரும்பினார். அப்போது விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"பொதுநலவாய மாநாட்டுக்கு இந்தியப் பிரதமர் செல்லாமல் இருப்பது வரவேற்கத்தக்கது. அது இலங்கைக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும். பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை செல்வதால் மீனவர் பிரச்சினை மற்றும் இலங்கை தமிழர் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசமுடியும்" என்று தெரிவித்துள்ளார்.
ஜப்பான் பயணம் குறித்து செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த வாசன்,
"தூத்துக்குடி வெளித்துறைமுக நிர்மாணப் பணிகளுக்கு ஜப்பானிடம் கடனுதவி கேட்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள துறைமுகங்களின் வளர்ச்சிக்கு ஜப்பானின் உதவி கோரப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## மோடியின் செல்வாக்கை கணக்கிடுகின்றது அமெ.

புதுடில்லி, நவ.13
நரேந்திர மோடியின் செல்வாக்கை அறிந்துகொள்வதில் அமெரிக்கா தனது கவனத்தைத் திருப்பியுள்ளது என்று கூறப்படுகின்றது.
2002ஆம் ஆண்டு நடைபெற்ற குஜராத் கலவரத்தை அடுத்துமோடிமீது அமெரிக்கா கடும் வெறுப்புப் கொண்டிருந்தது. மதவாதி மோடி என்றெல்லாம் அவர் மீது விமர்சனங்கள் எழுந்தன.
அதனால் மோடிக்கு எந்த வகையிலும் அமெரிக்காவுக்குள் நுழைய விசா வழங்கக் கூடாது என்று அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் வலியுறுத்தி வந்தனர்.
ஆனால் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளராக மோடி முன்னிலைப் படுத்தப்பட்டபின் பா.ஜவின் செல்வாக்கு சற்று அதிகரிக்க ஆரம்பித்து விட்டது. அதையடுத்து அமெரிக்காவும் மோடி மீது சற்றுக் கவனத்தைத் திருப்ப ஆரம்பித்து உள்ளது.
அண்மையில் மோடி பற்றி அமெரிக்க அதிகாரிகள் கூறுகையில், மோடி பிரதமராக அமரும் போது அமெரிக்கா கண்டிப்பாக வரவேற்கும். யார் பிரதமராக வந்தாலும் இந்தியாவுடனான நட்பு அமெரிக்காவுக்கு எப்போதும்முன்னுரிமைபடைத்தது தான் என்றும் இதில் கேள்விக்கே இடமில்லை எனவும் கூறியுள்ளமைக்கும் இதுதான் காரணம் என்று கூறப்படுகின்றது. (ற)

## பாட்னா குண்டுவெடிப்பு: 4 பேர் கைது

புதுடில்லி, நவ.13
பாட்னா குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களா என்பது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது. (ற)

## சரி செய்யப்பட்டது 'மங்கள்யான்' கோளாறு



புதுடில்லி, நவ.13
இந்தியாவால் செவ்வாய்க் கிரக ஆராய்ச்சிக்காக அனுப்பப்பட்ட மங்கள்யான் செயற்கைகோளில் ஏற்பட்ட தொழில்நுட்பப் கோளாறு சரிசெய்யப்பட்டு விட்டது என்று இஸ்ரோ அறிவித்துள்ளது.
செவ்வாய்க்கிரகத்தை ஆராய இஸ்ரோ அனுப்பிய மங்கள்யான் தற்போது பூமியிலிருந்து சுமார் 71,623 கிலோ மீற்றர் தொலைவில் நீள் வட்டப்பாதையில் பூமியைச் சுற்றிவருகிறது.
இந்த விண்கலத்தை திட்டமிட்டபடி ஒரு லட்சம் கிலோ மீற்றர் தொலைவுக்குக் கொண்டு செல்லும் முயற்சி இன்று எடுக்கப்படும் என்று இஸ்ரோ அறிவித்துள்ளது.
மங்கள்யானின் நீள்வட்டப்பாதை படிப்படியாக உயர்த்தப்பட்டு, அது டிசெம்பர் 1 ஆம் திகதியளவில் புவிஈர்ப்பு விசையில் இருந்து வெளியேறி செவ்வாய் நோக்கிய தனது நீண்ட பயணத்தை ஆரம்பிக்கும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தது.
இதன் ஒரு பகுதியாக இதன் நீள்வட்டப்பாதையை மூன்று கட்டங்களாக விஞ்ஞானிகள் உயர்த்தினர். நான்காவது கட்டமா[ன] நேற்று முன்தினம் நடந்த முயற்சி தொழில்நுட்பக் கோளாறு காரணமாக திட்டமிட்டபடி நடைபெறவில்லை.
எனினும் தற்போது அந்தத் தொழில்நுட்பச் சிக்கல் ச[ரி] செய்யப்பட்டு விட்டது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர். (ற)

# உளவுப் பிரிவைக் கலைத்தது ஏன்?

## கேள்வி எழுப்புகின்றார் வி.கே.சிங்



புதுடில்லி, நவ.13
"இராணுவத்தில் செயற்பட்டு வந்த தொழில்நுட்ப உளவு பிரிவை கலைத்தமை கண்டிக்கத்த தக்கது. அதன்மூலம் நாட்டுக்கு எதிராக செயற்படுபவர்கள்தான் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளார் இந்திய முன்னாள் இராணுவத் தளபதி வி.கே.சிங்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"இராணுவத் தளபதியாக நான் இருந்தபோது 2010 ஆம் ஆண்டு இராணுவத்துக்கென தனியாக தொழில்நுட்ப உளவுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது.
இந்த அமைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதியை காஷ்மீர் மாநில அரசை சீர்குலைப்பதற்காக நான் பயன்படுத்தியதாக தவறான குற்றச்சாட்டைச் சிலர் கூறினர். இராணுவத் தளபதி பதவியிலிருந்து நான் ஓய்வு பெற்றதும் இந்த அமைப்பைக் கலைத்து விட்டனர்.
அந்த அமைப்பு கலைக்கப்படாமல் இருந்தால் எல்லைப் பகுதியில் தற்போது நடக்கும் பல விரும்பத்தகாத சம்பவங்கள் நடக்காமல் இருந்திருக்கும். அந்த அமைப்பு கலைக்கப்பட்டதால் நாட்டுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் தான் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## உடல் உறுப்பு தானத்தில் தமிழகம் முதலிடம்

சென்னை.நவ.13
இந்தியாவில் உடல் உறுப்புகளைத் தானம் செய்வதில் தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது.
சாலை விபத்துகளில் இறப்போரின் சதவிகிதம் பிற மாநிலங்களை விட தமிழகத்தில் அதிகம். அவ்வாறு இறப்பவர்களின் உடல் உறுப்புகளே பெருமளவு தானமாகப் பெறப்படுகின்றன.
தமிழகத்தை அடுத்து மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் அதிகமாக உடல் உறுப்புகள் தானம் செய்யப்படுவதாகக் கூறப்படுகின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒபாமாவின் இரகசியக் கூடாரம்

வொஷிங்டன், நவ.13
அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமா பற்றிய இரகசியத் தகவல் ஒன்று வெளியே கசிந்துள்ளது.
அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமா வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போது தன்னுடன் குட்டிக் கூடாரத்தையும் எடுத்துச் செல்வாராம்.
இந்த கூடாரம் ஒபாமா வெளிநாடுகளில் தங்கும் விடுதிக்கு அருகே அமைக்கப்படும். அதில்தான் அவர் பெரும்பாலும் முக்கிய ஆலோசனைகளை நடத்துவார். இரகசியக் கமெராக்கள், ஒட்டுக் கேட்புக் கருவிகள் ஆகியவற்றின் அபாயங்களிலிருந்து தப்பிக்க இது பயன்படுகிறதாம்.
இதுகுறித்து அமெரிக்க மத்திய உளவுப்பிரிவின் இயக்குநரான ஜேம்ஸ் உல்ஸி கூறுகையில், "இப்போதெல்லாம் யாரையும் நம்ப முடியாது. எனவே ஜனாதிபதியின் பாதுகாப்பு, இரகசியம் என்பவற்றுக்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டியுள்ளது" என்று தெரிவித்துள்ளார். (ற)



பிலிப்பைன்ஸைத் தாக்கிய 'ஹையான்' சூறாவளி அங்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. 'ஹையானின்' வேகத்துக்குச் சான்றாகக் காணப்படுகின்றது இந்தக் கப்பல். கடலில் தரித்து நின்ற இந்தப் பிரமாண்டமான கப்பலைத் தூக்கிக் குடியிருப்புகளுக்குள் வைத்துச் சென்றுள்ளது 'ஹையான்' சூறாவளி.(ற)

## பிலிப்பைன்ஸ் நோக்கி உலகநாடுகள் நேசக்கரம்

லண்டன், நவ.13
'ஹயான்' புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பிலிப்பைன்ஸுக்கு அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐ.நா. சபை ஆகியன அவரச உதவிகளை அனுப்பி வைத்துள்ளன.
அமெரிக்காவின் இராணுவத்தலைமையகமான பென்ரகன் கடற்படைக் கப்பல் மூலம் மீட்பு உபகரணங்கள், நிவாரண உதவிகளை அனுப்பியுள்ளது.
இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் பிலிப்பைன்ஸுக்கு பெருந்தொகை நிதியுதவி அளித்துள்ளன.
புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளுக்குப் பெரும் பற்றாக்குறை காணப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. (ற)

## ஈரான் மீது புதிய தடை

### வலியுறுத்துகின்றனர் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள்

வொஷிங்டன், நவ.13
அணு சக்தி விவகாரத்தில் ஈரான் மீது நம்பிக்கை வைக்க முடியாது. அந்த நாட்டின் மீது மீண்டும் புதிய பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்று அமெரிக்க அரசை வலியுறுத்தியுள்ளனர் அந்த நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள்.
அணுசக்திக் கொள்கை தொடர்பாக அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையே ஜெனிவாவில் நடைபெற்ற பேச்சுக்கள் பயனின்றி முடிவடைந்துள்ளன. இந்த நிலையிலேயே அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர்.



"அணு செறிவூட்டல் தொடர்பாக ஈரானை நம்பமுடியாதுள்ளது. இந்த விடயம் குறித்து ஈரான் உறுதியான ஒரு கொள்கையில் இல்லை. அந்த நாட்டின் மீது புதிய பொருளாதாரத் தடைகளை விதிப்பதன் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் ஹெரியைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளளோம்" என்று தெரிவித்துள்ளனர் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள்.
எனினும் இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஜோன் ஹெரி, "ஈரானின் அணுசக்திக் கொள்கை தொடர்பான பேச்சுகளில் நாங்கள் கண்மூடித்தனமாகச் செயற்படவில்லை. அதே நேரத்தில் நாங்கள் ஏமாந்து விடவும் மாட்டோம்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## சோமாலியாவுக்கும் வந்தது சோதனை

### 100க்கும் அதிகமானோர் புயலால் உயிரிழப்பு

நியூயோர்க், நவ.13
சோமாலியாவை நேற்று முன்தினம் தாக்கிய புயலால் 1 லட்சம் பேர்வரை வீடுகளை இழந்துள்ள நிலையில், 100க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.
இந்திய பெருங்கடலில் உருவான புயல் ஆபிரிக்க நாடான சோமாலியாவின் புந்த் லேண்ட் பகுதியில் கரையை கடந்தது. அதன் எதிரொலியாக ஏற்பட்ட கனமழை கடும் சூறாவளி காரணமாக வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டது.
பலமாக வீசிய சூறைக் காற்றில் சிக்கி மரங்கள் வேரோடு சாய்ந்தன, வீடுகள் இடிந்தன, சாலைகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. அதனால் மின்சாரம் இல்லாமல் புந்த் லேண்ட் பகுதி முழுவதும் இருளில் மூழ்கியது.



இந்நிலையில் புயல் மற்றும் மழை காரணமாக 100க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது. கன மழையால் சுமார் 1 லட்சம் பேர் வீடுகளை இழந்து தவித்து வரும் நிலையில் மழை நாளை வரை நீடிக்கும் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## தென்னாபிரிக்க பஸ் விபத்தில் 29 பேர் சாவு

ஜொகன்னார்ஸ்பேர்க், நவ.13
தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற பஸ் விபத்தில் 29 பேர் உயிரிழந்துள்ளனர். 11 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.
பிரிட்டோரியா நகரில் இருந்து 60 கிலோமீற்றர் தூரத்தில் நடந்த இந்த விபத்தில் பஸ்ஸுடன் லொறியொன்று மோதியது என்று கூறப்படுகின்றது.
சம்பவ இடத்திலேயே 26 பேர் உயிரிழந்தனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மூவர் உயிரிழந்தனர் என்றும் பொலிஸார் கூறுகின்றனர். (ற)

## மருத்துவத் தாதியின் புதிய தகவல்: கென்னடியின் சாவில் நீடிக்கிறது மர்மம்

நியூயோர்க், நவ.13
அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியான ஜோன் எப் கென்னடியின் உயிரிழப்புத் தொடர்பில் புதிய தகவல்கள் இன்னமும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.
அமெரிக்காவின் 38ஆவது ஜனாதிபதி ஆக இருந்தவர் ஜோன் எப் கென்னடி. ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த இவர் கடந்த 1961 ஆம் ஆண்டு முதல் 1963ஆம் ஆண்டுவரை அமெரிக்க ஜனாதிபதியாப் பதவி வகித்தார்.
1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி தனது 46ஆவது வயதில் டெக்காஸ் மாநிலம் டெல்லாஸ் நகரில் மனைவி ஜாக்குலினுடன் காரில் செல்லும்போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.
அவர் இறந்து 50 ஆண்டுகள் நெருங்கும் நிலையில் ஜோன் எப் கென்னடியின் உயிரைப் பறித்த 'மர்மத் தோட்டா' தொடர்பான திடுக்கிடும் தகவல் ஒன்றை அவருக்கு முதலுதவி அளித்த தாதி ஒருவர் தற்போது வெளியிட்டுள்ளார்.
அப்போது அந்தத் தாதிக்கு 28 வயது. தற்போது 78 வயதாகிறது. அந்தச் சம்பவம் குறித்து அவர் கூறும் போது,
"தலையில் துப்பாக்கித் தோட்டாக்கள் பாய்ந்த நிலையில் ரத்த வெள்ளத்தில் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த



ஜோன் எப் கென்னடியின் தலையைத் தூக்கிப் பிடித்தவாறு அவரது சுவாசம் சீரடைவதற்கான முதலுதவியை நான் செய்தேன்.
அப்போது ஒரு விசித்திரமான காட்சியை நான் பார்த்தேன். துப்பாக்கிக் குண்டுகளால் காயமடைந்த பலருக்கு நான் சிகிச்சை அளித்துள்ளேன். ஆனால் அன்று கண்டது போன்றதொரு காட்சியை நான் இதுவரை பார்த்ததே இல்லை.
அவரது காதுக்கும், தோள் பட்டைக்கும் இடையே கூர்மையான ஒரு விசித்திர தோட்டாவை நான் பார்த்தேன். அந்த தோட்டா சுமார் 1 1/2 அங்குல நீளம் இருந்தது.
சாதாரணமாக துப்பாக்கியில் இருந்து வெடித்து சீறிப்பாயும் தோட்டாக்களின் முனை மழுங்கிப்போய் இருக்கும். ஆனால், அந்த தோட்டாவின் முனை மட்டும் கூர்மை மழுங்காமல் இருந்தது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.
துப்பாக்கியிலிருந்து வெளியேறும் வேகத்தில் தோட்டாவின் வெளிப்பகுதிகளில் சிராய்ப்பு (தேய்வது) அறிகுறி தென்படும். அதுவும் அந்த தோட்டாவில் தென்படவில்லை. எந்தவகை துப்பாக்கியில் இருந்து அந்த தோட்டா வெளியே வந்தது என்ற அறிகுறிகளை அந்த தோட்டாவை பரிசோதித்து கண்டுபிடிக்க இயலாத நிலையில் அது இருந்தது.
ஜோன் எப் கென்னடி படுகொலை தொடர்பான விசாரணையின் போது சமர்ப்பிக்கப்பட்ட தோட்டாக்களில் இருந்து அது மிகவும் வித்தியாசமாக தோற்றமளித்தது. அந்த தோட்டாவும் அறுவை சிகிச்சை மூலம் அவரது உடலில் இருந்து அகற்றப்பட்டது. ஆனால் கடைசி வரை அந்த 'மர்ம தோட்டா' நீதிமன்ற விசாரணையின் போது சமர்ப்பிக்கப்படவே இல்லை" என்று கூறியுள்ளார்.
இந்தத் தகவலால் ஜோன் எப் கென்னடியின் உயிரிழப்பில் மேலும் மர்மம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் கௌரவிப்பும் விஞ்ஞான தின விழாவும்

யாழ்ப்பாணம், நவ.13

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் 2013 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் விழாவும் விஞ்ஞான தினமும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கல்லூரி முதல்வர் அருட்சகோதரி மரிய றொசாறியோ தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வடமாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சற்குண ராஜாவும் , கௌரவ விருந்தினராக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் ஐ.தயாபரனும் கலந்து கொள்வர். (ஞ)

## நூல்கள் கையளிப்பு



சாவகச்சேரி நகர சபையினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நுணாவில், சாவகச்சேரி, மீசாலை ஆகிய பொது நூலகங்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட நூல்கள் குறித்த நூலகங்களின் பொறுப்பதிகாரி களிடம் கையளிக்கப்பட்டன.

நகர சபையின் இந்த வருட வரவு- செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் மூன்று நூலகங்களுக்கும் ஒரே அளவான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை செயலாளர் கா. சண்முகதாசன் ஆகியோரால் நூலகர்களிடம் கையளிக்கப்பட்டன. நூலகங்களின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நூல்கள் கொள்வனவு செய்வதற்கு நகர சபையினால் இந்த வருட வரவு-செலவுத் திட்ட நிதிஒதுக்கீட்டில்மூன்று லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

## அதிகரித்துச் செல்லும் வெங்காயத்தின் விலை

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்.குடாநாட்டில் வெங்காயத்தின் விலை அதிகரித்து வருகின்றது. தற்போது பெய்யத் தொடங்கி இருக்கும் மழையை அடுத்தே வெங்காயத்தின் விலையும் சடுதியாக அதிகரித்துள்ளது.

குறிப்பாக குடாநாட்டில் சின்ன வெங்காயச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டாததோடு வேதாள வெங்காயச் செய்கையிலேயே அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது பெய்ய ஆரம்பித்துள்ள மழையை அடுத்து வெங்காயத்தின் விலையும் திடீரென அதிகரித்துள்ளது.

வெங்காய விலை அதிகரிப்பால் நுகர்வோர் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். நேற்று திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ வெங்காயம் 200 ரூபாவுக்கும் அதிகமாக விற்கப்பட்டதைக் காணமுடிந்தது. (ந-17)

### சேதுகாவலன் வித்தியாலய பரிசளிப்பு விழா

தென்மராட்சி,நவ.13

கைதடி சேதுகாவலன் வித்தியாலய பரிசில்நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பி.ப ஒரு மணிக்கு பாடசாலைக்கு அருகில் உள்ள முருகன் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திருமதி இ.திருஞானசிவம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் கலந்து கொள் வார். (ஓ-9)


### காணி விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு, கலைவாணி முன்பள்ளி ஒழுங்கையில் 7 பரப்பு 11 குழி காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077 729 3492

(29697)(4.6.3)

### கிளி/மணிகண்டன் சபரீஷ ஆலயம் மாலை அணியும் நிகழ்வு




கிளி/செல்வாநகர் மணிகண்டன் சபரீஷ ஆலயத்தில் 17.11.2013 ஞாயிறு காலை 6.00-10.00 மணி வரை பக்தர்களுக்கு மாலை அணிவிக்கும் வைபவம் நடைபெறும்.

குருசுவாமி சுனில் விபுலானந்தக்குருக்களால் அணிவிக்கப்படும்.

ஐயப்பபக்தர்கள்,
செல்வாநகர், கிளிநொச்சி.

(37581)(4.6.3)

### தேங்காய் விற்பனை



மிகமலிவான விலையில் தேங்காய் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட விலைகழிவு வழங்கப்படும்.

தொடர்பு: 635, கே.கே.எஸ் ரோட் (பன்றிக்கோட்டுப் பிள்ளையார்கோவில் அருகில்)075 670 0680

(39893)(4.6)

### அனுமதியற்ற விளம்பரங்கள்

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள அனுமதியற்ற விளம்பரங்கள், பதாகைகள், சுவர் விளம்பரங்கள் யாவும் இருநாள் அவகாசத்தின் பின் அகற்றப்படவுள்ளன. விளம்பரத்தை நீடிக்க விரும்புபவர்கள் எமது சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம்.

(C/12256)(4.6)

### விவாஹ சுபமுகூர்த்தப் பத்திரிகை

அன்புடையீர் !

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான விஜய வருடம் ஐப்பசி மாதம் 28ஆம் திகதி (14.11.2013) வியாழக்கிழமை, துவாதசி திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய காலை 08.30 மணி முதல் 10.27 மணி வரையுள்ள தனு லக்கின சுப முகூர்த்த வேளையில்,

சண்டிலிப்பாய், ஆனைக்குழாய் பிரம்மஸ்ரீ செ. தம்பிஐயா அவர்களின் பௌத்திரியும் நீர்வேலி வாய்க்காற்றரவை பிரம்மஸ்ரீ சு. முத்துச்சாமிக் குருக்களின் தௌஹித்திரியும் பிரம்மஸ்ரீ த. விக்னராஜக் குருக்களின் கனிஷ்ட குமாரத்தியுமாகிய

சௌபாக்கியவதி துஷ்யந்தி

என்னும் வதுவை



ஊரெழு சிவாச்சார்ய பீடம் பிரம்மஸ்ரீ வைத்தியநாதக் குருக்களின் பௌத்திரனும் கொழும்பு பிரம்மஸ்ரீ ச. குமாரசாமி சர்மாவின் தௌஹித்திரனும் பிரம்மஸ்ரீ வை. தியாகராஜக் குருக்களின் ஏக குமாரனுமாகிய

சிரஞ்சீவி ஸ்ரீவத்ஸசர்மா

என்கின்ற வரனுக்கு

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரஹணம் செய்வதாய் ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் திருவருட் துணையுடனும், நீர்வேலி வாய்க்காற்றரவை விநாயகரின் பரிபூரண அனுக்கிரகத்துடனும், ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு பிரம்மாச்சாரியாள் பரிபூரண அனுக்கிரகத்துடனும் சுபமுகூர்த்தம் ஊரெழு வீரகத்தி விநாயகர் திருமண மண்டபத்தில் நடைபெற இருப்பதனால் தாங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்துக்களுடன் வருகை தந்து, மேற்படி சுப முகூர்த்தத்தை நடாத்தித்தந்து தம்பதியரை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- சமாவர்த்தனம் - மணமகனில்லத்தில் (13.11.2013) புதன்கிழமை காலை 09.00 மணிக்கு
- வதுவர கிரகப் பிரவேசம் - மணமகனில்லத்தில் (14.11.2013) வியாழக்கிழமை பி.ப 05.00 மணிக்கு

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

ஸ்ரீமான் ஸ்ரீமதி த. விக்னராஜக் குருக்கள் வசந்தகுமாரி தம்பதியினர்
ஸ்ரீமான் ஸ்ரீமதி நா. சதாசர்மா சுகன்யா தம்பதியினர்
செல்வி வி. கார்த்திகா
அச்செழு, நீர்வேலி.
தொலைபேசி இல.: 077 611 6698

ஸ்ரீமதி வை. பவானியம்மா
ஸ்ரீமான் ஸ்ரீமதி ச. குமாரசாமி சர்மா அபிராம்பாள் தம்பதியினர்
ஸ்ரீமான் ஸ்ரீமதி வை. தியாகராஜக் குருக்கள் சசீலாதேவி தம்பதியினர்
சிவாச்சார்யபீடம், ஊரெழு மேற்கு, சுன்னாகம்.
தொலைபேசி இல.: 021 224 0828, 077 477 7861

சுபம்.
(இரு வீட்டார் அழைப்பு)
தங்கள் வருகையின் சிறப்பே எங்களின் உள்ளக்களிப்பு

(39879) (45.6)

### தவறிவிட்டது

மடத்திவளவு, காரைநகரைச் சேர்ந்த கனகரத்தினம் நந்தகுமார் என்பவரின் தே.அ.அட்டை, வாகனசாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் பல ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கடந்த 01.11.2013 மூளாய் வெளிச்சந்திக்கும் யாழ் மத்திய பேருந்து நிலையத்துக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரிக்கோ, தொ.பே. இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். சயம்பு வீதி, வலந்தலை, காரைநகர்.077 621 8487

(19899)(4.6.3)

### வீடு வாடகைக்கு

கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து ¾K.M தூரத்தில் இரத்தினபுரத்தில் 7 அறைகள் இணைந்த குளியலறைகளுடன் மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு ஏற்றது.

தொடர்பு: 077 918 6923

(37580)(4.6)

### யா/அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம்

### புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டுவிழா - 2013

தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள்:



உ.திஷாளன் —165 புள்ளி
ப.சஜித் —163 புள்ளி
ச.அதீசன் —163 புள்ளி

எமது மாணவச் செல்வங்களை வழிப்படுத்தி அவர்களின் வெற்றிக்கு வித்திட்ட எம் பாடசாலையின் அதிபர் ச.விக்கினேஸ்வரி அவர்களையும், ஆசிரியர் வை.துஸ்யந்தி அவர்களையும், மாணவச் செல்வங்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

100இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள்:

| | | | |
|---|---|---|---|
| ப.பபிதா | — 152 | சே.மதுஷாலினி | — 132 |
| செ.டிலோசினி | — 151 | த.தாட்சாயினி | — 123 |
| இ.விதுசாந் | — 151 | றொ.றபீனா | — 107 |
| கு.ரட்சிஹா | — 148 | கே.கார்த்திகா | — 101 |

வாழ்த்துவோர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(40000)(12.6.3)

### அராபிய நாட்டு தொழில் அதிபர்களின் வருகையில் இந்த மாதம் யாழில் முதல் முறையாக நேர்முகப் பரீட்சை

தரமான வேலை
தகுதியான சம்பளம்

| | |
|---|---|
| வீசா | - யாழில் |
| மெடிக்கல் | - யாழில் |
| பீரோ | - யாழில் |
| விமானச் சீட்டுக்கள் | - யாழில் |

அரபு, ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்புக்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் வழங்கி வரும் றிப்றா இன்ரர்நஷனல் பிறைவேற் லிமிடட் இனால் நடத்தப்பட உள்ள நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டு பயன் பெறுங்கள்.

கட்டார் (நெஸ்லே வாட்டர் கம்பனிக்கு)
★ விநியோகத் தொழிலாளர்கள்
★ சாரதிகள்
★ உற்பத்தி தொழிலாளர்கள்
★ A/C டெக்னிஸியன்
45,000 ரூபாவுக்கு மேற்பட்ட சம்பளங்கள்

சவுதி அரேபியா
★ தொழிலாளர்கள் (ஆண்கள்)
★ வைத்தியசாலை, பல்கலைக்கழக சுத்திகரிப்பாளர்கள் (பெண்கள்)

DUBAI
★ கார் வோஸ்

எதிர்வரும் 16.11.2013 சனிக்கிழமை யாழ் மாவட்ட செயலகத்தினால் யாழ் மத்திய கல்லூரியில் நடத்தப்படும் 2013இற்கான தொழிற்சந்தையில் கலந்து கொண்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பதிவுகளுக்கு முந்துங்கள்.

(40051) (7.6)

அரச அங்கீகாரம் பெற்றவர்கள் PV72025 LL2502

Head Office
Rifraa International (Pvt) Ltd.
Main Street, Nintavur.
Sri Lanka.
T.P No : 067 567 7777, 075 904 5755
Email : rifraa@gmail.com
www.rifraa.com

Branch Office
Rifraa International (Pvt) Ltd.
No. 95, Muslim College Road, Jaffna.
Sri Lanka.
T.P No : 077 843 6475, 021 221 7085.
Email : rifraa@gmail.com
www.rifraa.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த 9 ஆம் திகதி உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சின் மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்துடன் இணைந்து வவுனியா மாவட்டச் செயலகத்தினால் நடத்தப்பட்ட தொழில் சந்தை வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வேலை வாய்ப்புத் தேடி வந்த பலர் பயன் பெற்றனர்.

## காந்தபுரம் மாணவருக்கு மிதிவெடி விழிப்புணர்வு

அக்கராயன், நவ.13

கிளிநொச்சி காந்தபுரம் கிராமத்தின் மாணவர்கள் மத்தியில் அவர்களின் பெற்றோர் மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக அங்குள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர். மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் போரின்போது மண் அரண் அமைத்த பகுதியி ல் கடந்த 7ஆம் திகதி ஒரு தொகுதி மிதி வெடிகள் மற் றும் வெடி பொருள்கள் காணப்பட்டதால் மாணவர்கள் அவதானமாக இருக்க வேண்டுமென அவர்களின் பெற்றோர் அறிவுறுத்தி வருகின் றனர். இத்தகைய மிதிவெடி விழிப் புணர்வுச்செயற்பாட்டின் மூலம் அனர்த்தங்களைத் தவிர்க்க முடியும் என்று கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (க-18)

## கால்வாயில் மழை நீர் மக்களுக்கு சிரமம்

கால்வாய்கள் உரிய வகையில் புனரமைக்கப்படாததால் குன்றும் குழியுமா கக் காணப்படும் வீதிகளில் மழை நீர்தேங்கி நின்று பொது மக்களுக்கு இடையூறை ஏற்படுத்தி வருகின்றன.

வவுனியா நகரசபை, வவுனியா தெற்கு பிரதேச சபைக் குட்பட்ட பிரதேசங்களான சிதம்பரபுரம், ஆசிகுளம், சமளங்குளம், நெளுக்குளம், நேரியகுளம், பம்பைமடு, பூந்தோட்டம், மகாரம்பைக் குளம், உக்கிளாம்குளம், பண்டாரிக்குளம், மணிபுரம், கணேசபுரம், குட்செட்வீதி, தவசிக்குளம், கூமாங்குளம், செக்கடிப்புலவு, இயங்கரா நகர், தாலிக்குளம், இராசேந்திரம்குளம், கந்தபுரம், சுந்தரபுரம், தோணிக்கல், கோவில்குளம், வெளிக் குளம், புதுக்குளம், ஓமந்தை, வேப்பங்குளம், செட்டிகுளம் பிர தேசத்தில் உள்ள வீரபுரம், செட்டிகுளம் நகரம் வவுனியா வடக்கு பிரதேசத்தில் உள்ள புளியங்குளம், கனகராயன்குளம் உட்பட பல் வேறுபகுதிகளில் உள்ள வீதிகளின் ஓரமாக அமைந்துள்ள கால்வாய்கள் உரிய வகையில் புனரமைக்கப் படாத நிலையில் காணப்படுகின்றன. இதனால் மழை பெய்யும் போது வெள்ளநீர் வழிந்தோடாது குழிகளில் தேங்கி நிற்பதால் டெங்கு நுளம்புகளின் தாக்கமும் ஏற்பட்டுள்ளது.

வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்களும் அதி கரித்துள்ளன. அத்துடன் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்து பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது.

மேலும், இந்த இடங்களில் பாதீனியச் செடிகளின் வளர்ச்சியும் அதிகளவில் காணப் படுகின்றது.

எனவே, உரிய நிறுவனங்கள் கால்வாய்களை புனரமைப்பதற்குரிய நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

# வெள்ளப் பாதிப்பைத் தவிர்க்க வேறு இடத்தில் குடியமர்த்துக

## தம்பனைக்குள மக்கள் கோரிக்கை

மன்னார், நவ.13

தொடர்ந்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு வரும் மடு உதவி அரச அதிபர் பிரி வுக் குட்பட்ட தம்பனைக் குளம் கிராம மக்கள் தம்மை உடனடியாக வேறு இடத்தில் குடியமர்த்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தம்பனைக்குளம் கிராம மக்கள் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக் கலநாதன், எஸ்.வினோ நோகராதலிங்கம் ஆகியோரிடம் கடிதம் வாயிலாக இந்தக் கோரிக் கையை விடுத்துள்ளனர்.

குறித்த கடிதத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது :-

தம்பனைக்குளம் கிராம மக்களாகிய நாம் போர் காரணமாக களிமோட்டை, ஜீவநகர், கற்கிடந்த குளம் ஆகிய பகுதிகளில் அமைக் கப்பட்டிருந்த நலன்புரி நிலையங்களில் வசித்து வந்தோம்.

> "–"
> **தம்பனைக்குளம் கிராமத் தில் மீள் குடியமர்த்தப்பட்ட 6 ஆண்டுகளில் இரண்டு தடவைகள் வெள்ளப் பெருக் கின் காரணமாக இடம் பெயர்ந்துள்ளோம்.**

பின்னர் 2007 ஆம் ஆண்டு தம்பனைக்குளம் கிராமத் தில் மீள் குடியமர்த்தப்பட்ட 6 ஆண்டுகளில் இரண்டு தடவைகள் வெள்ளப் பெருக் கின் காரணமாக இடம் பெயர்ந்துள்ளோம்.

தம்பனைக்குளம் கிராமம் மக்கள் வசிப்பதற்கு ஏற்ற தொரு இடமல்ல என்பதால் எம்மை வேறு இடத்தில் குடியமர்த்துமாறு மடு உதவி பிரதேச செயலர், மன்னார் அரச அதிபர் உட்படப் பலரிடம் கோரிக்கை விடுத்திருந் தோம்.

ஆனால் இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக் கப்படவில்லை. நாம் அன்றாடம் கூலி வேலை செய்தே எமது வாழ்க்கை யை நடத்தி வருகின்றோம்.

ஆகவே சிறு கைத்தொழில்கள் மற்றும் விவசாயச் செய்கையை மேற்கொள்வதற்கு ஏற்றதொரு இடமாக நாம் கருதும் மடுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 2 ஆம், 3 ஆம் கட்டைக்கு இடைப்பட்ட பகுதியில் எம்மை மீள் குடியமர்த்துவதற்கு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு தம்பனைக் குளம் கிராம மக்கள் சார் பாக கேட்டுக் கொள்ளுகின் றோம் எனக் குறிப்பிடப்பட் டுள்ளது. (க-12)

## குளத்தை புனரமைக்க கோரிக்கை

முல்லைத்தீவு, நவ.13

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் பெரிய சாளம் பன் பகுதியில் அமைந்துள்ள குளத்தைப் புனரமைத்து தமது விவசாய நடவடிக் கைகளுக்கு உதவுமாறு பெரிய சாளம்பன் கமக்கார அமைப்பின் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இங்குள்ள மக்கள் 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல் காரணமாகவே அவர்கள் தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து இங்கு வாழ்ந்து வருகின் றனர். இவர்களுக்கென விவசாய நிலங்கள் எதுவுமில்லை. கூலி வேலைகளை மேற் கொண்டு தமது வாழ்வாதாரத்தை நடத்தி வருகின்றனர். ஆனால் இது அவர்களின் வாழ்வாதாரத்துக் குப் போதுமானதாக இல்லை இதனால் விவசாய நடவடிக் கைகளில் ஈடுபட விரும் புகின்றனர். இதற்கு ஏற்றவாறு இங்கு அமைந்துள்ள குளம் முதலில் புனரமைக் கப்பட வேண்டும். இதனால் குளத்தின் கீழுள்ள காணிகளில் விவசாயத்தை மேற் கொள்ள முடியும்.

மேலும் குளத்தில் போதிய நீர் இருக்குமாயின் வீட்டுக் கிணறுகளிலும் நீர் வற்றாது இருக்கும். இதனால் ஏற்று நீர்ப்பாசனத்தை மேற்கொண்டு பயிர்களைப் பயிரிட முடியும் என்று தெரிவித் தார். (க-500)

## அக்கராயன் பிரதேசப் பாடசாலைகளில் அதிக அக்கறை வேண்டும்

### வலயக் கல்விப் பணிமனையிடம் பெற்றோர் வேண்டுகோள்

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்தில் இயங்கிவரும் பாடசாலைகளை மேம் படுத்த வலயக் கல்விப் பணிமனையினர் அதிகளவில் அக்கறை செலுத்த வேண்டுமென பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள் ளனர். அக்கராயன் மகா வித்தியாலயத்தைத் தலைமையாகக் கொண்ட வன் னேரிக்குளம் மகா வித்தியாலயம், ஐயனார்புரம் அ.த. க.பாடசாலை, ஆனைவிழுந்தான் குளம் அ.த.க. பாடசாலை, ஸ்கந்தபுரம் இல.1 பாடசாலை, ஸ்கந்த புரம் இல.2 பாடசாலை, கண்ணகைபுரம் அ.த.க. பாடசாலை, யூனியன் குளம் அ.த.க.பாடசாலை, கோணாவில் அ.த.க.பாடசாலை அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பௌதிகவள நெருக்கடி அதிகளவில் காணப்படுகின்றது. மேலும், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

மீள்குடியமர்வின் தொடக் கத்திலிருந்தே முக்கிய பாடங் களுக்கு ஆசிரியர்கள் இல் லாத நிலையே காணப்பட்டது. கடந்த ஏழு மாதங் களுக்கு முன்னர் அக்கராயன் மகா வித்தியாலயத் தில் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம் பிக்கப்பட்ட போதிலும் இரசாயன பாடத்துக்கு ஆசிரியர் இதுவரை நியமிக்கப்படவில்லை. இதைப் போன்று வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்திலும் உயர் தர வகுப்புக்கள் ஆரம்பிக் கப்பட்ட போதிலும் அதற் குரிய ஆசிரியர் ஒருவர் கூட இதுவரை நியமிக்கப் படவில்லை. மேலும் இங் குள்ள பாடசாலைகளில் நீண்ட காலமாகப் பணியாற்றும் ஆசிரியர்கள் இடமாற் றம் செய்யப்பட்டு புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதும் பெற்றோரின் கோரிக்கையாக உள்ளது.

எனவே, இந்தப் பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளை மேம்படுத்த கிளிநொச்சி வலயக் கல்விப் பணி மனையினர் அதிக அக் கறை செலுத்துவதுடன் அங்கு காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமெனவும் பெற்றோர் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (க-18)

# வன்னி மாவட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறை

மன்னார், நவ.13

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர் களுக்கான பயிற்சிப் பட்டறை மன்னாரில் ஆரம்பமானது.

வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த ஆங்கில பாட ஆசிரியர் களின் மொழித்திறன் மற்றும் கற்பித்தல் திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் முகமாக மன்னார் மாவட்ட மும்மொழிச் சங்கத்தின் அனுசரணையுடன் வன்னி மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 75 ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை மன்னார் , தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள வடமாகாண ஆங்கில உதவிப் பயிற்சி மையத்தில் ஆரம் பிக்கப்பட்டது.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய நான்கு மாவட்டங்களையும் சேர்ந்த 75 ஆசிரியர்கள் குறித்த பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர்.

ஜே.ஆர்.எஸ்.அமைப்பின் நிதியுதவியுடன் ஆரம்பமான இப்பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 20 ஆம் திகதி வரையான 10 தினங்கள் இடம்பெறும்.

ஆரம்ப நிகழ்வின் போது மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சியான் மற்றும் வடமாகாண ஆங்கில மத்திய நிலையப் முகாமையாளர் எஸ்.ஏ.ராஜன் குரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போரினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பிரதேசத்தில் ஆங்கில பாட ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் இதுவரை இடம்பெறாத நிலையில் வடமாகாண கல்வித் திணைக்களம் குறித்த ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாட ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் இதுவரை இடம்பெறாத நிலையில் வடமாகாணக் கல்வித் திணைக்களம் குறித்த ஆசிரியர்களுக்கு இந்தப் பயிற்சியை வழங்குவதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளதாக வடமாகாண ஆங்கில மத்திய நிலைய முகாமையாளர் எஸ்.ஏ. ராஜன் குரூஸ் தெரிவித்தார். (க-12)

# அதிபர் தெரிவில் நம்பகத்தன்மையில்லை

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

திருகோணமலைக் கல்வி வலயத்தில் அதிபர் வெற்றிடம் நிலவுகின்ற பாடசாலைகளுக்குப் பொருத்தமான அதிபர்களைத் தேர்ந்தெடுப்பதில்நம்பகத்தன்மை அற்ற நிலைமை காணப்படுகின்றது.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் திருகோணமலை மாவட்ட செயலர் எஸ்.ஜெயராஜ் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்த மனுவில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கல்வியமைச்சினால் வழங்கப்பட்ட அதிபர் நியமனங்களின் போது 'மேலதிக ஆளணி' எனக் குறிப்பிடப்பட்ட அதிபர்களுக்குப் பாடசாலைகள் பொறுப்பாக வழங்கக்கூடாது என்று கல்வியமைச்சினால் தெளிவாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

அவற்றை மாகாணக் கல்வியமைச்சோ, மாகாணக் கல்வித் திணைக்களமோ அல்லது வலயக்கல்வி அலுவலகமோ உதாசீனப்படுத்துவது வேதனைக் குரிய விடயமாகும்.

கடமை நிறைவேற்று அதிபர்களாக நியமிக்கப்பட்டு பின்னர் நிரந்தரமாக்கப்பட்ட அதிபர்கள் குறித்த காலம் குறித்த பாடசாலையில் சேவையாற்ற வேண்டும்.

அவர்கள் குறித்த சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்யாமல் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெறவோ, விண்ணப்பிக்கவோ முடியாது என்று அவர்களின் நியமனக் கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தும் கல்வி அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இத்தகைய தரப்பினர் இடமாற்றம் பெற முனைவது வேதனைக்குரியதாகும்.

'மேலதிக ஆளணி' யாக நியமனம் பெற்ற அதிபர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு பொருத் தமான அதிபர்கள் நியமனம் பெற ஆவன செய்ய வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

# சுழல் காற்றினால் பறந்தன கூரைகள்



மட்டக்களப்பு.நவ.13

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேச செயலர் பிரிவிலுள்ள புதிய காத்தான்குடிப் பகுதியில் வீசிய சுழல் காற்றினால் 3 வீடுகளின் கூரைகள் சேதமடைந்துள்ளன.

திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு மழையுடன் கூடிய சுழல் காற்று வீசியதால் புதிய காத்தான்குடி முதியோர் இல்ல வீதியிலுள்ள 3 வீடுகளின் கூரைகளே இவ்வாறு சேதமடைந்துள்ளன.

சுழல் காற்றினால் மரங்களும் முறிந்து விழுந்துள்ளன என்று பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடிப் பகுதிக்குச் சென்ற கிராம அலுவலர் எம். எம்.ஜரூப் கூரைகள் சேதமடைந்த வீடுகளைப் பார்வையிட்டதுடன், அது தொடர்பில் காத்தான்குடி பிரதேச செயலகத்துக்கும் அறிவித்துள்ளார். (ச)

# தமிழர் அவலத்தை பார்க்க சம்பூருக்கும் வாருங்கள்

## வெளிநாட்டுத் தலைவர்களிடம் கோருகிறார் நகரசபை உறுப்பினர்

திருகோணமலை,நவ13

இலங்கை அரசின் அழைப்பை ஏற்று பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தரும் வெளிநாட்டுத் தலைவர்கள், தமிழர்களின் அவலங்களைப் பார்வை யிட சம்பூர் பிரதேசத்துக்கும் வருகை தர வேண்டும்.

இவ்வாறு திருகோணமலை நகரசபை உறுப்பினர் சி.நந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வெளிநாட்டுத் தலைவர்கள் இலங்கையின் அழகை ரசிப்பதோடு மட்டும் நின்று விடாது, இந்த நாட்டில் தமிழர்களின் அவலங்களையும்பார்வையிட வேண்டும். சிறுபான்மை மக்கள் வாழும் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களுக்குச் சென்றால் காணொலியில் பார்த்தவைக்கு ஒப்பான நேரடி காட்சிகளையும் காண முடியும்.

தமது பூர்வீக நிலங்களில் மீளக்குடியேற முடியாது மனித மந்தைகளாக நலன்புரி முகாம் களில் எத்தனை காலமாக மக் கள் வாழ்ந்து வருகின்றனர்.

அடிப்படை வசதியற்ற முகாம் வாழ்க்கையிலிருந்து தங்களுக்கு எப்போது மீட்சி கிட்டும் என்ற ஏக்கத்தோடும் ஆதங்கத்தோடும் சம்பூர் மக்கள் உள்ளனர்.

எனவே, தமிழர்களின் உண்மை நிலைமையை அறிய சம்பூர் மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் அகதி முகாமை வெளிநாட்டுத் தலைவர்கள் பார்வையிட வேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)



சம்பூர்மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் அகதி முகாமை வெளிநாட்டுத் தலைவர்கள் பார்வையிட வேண்டும்

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

திருகோணமலை,நவ.13

திருகோணமலை மாவட்டத்துக்கு இந்தமுறை 7 தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் ஏற்கனவே 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

அதே வேளை மேலதிகமாக ஏழு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

மேதானந்தா எல்லாவல தேரர் 5 வேலைத்திட்டங்களுக்கும், டியு.குணசேகர ஒரு வேலைத் திட்டத்துக் கும், அநூர திஸா நாயக்க



10 வேலைத்திட்டங்களுக்கும், கீதாஞ்சன குணவர்த்தன ஒரு வேலைத்திட்டத்துக்கும், அனோமா கமகே ஒரு வேலைத்திட்டத்துக் கும், ரட்ண ஸ்ரீ விக்கிரம நாயக்க ஒரு வேலைத்திட்டத்துக்கும், ரிரான் அலஸ் ஒரு வேலைத் திட்டத்துக் கும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றனர்.

இந்த ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் திருகோணமலை மாவட்டத்தில் 180 வேலைத்திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

# சிறந்த சேவையை வழங்க வேண்டும்

## பிரதேச செயலர் லவநாதன் தெரிவிப்பு

அம்பாறை, நவ.13

"அரச ஊழியர்கள் சமூகத்தில் கௌரவமிக்கவர்களாகத் திகழ்கின்றனர். எனவே அரச ஊழியர்கள் அங்கம் வகிக்கும் கழகங்கள்முன்மாதிரியான சேவைகளை முன்னெடுக்க வேண்டும்".இவ்வாறு, கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலர் கே.லவ நாதன் கூறினார்.

கல்முனை அரச ஊழியர் பொதுச் சேவைகள் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்முனையில் நீண்ட வரலாற்றைக் கொண்ட அரச பொதுச் சேவைகள் கழகம் சிறப்பான சேவைகளை ஆற்ற வேண்டும்.

இந்தக் கழகத்தின் பணிகள், சேவைகள் சிறப்புற இடம்பெற்று வருகின்ற போதிலும், விமர்சனங்களை உள்வாங்கி சில விட்டுக் கொடுப்புகளுடன் பணிகளைத் தொடர முன்வர வேண் டும்.

கழக சட்ட வரையின் அடிப்படையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன், பல்வேறு சமூக சேவைகளிலும் கழகம் தனது பங்களிப்பைத் தொடர வேண்டும். சமூகத்தில் கௌரவமிக்கவர்களாக மதிக்கப்படும் அரச ஊழியர்கள் அங்கம் வகிக்கும் கழகங்கள் எடுத்துக்காட்டான, முன் மாதிரியான செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும்-என்றார். (ச-30)



பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்ளும் அரச தலைவர்களின் பிரதிநிதிகள் மட்டக்களப்புக்கு வருகை தரவுள்ளதால் மட்டக்களப்பு நகரத்தை அழகுபடுத்தும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

# இயங்குகிறது மணிக்கூடு



நீண்டகாலமாக சரியான நேரத்தைக் காட்டாமல் இருந்த மட்டக்களப்பு நகர பஸ் நிலைய மணிக்கூடு தற்போது சீராக இயங்கத் தொடங்கியுள்ளது. மட்டக்களப்பு நகர பஸ் நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள மணிக்கூடு இயங்காததால் தூர இடங்களுக்கு செல்லும் பிரயாணிகள் பெரும் அசௌகரியத்திற்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்நிலையில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தியதன் விளைவாக மட்டக்களப்பு நகர பஸ் நிலைய மணிக்கூடு இயங்கி சரியான நேரத்தைக் காட்டுகின்றது. மணிக்கூடு இயங்க நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (ச)

# பாடசாலையில் திருட்டு

மட்டக்களப்பு.நவ.13

மட்டக்களப்பு, கிராண்குளம் சரஸ்வதி வித்தியாலயத்தின் அறைக் கதவு உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலையின் கணினிகள் கொண்ட அறை உடைக்கப்பட்டே இவ்வாறு திருடப்பட்டுள்ளது என்று காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் அபிலாஷைகளை டில்லி நிறைவேற்ற வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து



"இலங்கை வாழ் தமிழர்களின் அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் வகையில் இந்திய அரசு செயற்படவேண்டும்."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளரும் மேல் மாகாணசபை உறுப்பினருமான சி.வை.பி.ராம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வருகை தரமாட்டார் என்றும் அவர் சார்பாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமையிலான உயர்மட்ட குழுவே வருகை தரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளும் நாடுகளில் இந்தியா ஒரு முக்கிய நாடாகக் கருதப்படும் இவ்வேளையில், தங்கள் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு முற்றுமுழுதாக இந்தியாவின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் இலங்கைத் தமிழர்கள் மற்றும் இந்திய வம்சாவளித் தமிழர்களின் அபிலாஷைகள், உரிமைகள் பூர்த்திசெய்யப்படும் விதத்தில் பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகள் குரல் கொடுப்பார்களா என்பதுதான் முக்கியமானதாகும். அப்படியில்லாமல் இலங்கை அரசை திருப்திசெய்யும் விதத்தில் இந்தியப் பிரதிநிதிகள் தங்களுடைய கருத்துகளை மற்றும் நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவார்களேயானால், இந்தியாவின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை தமிழ் மக்கள் இழந்துவிடுவார்கள்.

ஒட்டுமொத்தமாக இலங்கை வாழ் தமிழ் மக்கள் மற்றும் மலையக இந்திய வம்சாவளியினரின் அபிலாஷைகள், உரிமைகள் குறித்தும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் எங்கள் நாட்டிற்கும் மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கும் எடுத்துரைத்து இலங்கை வாழ் தமிழர்களின் அபிலாஷைகளையும், எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்ய இந்திய அரசு செயற்பட வேண்டும்.

அப்படி இந்திய அரசு செய்யுமேயானால், இலங்கை வாழ் தமிழர்கள் மற்றும் இந்திய வம்சாவளியினர் நிச்சயம் இந்த மாநாட்டில் இந்தியாவிலிருந்து யார் வந்து கலந்து கொண்டாலும் அவர்களைப் பாராட்டுவதோடு மகிழ்ச்சியும் அடைவார்கள்.

இந்த மாநாட்டில் இந்தியாவின் நிலைப்பாடு பற்றி இலங்கை வாழ் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் மிகவும் ஆர்வத்துடனும் அவதானத்துடனும் அவதானித்துக்கொண்டிருக்கிறார்கள்" - என்றார்.

# ஓட்டோவிலிருந்து தூக்கி வீசப்பட்டு

## சிறுமி சாவு

ஓட்டோவிலிருந்து தூக்கி வீசப்பட்ட ஆறு வயது சிறுமியொருவர் ஸ்தலத்திலேயே பாளியானார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் களனியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் ஓட்டோவின் சாரதியை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

# 2,500 கோழிகளைத் திருடிய இருவருக்கு வலைவீச்சு

கோழிப்பண்ணையொன்றிலிருந்த சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான 2,500 கோழிகளைப் பலவந்தமாக எடுத்துச்சென்ற இருவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை சிலாபம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

சிலாபம், மானுவன்கம பிரதேசத்திலுள்ள கோழிப்பண்ணையொன்றைச் சேர்ந்த கோழிகளே இவ்வாறு பலவந்தமாக எடுத்துச்செல்லப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இருவரும் அக்கோழிகளை வாகனமொன்றில் ஏற்றிச்சென்றனர் என்று பண்ணையின் உரிமையாளர் பொலிஸில் முறையிட்டுள்ளார்.

# புலிக்கொடியுடன் ஓடிய இளைஞரை நாடு கடத்த பிரிட்டிஷ் நடவடிக்கை

## கொழும்பு நீதிமன்றில் சி.ஐ.டியினர் தெரிவிப்பு

இலண்டன் கார்டிஃப் நகர மைதானத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் போது புலிக்கொடியுடன் ஓடிய சந்தேகநபரை இலங்கைக்கு நாடு கடத்த பிரிட்டிஷ் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்று குற்றப்புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்தனர்.

இந்த வழக்கு விசாரணை கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோதே சி.ஐ.டியினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

# கொழும்பு மாநாட்டை முன்னிட்டு சிறைகளுக்கு பலத்த பாதுகாப்பு

## அதிகாரிகளுக்கு விடுமுறை இரத்து

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அனைத்து அதிகாரிகளினதும் விடுமுறை நேற்றிலிருந்து இரத்து செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20ஆம் திகதி வரை இவ்வாறு விடுமுறை இரத்து செய்யப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு கொழும்பில் இடம்பெறுவதால் சிறைச்சாலைகளில் பாதுகாப்பை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிறைச்சாலைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய மாநாடு இடம்பெறும் சமயத்தில் கைதிகள் குழப்பத்தில் ஈடுபடலாம் என்ற சந்தேகத்தை அடுத்தே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பீடித் தொழிலாளி கொலை; 5 இலட்சம் ரூபா சூறை



திக்வெல்ல, வெவுருகந்தல என்ற இடத்தில் பீடி சுற்றும் மாற்றுத்திறனாளியான ஒருவர் கொலை செய்யப்பட்டு அவரிடமிருந்து ஐந்து இலட்சம் ரூபா அபகரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலையுடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் அவருடைய மருமகனை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

# மாநாட்டில் பங்கேற்க வருகிறார் தென்னாபிரிக்க ஜனாதிபதி ஸூமா



இலங்கையில் நடை பெறும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவென தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேகப் ஸுமா இலங்கை வரவுள்ளார்.

இத்தகவலை தென்னாபிரிக்கா உறுதி செய்துள்ளது.

இம்முறை இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு, ஜனநாயகம், நல்லாட்சி, நிலையான வளர்ச்சி, கடன் மேலாண்மை, கல்வி, சுற்றுச்சூழல், பெண் சமத்துவம், சுகாதாரம், மனித உரிமைகள், தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம், சட்டம், பல்தரப்பு வர்த்தக விவகாரங்கள், சிறிய மாநிலங்கள் மற்றும் இளைஞர் விவகாரம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அநுராதபுரத்தில் ஐவர் வெட்டிக் கொலை:

## இராணுவ சிப்பாய்க்கு விளக்கமறியல் நீடிப்பு

அநுராதபுரம் - விகாரகல் மில்குளம் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவரை வெட்டிக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான முன்னாள் இராணுவச் சிப்பாய் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்டு கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் நேற்று அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேகநபரை எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# ரயிலில் மோதி ஒருவர் சாவு

கொழும்பில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற ரயிலில் மோதி இனந்தெரியாத நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அநுராதபுரம் பொலிஸ் பிரிவில், தஹய்யாகம ரயில் நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாநாட்டை மன்மோகன் புறக்கணித்தமையால் இலங்கை - இந்திய இராஜதந்திர உறவில் பாதிப்பு

## ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தெரிவிப்பு

பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை கலந்து கொள்ள தமிழகம் அனுமதிக்காததன் மூலமாக இலங்கை - இந்திய இராஜதந்திர உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டுள்ளது என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

போர்க் காலத்தில் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் களை கண்டித்து கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் தமது பிரதமரை கலந்து கொள்ளக் கூடாது என்று தமிழக அரசியல் தலைமைகள் வலியுறுத்தி வெற்றி பெற்றுள் ளன.

இலங்கை தமிழர்களுக்காக தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் உட்பட ஏனைய பலரும் களமிறங்கியிருப்பதை பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. இவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை இவர்கள் இந்த பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன் சிங்கை கலந்துகொள்ள அனுமதிக்காததன் மூலமாக இலங்கை - இந்திய இராஜதந்திர உறவில் பாரிய விரிசலை ஏற்படுத்தியிருக்கின்றார்கள்.

எதிர்காலத்தில் இலங்கை தமிழ் மக்களுக்கான பிரச்சினையில் இந்திய அரசு தலையிடும் போது அதனை இலங்கை அரசு புறக்கணிப்பதற்கு சாதகமாக இவ்விடயம் அமைந்து விடும். இலங்கை விடயத்தில் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் தமது சொந்த விளம்பரத்திற்காக போட்டா போட்டியிட்டு மேலும் எமது பிரச்சினையை சிக்கலாக்கி விடுவார்களோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

எது எப்படியிருப்பினும் இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக தொடர்ந்தும் இந்தியா முன்னிற்கும் என்று நம்புகின்றேன்.

இந்திய நாட்டைத் தவிர வேறு எந்தவொரு நாடும் எமது பிரச்சினையில் முழுமையான அக்கறை செலுத்தாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

ஆகவே இந்தியா விலகி நிற்பதன் மூலம் ஒரு போதும் எமது பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது. இதனை இந்திய மத்திய அரசு தெளி வாக புரிந்துள்ள நிலையிலும் தேர்தல் அடிப்படையில் தமிழ் நாட்டு அரசியலுக்கு அடிபணிய வேண்டியுள்ளது என்ற யதார்த்தத்தை நாம் புரிந்து கொண்டுள்ளோம். இது தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களுக்கு அல்ல இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி உட்பட வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கே துரதிஷ்டமான விடயமாகும் - என்று அந்த அறிக்கையில் பிரபா குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொதுநலவாய கொழும்பு மாநாடும் முன்னரே கிளம்பும் புழுதியும்.........

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொழும்பில் ஆரம்பமாக உள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டை ஆஸ்திரேலியாவும் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற கோஷம் எழுந்துள்ளது: இந்தியாவும், கனடாவும் தமது பிரதமர்களை மாநாட்டில் கலந்துகொள்ளாது பகிஷ்கரித்து, மூத்த அமைச்சர்களை அனுப்புவது போன்று, ஆஸ்திரேலியாவும் பிரதமரை கொழும்புக்கு அனுப்பக் கூடாது என்ற குரல் அந்நாட்டில் வலுத்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு கொழும்பு வந்திருந்த ஆஸ்திரேலியாவின் மூதவை உறுப்பினர்களில் ஒருவரான லீ றைனோன், தாமும் நியூஸிலாந்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜான் லொஜியும் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றைக் கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ததைக் காரணம் காட்டி, தங்கள் இருவரினதும் கடவுச் சீட்டுகளைப் பறிமுதல் செய்தனர் என்றும், தாம் தங்கி இருந்த வாடி வீட்டுக்கு அழைத்துச் சென்று அங்கு வைத்து மூன்று மணித்தியாலங்களாக குடிவரவு அதிகாரிகள் விசாரித்ததாகவும் தகவல் வெளியிட்டுள்ளார்.

லீ றைனோன், ஆஸ்திரேலியாவின் கூட்டமைப்பு அரசாங்கத்தின் அங்கத்தவர் அல்லர். எதிர்க் கட்சியைச் சேர்ந்த மூதவை உறுப்பினர்.

விசாரணை என்ற பேரில், மூன்று மணித்தியாலங்கள் தமது சுதந்திரத்தை இலங்கை அதிகாரிகள் பறித்துவிட்டதாக, தலைநகர் சிட்னியின் விமான நிலையத்தில் சென்று இறங்கியதும், அவர் மிகுந்த கோபத்துடன் கண்டித்ததாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ஆஸ்திரேலிய மூதவை உறுப்பினர் திருப்பி அனுப்பப்படும் அளவுக்கு இலங்கை அதிகாரிகளால் அவமானப் படுத்தப்பட்டதாகத் தெரிவித்து, தமது நாட்டுக்குக் கொடுக்கும் அழுத்தம் செயல்வடிவம் பெறுமா? அது குறித்து எந்த் வகையான உத்தியோகபூர்வ அறிவித்தலும் வெளிப்படுமா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து நாடுகளின் மக்கள் பிரதிநிதிகள், பயணிகள் விசாவிலேயே கொழும்பு வந்தனர் என்றும் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்துவதற்கு முற்பட்டதாலேயே அவர்கள் விசாரிக்கப்பட்டனர் என்றும் எமது நாட்டு அரச அதிகாரிகள் நியாயம் கற்பித்துள்ளனர்.

ஆனால் அவர்கள் கடந்த சனிக்கிழமை வடக்கே வந்து இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறிந்து சென்றனர்.

வடக்கில் இராணுவப் பிரசன்னம் குறித்தும் அதனால் மக்களுக்கு உண்டாகும் பாதிப்புகள் குறித்தும், மக்கள் எதிர்நோக்கும் வாழ்க்கை சார்ந்த இல்லாமைகளையும், மனித உரிமை மீறல்கள் குறித்தும் வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துத் தற்போதைய நிலைமைகளைக் கேட்டறிந்து சென்றனர்.

தமிழ் மக்களின் மிகக் குறிப்பாகக் குடாநாட்டு மக்களின் உண்மை நிலை வெளியார் மூலம் அனைத்துலக மட்டத்தில் வெளிவந்து விடக் கூடாது என்ற உள்ளார்ந்த நோக்கத்துடனேயே அவர்கள் விசாரிக்கப்பட்டனர் என்பது, பால் வெள்ளையாகத் தெரிகிறது.

ஆஸ்திரேலியாவின் மூதவை உறுப்பினர் லீ றைனோனுடன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த, நியூஸிலாந்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீன் லொஜியும் கொழும்பிலிருந்து அரசாங்கத்தினால் திருப்பி அனுப்பப்பட்டவர்களில் ஒருவர்.

இதேவேளை தாம் இலங்கை மாநாட்டில் பங்குபற்றுவதால், அந்த நாட்டின் செயற்பாடுகளை ஏற்றுக்கொள்வதாக அர்த்தப்படாது என்று நியூஸிலாந்தின் பிரதமர் ஜோன் கீ தெரிவித்திருப்பது, கொழும்பு அரசின் செயற்பாடுகளை அனைத்துலக அரசியல் தலைவர்கள் எதிர்விளைவாகவே நோக்குகிறார்கள் என்பதனை மறுபுறத்தில் தொட்டுக் காட்டுகிறது.




பொது நலவாய நாடுகளின் கூட்டத்துக்குப் பிரதமர் போகவில்லை. அவருக்கு பதிலாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கலந்து கொள்ளப் போகிறார். இதிலென்ன பெரிய ராஜதந்திரமோ, ராஜபக்ஷஅரசுக்கு எதிரான கண்டனமோ இருக்கிறது என்பது தெரியவில்லை.

> எல்லா பிரதமர்களும் எல்லாப் பொதுசலவாய மாநாடுகளுக்கும் போவதில்லை. பிரதமரே கலந்து கொள்ள வேண்டும் என்கிற அவசியமும் இல்லை. இதற்கு முன் 2011இல் நடந்த பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் கலந்து கொள்ளவில்லை. குடியரசுத் துணைத் தலைவர்தான் கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் நியூசிலாந்துப் பிரதமரும் கலந்து கொள்ளவில்லை. அதனால் பிரதமர் கலந்து கொள்ளாமல் இருப்பது ஒன்றும் புதிதல்ல.

பிற மாநிலப் பத்திரிகைகள் பிரதமரும் மத்திய அரசும் தமிழக அரசியல் கட்சிகளின் பயமுறுத்தலுக்கு அடிபணிந்து விட்டதாகவும், மாநிலத்தின் வற்புறுத்தலுக்காகத் தேசிய நலன் பலி கொடுக்கப்பட்டிருப்பதாகவும் விமர்சிக்கின்றன. இந்தியா என்பது பல மாநிலங்களின் கூட்டமைப்பு. மாநில உணர்வுகளை மதித்துத்தான் மத்திய அரசு செயல்பட்டாக வேண்டும். அதனால், தமிழக அரசியல் கட்சிகளின் வற்புறுத்தலுக்கு மத்திய அரசு அடிபணிந்து விட்டது என்கிற குற்றச்சாட்டில் அர்த் தம் இல்லை.

சகல நாடுகளின் பிரதமர்களும் சகல பொதுநலவாய மாநாடுகளுக்கும் போவதில்லை. பிரதமரே கலந்து கொள்ளவேண்டும் என்கிற அவசியமும் இல்லை. இதற்கு முன் 2011இல் நடந்த பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளவில்லை. குடியரசுத் துணைத் தலைவர்தான் கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் நியூசிலாந்துப் பிரதமரும் கலந்துகொள்ளவில்லை. அதனால் பிரதமர் இம் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் இருப்பது ஒன்றும் புதிதல்ல.

### அதிகாரப் பகிர்வுக்கு இடமில்லை

1987இல் கையெழுத்தான ஜெயவர்தன - ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தின்படி அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை இலங்கை இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை எந்தவித அதிகாரப் பகிர்வுக்கும் இலங்கை தயாராகவும் இல்லை. இப்போது இலங்கையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடை பெற்று அங்கே தமிழர்களின் கூட்டணி பெரும் வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருக்கும் நிலைமை. அதனால், வடக்கு மாகாண அர சுக்கு கூடுதல் அதிகாரங்களைப் பெற்றுத் தர வேண்டிய கடமை இந்தியாவுக்கு உண்டு.

1976இல் நடந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டுக்குப் பின்பு இலங்கையில் நடக்க இருக்கும் பெரிய சர்வதேச நிகழ்வு பொதுநலவாய மாநாடுதான். இந்த இடைவெளியில் அங்கே எந்தவொரு சர்வதேச நிகழ்வும் நடைபெறாமல் இருந்ததற்குக் காரணம், அங்கிருந்த அரசியல் சூழல். இப்போது, இப்படி ஒரு மாநாட்டைக் கூட்டி, இலங்கையில் எல்லாமே இயல்வு நிலைக்குத் திரும்பிவிட்டது என்று காட்ட முற்படுகிறது ராஜபக்ஷ அரசு.

### ... வெற்றி

பொதுநலவாய மாநாடு வெற்றிகரமாக நடப்பது ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும், அவரது அரசுக்கும் ஒரு கௌரவப் பிரச்சினை. அதைப் பயன்படுத்தி, அரசமைப்புக்கான 13ஆவது சட்டத்திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவிக்க முடிந்திருந்தால், அதை இந்தியாவின் வெற்றியாகக் கொள்ள முடியும்.

அரசமைப்புக்கான 13ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் கிடைக்கும் அதிகாரப் பகிர்வுக்குப் பிறகு பொதுநலவாய மாநாட்டையொட்டி மாநில சுய உரிமையுடன் கூடிய வடக்கு மாகாணத்துக்கும் பிரதமர் மன்மோகன் சிங் பயணம் செய்திருந்தால், அது நமது ராஜதந்திர வெற்றியாக இருந்திருக்கும். வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனின் கரத்தைப் பலப்படுத்துவதாகவும், அங்கே வாழும் தமிழர்களுக்கு புத்துணர்ச்சி அளிப்பதாகவும் அது அமைந்திருக்கும்.

மத்திய அரசின் அணுகுமுறையில் அப்படியெல்லாம் எந்தவொரு சிந்தனையும் இருந்ததாகவோ, இருப்பதாகவோ தெரியவில்லை. குறைந்த பட்சம், பிரதமர் தமிழக முதல்வரை அழைத்துக் கலந்து பேசி ஒரு முடிவெடுத்திருந்தால், தமிழகக் கட்சிகளை எல்லாம் அழைத்துப் பேசி முடிவெடுத்திருந்தால்கூட, பொதுநலவாய மாநாட்டை வட இலங்கையில் எஞ்சியிருக்கும் தமிழர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்தப் பயன்படுத்தி இருக்க முடியும்.

### கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம்

இலங்கையில் போர் நடந்த போது, பதவி சுகத்துக்காக, இனப்படுகொலையை வேடிக்கை பார்த்தவர்கள்; அப்போது ராஜபக்ஷ அரசுக்கு ராணுவ ரீதியாகவும், ராஜதந்திர ரீதியாகவும் உதவ முற்பட்டவர்கள்; கடந்த நான்கு ஆண்டுகளில் நடந்து கொண்டிருக்கும் சிங்களக் குடியேற்றத்தைப் பார்த்தும் பார்க்காமல் இருந்தவர்கள் பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதும், கலந்து கொள்ளாமல் இருப்பதும் ஒன்றுதான். சீனாவுடனான இலங்கையின் நட்புறவு அதிகரித்து இந்தியாவுக்கு அச்சுறுத்தலாகிவிடும் என்று அச்சப்படுவோர், இனப்படுகொலை நடக்கும்போது யோசித்திருக்க வேண்டும் அதை. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்கிறார்கள்.

இலங்கையில் நடந்த இனப்படுகொலையைப் பற்றிப் பேசாமல், அரசமைப்புக்கான 13ஆவது சட்டத் திருத்தத்தை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வற்புறுத்தாமல், தமிழக மீனவர்கள் தாக்கப்படும் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் ஏதோ தமிழகத்தின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதுபோல ஒரு நாடகத்தை அரங்கேற்றி, பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதி ராஜபக்ஷவிடம் மன்னிப்புக் கேட்காத குறையாக, தான் மாநாட்டில் கலந்துகொள்ள இயலாததற்கு வருத்தம் தெரிவித்திருக்கிறார். மாநாட்டில் இந்தியா கலந்து கொள்கிறது. ஆனால், பிரதமர் கலந்து கொள்ளவில்லை. புரிகிறதா சூட்சுமம்?

ராஜபக்ஷவின் ராஜதந்திரம் மீண்டும் வெற்றி பெற்றிருக்கிறது!

*நன்றி-தினமணி*



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளவரசரின் வருகையால் உயிர்பெறுமா ரோஸ்மீட்?

தமிழில் வீ.எஸ்.ரீ
சிங்களமூலம் மவ்பிம



இலங்கையை பிரிட்டிஷ் முடிக்குரிய நாடு என்ற நிலையிலிருந்து விடுவித்து குடியரசு நாடாக்கியவர் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவே. பிரிட்டன் கடற்படைத் தளத்தை திருகோண மலையிலிருந்து அகற்றியவர் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்காவே. இத்தகைய பண்டாரநாயக்கா பரம்பரையினர் கொழும்பில் வாழ்ந்தது ரோஸ்மீட் வளவிலேயே ஆகும். அத்தகைய தமது பரம்பரை வாழ்விடமான ரோஸ்மீட் வளவிலிருந்தே 1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நாட்டின் பிரதமராகப் பொறுப்பேற்க பண்டாரநாயக்கா புறப்பட்டுச் சென்றார். 1959 ஆம் ஆண்டில் அவர் படுகொலை செய்யப்பட்டதும் ரோஸ்மீட் வளவின் பங்களாவிலேயே. அவரது மரணத்தையடுத்து ஹேன்பிடிகெதர ஞானசீகதேரர், பண்டாரநாயக்காவின் மனைவியாரான சிறிமாவோவை அரசியலில் ஈடுபட ஒப்புக் கொள்ள வைத்ததும் அதே ரோஸ்மீட் வளவுப் பங்களாவில் வைத்தே. அது மட்டுமன்றி பண்டாரநாயக்கா தம்பதியரின் மகளான சந்திரிகா தென்மாகாண முதலமைச்சர் என்ற நிலையிலிருந்து ஜனாதிபதிப் பதவியை ஏற்கும் வரை தங்கி வாழ்ந்ததும் அதே ரோஸ்மீட் வளவுப் பங்களாவிலேயே ஆகும்.

பிரிட்டிஷ் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ், பொது நலவாய மாநாட்டில் பங்குபற்ற இலங்கைக்கு வரும் வேளை தாம் தங்கியிருக்கத் தெரிவு செய்திருப்பதும் அதே ரோஸ்மீட் வளவே ஆகும்.

இவ்விதம் தாம் இலங்கையில் தங்கியிருக்கும் வேளையில் இந்த ரோஸ்மீட் வளவில் தங்கியிருப்பதற்கு இளவரசர் சார்ள்ஸ் முடிவு செய்தமைக்கான காரணமென்ன?

### ரோஸ்மீட் வளவில் 'பூடிக்' ஹோட்டல்

குறிப்பிட்ட அந்த ரோஸ்மீட் வளவில் தற்போது 'பூடிக்' ஹோட்டல் அமைந்துள்ளது. அந்த ரோஸ்மீட் வளவை பண்டாரநாயக்காவின் மூத்த மகள் சுனேத்ரா, 'பூடிக்' ஹோட்டலை நடத்த வாடகைக்கு விட்டுள்ளார். சுனேத்ராவுக்கும் அவரது தங்கையான சந்திரிகாவுக்குமே அந்த ரோஸ்மீட் வளவு சொந்தமானதாகும். அதனாலேயே என்னவோ அந்த ஹோட்டல் நிர்வாகத்துக்குப் பல தரப்பட்ட இடையூறுகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது. அந்த ஹோட்டலின் நிர்வாகத் தரப்பு, ஹோட்டலில் மதுபான விற்பனைக்கான அனுமதி கோரி விண்ணப்பித்தும் அண்மைக்காலம் வரை அதற்கான அனுமதி வழங்குவதில் இழுத்தடிப்பு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இதனால் ஹோட்டலை நடத்தும் தரப்பினர் கடும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. ஆனால் பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் குறிப்பிட்ட அந்த ஹோட்டலில் தங்க முடிவெடுத்ததன் காரணமாக அந்த ஹோட்டலுக்கு மதுபான விற்பனை அனுமதிப் பத்திரம் வழங்குவதில் அரசுக்குள் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இவ்விதம் பண்டாரநாயக்கா பரம்பரைக்குச் சொந்தமான ரோஸ்மீட் வளவில் இயங்கும் ஹோட்டல் நிர்வாகம் இடையூறுகளைச் சந்தித்து வரும் நிலையில், பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் குறிப்பிட்ட அந்த ஹோட்டலில் தங்க முடிவெடுத்திருப்பதன் பின்னணி என்னவென்பது நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர் தரப்புக்கு மட்டுமே தெரிந்த தொன்று.

### கமரூன்-சூகியிடம் கூறிய செய்தி

இந்தச் சம்பவம் மேலும் இரசனை மிக்கதாவதற்கு மற்றொரு காரணமும் உள்ளது. அண்மையில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தம்மைச் சந்திக்க லண்டனுக்கு வந்த பர்மிய நாட்டுச் சுதந்திரப் போராட்ட வீராங்கனையான ஆங் சான் சூகியுடன் தாம் கலந்து கொண்ட பத்திரிகையாளர் சந்திப்பின் போது "இலங்கையின் அரசியல் நிலை குறித்துத் தாம் நன்கறிந்துள்ளதாகவும், தாம் இலங்கை அரசுக்கு இறுக்கமான செய்தியொன்றை விடுப்பதற்காகவே இலங்கையில் இடம்பெறும் பொது நலவாய மாநாட்டில் பங்குபற்றச் செல்வதாகவும் தெரிவித்திருந்தமையே அதற்கான காரணமாகும்.

இவற்றுக்கு மத்தியில் பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் அண்மையில் பொது நலவாய நாடுகளின் மாநாடு குறித்துக் கருத்து வெளியிட்டபோது, பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இம்முறை இலங்கையில் நடத்துவதன் மூலம், இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உலக நாடுகளின் கவனத்தை இலங்கை மீது திருப்புவது இலேசாக ஆகியுள்ளது எனத் தெரிவித்திருந்தார். இதனை அவர் தமது ஆங்கில மொழியில் இதன் மூலம், இலங்கை கண்ணைக் கூச வைக்கும் முகத்துக்கு நேரேயான ஒளி பாய்ச்சலில் அகப்பட்டுக் கொள்ளும் எனத் தெரிவித்திருந்தார். அதாவது இருட்டில் மறைந்துள்ள இலங்கை அரசு மீதான குற்றச்சாட்டுக்கள் துல்லியமான நேரடி வெளிச்சம் பாய்ச்சலின் மூலம் வெளியில் தெரிய வரும் எனக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

மேற்குறிப்பிட்ட விவரங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் போது, பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸும், பிரதமர் டேவிட் கமரூனும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை பொது நலவாய நாடுகளின் தலைமைப் பதவியில் நிலைநிறுத்த என்றல்லாது, மஹிந்தவின் அரசின் கழுத்துக்குத் தடம் போடுவதற்காகவே இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்கள் என்பது தெட்டத் தெளிவாகிறது. அது மட்டுமன்றி இலங்கை அரசுக்கு எதிராக போர்க் குற்றங்கள் குறித்த காணொலியைத் தயாரித்து வெளியிட்ட சனல் 4 தொலைக்காட்சி ஊடகவியலாளர். கெலும் மக்ரேயும் இவ்விருவருடன் கூட வரும் ஊடகவியலாளர் குழுவில் இணைந்து இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார். அவர் இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பான தமது வீடியோ காணொலியை இந்தியாவில் திரையிட இந்தியாவுக்குச் செல்ல விஸா அனுமதி கோரிய வேளை இந்திய மத்திய அரசு அதற்கு அனுமதியளிக்க மறுப்புத் தெரிவித்தது. ஆயினும் பொதுநலவாய மாநாட்டுச் செய்தி சேகரிப்புத் தொடர்பாக அவருக்கு விஸா அனுமதி வழங்க வேண்டிய நிலை இலங்கை அரசுக்கு ஏற்பட்டது.

> இம்முறை இலங்கையில் நடத்துவதன் மூலம், இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர் பாக உலக நாடுகளின்கவனத்தை இலங்கை மீது திருப்புவது இலே சாக ஆகியுள்ளது எனத் தெரிவித்திருந்தார்.

### உலகத்தைக் கவர புதிய உத்தி

[illegible] ஜனா திபதி கியூவோ சாவேஸ் மற்றும் ஈரானியத் தலைவர் அகமதி நிஜாத் போன்றே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அமெரிக்க அரசுக்கு எதிரான தமது கருத்தை வெளிப்ப டுத்த வாய்ப்பாக ஐ.நா. சபைக் கூட்டத் தொடர்களைப் பயன்படுத் திக் கொண்டுள்ளார். அமெரிக்கா வின் நியூயோர்க் நகரில் கூடும் ஐ.நா.பொதுச் சபைக் கூட்டங்களில் கலந்து கொண்டு. அங்கு தமக்கு உரையாற்றக் கிடைக்கும் வாய்ப் பைப் பயன்படுத்தி அமெரிக்க அரசைத் தாக்கி விமர்சிக்கும் போது அத்தகைய கருத்து வெளிப்பாடுகள் முழு உலகத்தின் கவனத்தையே ஈர்ப்பனவாய் அமைகின்றன. அத்தகைய விமர்சனங்களுடான தன் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து அமெரிக்கா வெட்கமடைய நேரிடுகிறது.

அந்த வகையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் கூட்டத்தொடரிலும் இலங்கைக்கு வந்து அதில் கலந்து கொண்டு இலங்கையில் இருந்து கொண்டே இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக் களை முன் வைப்பதன் மூலம் முழு உலகத்தின் கவனத்தையும் ஒரு கணம் இலங்கை மீது திருப் பும் உத்தியே கைக்கொள்ளப் படவுள்ளது.

1983 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதியன்று இந்தியாவில் இடம்பெற்ற பொது நலவாய மாநாட்டில் கலந்து கொண்ட அப்போதைய அரசுத் தலைவர் ஜே.ஆர். கூட மேற்குறித்த விதத்திலான உத்தியையே கையாண்டு இந்திய அரசை விமர்சித்திருந்தார். முன்னாள் இந்தியத் தலைவர்களான மகாத்மா காந்தி மற்றும் ஜவஹர்லால் நேரு ஆகியோர் குறித்துத் தமது உரையில் போற்றிப் புகழ்ந்த ஜே.ஆர். அந்த வேளையில் இந்தியப் பிரதமராகவிருந்த இந்திரா காந்தியின் அயல் நாடுகளுடனான அரசியல் நிலைப்பாட்டைக் கண்டித்து விமர்சிக்கத் தவறவில்லை. இலங்கையை ஆக்கிரமிக்க எந்தவொரு வெளிநாட்டையும் அனுமதிக்கப் போவதில்லை எனத் தமதுரையில் கருத்து வெளியிட்டு இந்திராகாந்திக்கு சவால் விடுக்க அந்தப் பொது நலவாய நாடுகளின் மாநாட்டை ஜே.ஆர்.வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டார். தமது நாட்டில் வைத்தே தம்மை விமர்சித்த ஜே.ஆரின் அந்தச் செயற்பாட்டால் கோபாவேசமுற்ற இந்திராகாந்தி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் காலஞ்சென்ற தொண்டமானைச் சந்தித்த சமயம் அந்தக் கிழட்டு மனிதருக்கு நான் வெகு விரைவில் பாடம் கற்பிப்பேன் என்று கூறியிருந்தார்.

அதேபோன்று பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸும், பிரதமர் கமரூனும் இலங்கைக்கு வந்து பொதுநலவாய மாநட்டில் இலங்கை அரசைத் தாக்கி விமர்சித்தால் ஜனாதிபதி மஹிந்தவால் பிரிட்டனுக்கு எதிராக எதுவுமே செய்ய இயலாது. பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக பிரிட்டிஷ் அரச கிரீடத்துக்குத் தலைவணங்க வேண்டிய நிலை மஹிந்தவுக்கு ஏற்படும்.

### பண்டார நாயக்க பரம்பரைக்கு மீண்டும் பிராண வாயு

அந்த வகையில் பார்த்தால் இளவரசர் சார்ள்ஸின் இலங்கைப் பயணம் மஹிந்த மீது பொதுநலவாய நாடுகள் அமைப்பின் வலையை விரிப்பதற்கான ஓர் உத்தியே எனக் கொள்ள இயலும். அதற்காக இலங்கைக்கு வந்து இளவரசர் சார்ள்ஸ் தங்கவிருப்பதும் பண்டாரநாயக்கா பரம்பரையின் ரோஸ்மீட் வளவிலேயே. பண்டாரநாயக்கா பரம்பரையினர் அரசியலரங்கில் கால் பதித்ததும் அவ்வேளையில் சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யமாகத் திகழ்ந்த பிரிட்டிஷ் பேரரசு அரசியல் சிக்கல்களில் சிக்கி அல்லாட நேர்ந்த சமயத்திலேயே. முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ, ஆர்.டி. பண்டாரநாயக்காவின் தந்தையாரான மகா முதலி சொலமன் டயஸ் பண்டாரநாயக்கா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் பெயர் சுட்டி அடையாளப்படுத்தப்பட்டதொரு நிர்வாகியாகத் திகழ்ந்தவர். தமது தந்தையாரின் பிரபல்யத்தைப் பயன்படுத்தியே எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இலங்கை அரசியலில் கால்பதித் தார். மகா முதலியின் மகன் என்ற விதத்தில் கணித்தே பண்டாரநாயக்காவுக்கு முதன் முதலில் அத்தனகல்ல தொகுதிப் பொது மக்கள் தமது வாக்குகளை வழங்கி வெற்றி பெற வைத்தனர்.

2005 ஆம் ஆண்டில் ராஜபக்ஷ பரம்பரையினர் ஏதோ வகையில் பண்டாரநாயக்கா பரம்பரையினரை அரசியல் அரங்கிலிருந்து ஓரம்கட்டி விடுவதில் வெற்றி கண்டனர். நாட்டின் அரசியல் நிலை எவ்வாறமைய வேண்டுமெனத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகித்த ரோஸ்மீட் வளவு அவ்வேளை முதல் பரபரப்பு அடங்கி அமைதியாயிற்று. புகழ்பெற்ற அந்த ரோஸ்மீட் இல்லம் ஹோட்டலொன்றாக மாற்றம் கண்டது. 2005 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியல் அரங்கிலிருந்து மரணித்துப் போய் விட்ட பண்டாரநாயக்கா பரம்பரையினருக்கு மீண்டும் பிராணவாயு வழங்கி உயிர்ப்பித்து இந்த ரோஸ்மீட் வளவினூடாக இந்த நாட்டின் அரசியலரங்கில் மீண்டும் தலையெடுக்க வைக்கும் நோக்கில் அமைந்ததே இளவரசர் சார்ள்ஸின் தற்போதைய இலங்கைப் பயணமா? என்பது குறித்து எவராலும் தீர்மானமாகக் கூறி விட இயலாதுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய்க்கு எமனான வெங்காய வெடி

யாழ்ப்பாணம், நவ.13

பன்றிக்கு வைத்திருந்த வெடியில் வளர்ப்பு நாய் மாட்டிக் கொண்டு தலை சிதறி உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

குறித்த பிரதேசத்தில் வீட்டு உரிமையாளரின் காணிக்கு அருகில் பன்றியைக் கொல்வதற்குப் பயன்படுத்தும் வெங்காய வெடி தரையில் வீசப்பட்டிருந்தது.

அதனை வீட்டு உரிமையாளரின் வளர்ப்பு நாய் கௌவி இழுத்ததில் தலை சிதறிப் பரிதாபகரமாக உயிரிழந்தது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் அவ்விடத்தில் இருந்த வேறு வெடிகளையும் மீட்டுச் சென்றனர்.

(வ-14-122)

"-"

**வீட்டு உரிமையாளரின் காணிக்கு அருகில் பன்றியைக் கொல்வதற்குப் பயன்படுத்தும் வெங்காய வெடி தரையில் வீசப்பட்டிருந்தது.**

# வெள்ள நீரைக் கடலுக்குள் பாய்ச்சுவதற்கு நடவடிக்கை

மன்னார், நவ.13

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தின் பல கிராமங்கள் வெள்ள நீரால் சூழ்ந்து காணப்படுகின்றன.

இந்த நிலையில் மன்னார் செபஸ்தியார் பேராலய பிரதான வீதியில் மழை நீர் தேங்கி நிற்பதோடு அருகில் உள்ள வீடுகளிலும் மழை நீர் தேங்கியுள்ளது. மழை நீரை வெளியேற்றும் முகமாக மன்னார் நகர சபையினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் அந்தப் பகுதியில் உள்ள கழிவுநீர் வாய்க்காலைத் தோண்டி மழை நீரைக் கடலுக்குள் செலுத்த நட்வடிக்கை மேற்கொண்டுவருகின்றனர்.



மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் குறித்த வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றது. அவருடன் நகர சபைச் செயலாளர் லேனாட் பிரிட்டோ, உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் ஆகியோரின் மேற்பார்வையில் மன்னார் நகர சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களும் இணைந்து குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

(வ-12)

# பொதுக்கூட்டம்

வரணி, நவ.13

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை அங்கத்தவர்கள் கலந்து கொள்ளும் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி காலை9 மணிக்கு சங்கத் தலைமை மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

சங்கத் தலைவர் செ.அமர சேகரம் தலைமையில் நடைபெறும். இந்தக் கூட்டத்தில் 2014ஆம் ஆண்டுக்கான 16 செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஆராயப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-122)



சாவகச்சேரி நுணாவில் பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி முன்பள்ளி சிறார்களுக்கான போட்டி நிகழ்வுகள் நூலக மண்டபத்தில் இடம்பெற்றன. (வ-9)

# கணினி வன்பொருள் பயிற்சிகள்

தென்மராட்சி, நவ.13

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான கணினி வன்பொருள் வலையமைப்பின் தீர்வு அணிகள் உருவாக்கப்பட்டு அவர்களுக்கான பயிற்சிகள் இரு தொகுதிகளாக நடத்தப்படுகின்றன. வேள்ட் விஷன் நிறுவன அனுசரணையுடன் சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் முதலாவது தொகுதியினருக்கான பயிற்சிகள் கடந்த 8ஆம், 9ஆம் திகதிகளில் நடத்தப்பட்டன.

இரண்டாவது தொகுதியினருக்கான பயிற்சிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும், மறுநாள் சனிக்கிழமையும் நடத்தப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்களின் குறிக்கோளை எட்டிப்பிடிக்க முயற்சிப்பீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்புக் கிட்டும். வேற்று மதத்தினரால் உதவி கிடைக்கும்.

**இடபம்:** அதிரடித் திட்டங்களைத் தீட்டுவீர்கள். உங்களைத் தேடிவந்து சிலர் உதவி கேட்பார்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மிதுனம்:** அதிகாரப்பூர்வமாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.

**கடகம்** : உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். அடுத்தவர்கள் மனம் காயப்படும் படி பேசாதீர்கள். சிலரின் தவறான செயல்களை எண்ணி வருந்துவீர்கள்.

**சிங்கம்:** பளிச்சென்று பேசி எல்லோரையும் கவருவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் அதரவு கிடைக்கும். பிரபலங் களின் சந்திப்பு நிகழும்.

**கன்னி:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள்.

நாளை

ஐப்பசி-28 வியாழக்கிழமை 14.11.2013
திதி: துவாதசி மு.இ.08.38 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி மு.ப.10.51 வரை
சுபநேரம்: 07.37 - 09.07 வரை
இராகுகாலம்: 01 -37 - 03.07 வரை

**துலாம்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைபளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகிடைக்கும்.

**விருச்சிகம்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள்.

**தனுசு:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். வியாபாரத்தில் வரவேண்டிய மிகுதிகளை விரைந்து வசூலிப்பீர்கள்.

**மகரம்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படை வீர்கள்: சிந்தனைத்திறன் அதிகரிக்கும். அரச காரியங்களில் அனுகூலமான நிலைக் காணப்படும்.

**கும்பம்:** சிக்கனமாக இருக்க வேண்டும் என்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

**மீனம்:** யாருக்கும் பணம், நகை வாங்கிக் கொடுப்பதில் ஈடுபட வேண்டாம். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் விவாதத்தைத் தவிர்க்கவும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | | 6 | 9 | 7 | | |
| 3 | | 8 | 1 | | | | 6 | |
| | | 6 | | | | 5 | | |
| 9 | | 7 | 6 | 2 | | | | 5 |
| | 1 | | 3 | | 4 | | 9 | |
| 6 | | | | 9 | 8 | 3 | | 2 |
| | | 5 | | | | 4 | | |
| | 6 | | | | 7 | 9 | | 8 |
| | | 9 | 2 | 8 | | | | 6 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 2 | 9 | 7 | 5 | 3 | 6 | 4 |
| 7 | 9 | 6 | 4 | 3 | 1 | 2 | 8 | 5 |
| 3 | 5 | 4 | 8 | 6 | 2 | 9 | 7 | 1 |
| 1 | 7 | 8 | 5 | 2 | 4 | 6 | 3 | 9 |
| 6 | 3 | 9 | 1 | 8 | 7 | 5 | 4 | 2 |
| 4 | 2 | 5 | 3 | 9 | 6 | 8 | 1 | 7 |
| 5 | 8 | 7 | 6 | 1 | 9 | 4 | 2 | 3 |
| 2 | 4 | 3 | 7 | 5 | 8 | 1 | 9 | 6 |
| 9 | 6 | 1 | 2 | 4 | 3 | 7 | 5 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு நாள்கள் சேவை வழங்க நடவடிக்கை மேற்கொள்க

நவாலியில் இயங்கும் சுதேச ஆயுள்வேத மத்திய மருந்தகத்துக்கு கூடுதலான மக்கள் சிகிச்சைக்கு வருவதால் வாரத்தில் இரு நாள்களுக்கு மருந்தகத்தின் சேவையை அனுமதிக்க வடமாகாண சுதேசிய வைத்திய பணிப்பாளர் முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வலி.தென்மேற்கு பிரதேச மக்களின் நன்மை கருதி நவாலி கொத்துக்கட்டி வீதியில் உள்ள ஹேமலதா நிறுவன மத்திய மருந்தகத்தின் சேவை வாரத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் இடம்பெற்று வருகின்றது. இத்தினங்களில் 70முதல் 80வரையான மக்கள் முழு மருத்துவ சேவையினால் பெரிதும் பயனடைகின்றனர். எனவே வலி.தென்மேற்கு மக்கள் முழுமையாக நவாலி ஹேமலதா ஞாபகார்த்த ஆயுள்வேத மத்திய மருந்தகத்தினை பயன்படுத்த வாரத்தில் மேலதிகமாக ஒரு நாளை ஒதுக்கி இரு நாள் சேவை இடம்பெற வழியமைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-41)

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ. 13

வடமராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள கரவெட்டி கோட்டக் கல்வி அலுவலர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பவர் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இல். அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும். தகுதியுடைய விண்ணப் பதாரிகள் எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னதாக வலயக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். (ந-14)

### யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி. அச்சுவேலி
### புலமைப் பரிசில் பரீட்சை பாராட்டு விழா - 2013




எமது பாடசாலை மாணவச் செல்வங்களை தமது அயராத உழைப்பாலும் அர்ப்பணிப்பான சேவையினாலும் வெற்றி பெறச் செய்து எமது கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்த அதிபர் அருட்சகோதரி மரியஹொசாரியோ அவர்களையும், ஆசிரியர்களான திருமதி.கௌரி.சுரீஸ்கரன், திருமதி.நு.துஷ்யந்தன், செல்வி சு.சந்திரா ஆகியோரையும் மாணவச் செல்வங்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் :**

**இடமிருந்து வலமாக முதலாவது வரிசையில் :**

க.அனுஸ்ரன்(157), க.நிதுசன்(164), கெ.ஜெரோன் நிதர்சன்(157), எ.ஹொனால்ட்(168), கு.தேனுகன்( 174), பு.கலைமேனன்(154), த.சுபகரன்(154), தி.வினோஜன்(165)

**இடமிருந்து வலமாக இரண்டாவது வரிசையில் :**

சா.தக்சிகா(156), மா.வித்ஜா(163), கா.டிவானி(165), தி.சுபானுஷா(176), டொ.ஜெனற்சாரா(158), ஆ.கார்த்திகாயினி(165), க.யசோபிகா(166), பா.ஆரணி(158 )

**100 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றவர்கள் :**

M.மதுர்சனா(153) T.சாகித்தியா(150), J.துளசிகா(149), B.ஆதிரை(149), T.கயூரிகா(148) M.பத்மலோஜினி(148), S.லிதுசா(147), S.கஜானனி(145), S.ஜலக்சிகா(145), B.சாரங்கன்(145), M.அபர்ணா(141), B.றம்சா(141), R.சதுர்த்திகா(140), S.கஜலக்சி(140), K.வியாசனி (140), U.யனோஜா(138) S.லிதுசன்(136), K.சிந்துஜா(133), S.கஜானனி(132), K.நிஸ்திகா (131), S.தமிழ்மாறன்(130), J.நிருசிகா(128), R.றஜீனா(126), T.கிருசிகன்(117), S.டினேஸ்குமார்(117), S.டெல்சி(116), S.டெல்சி(116), S.எப்சியா(111), A.லிசானி (110), R.சரண்(107), T.கவின்ஸ்ரா(107), T.டிலானி(107), A.சுகனா(106), S.டயானிசி(104), A.ஜோயல்ரூபனி(104), U.மதுர்சா(103), V.துளசிகா(101), T.அபிசிகா (101), J.டியூரினா (101) P.நியானிகா(100)

(சி.12241) (45.6)

- பாராட்டி வாழ்த்துவோர் பாடசாலைச் சமூகம் -

MJ




# மீண்டும் புதுப்பொலிவுடன் யாழ் மண்ணில்

# நியூ மைதிலி ஜூவெலர்ஸ்

தங்க நகை உலகில் தடம் பதித்த நியூ மைதிலி ஜூவெலர்ஸ் **கொழும்பில் இருந்து மீண்டும் யாழ் மண்ணில்** புதுப்பொலிவுடன் **இல. 38,40, கஸ்தூரியார் வீதியில்** திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**15.11.2013** விஜய வருடம் ஐப்பசி மாதம் **29ஆம்** நாள் **வெள்ளிக்கிழமை** காலை **9 மணி** தொடக்கம் **10 மணி 15 நிமிடம்** வரை வரும் ரேவதி நட்சத்திரமும் அமிர்தசித்த யோகமும் கூடிய தனு லக்கின சுப வேளையில் கோலாகலமாக எமது கடை திறந்து வைக்கப்படவுள்ளது.

**இத்தருணம் வருகை தந்து எமது விழாவைச் சிறப்பித்து வைக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

**நியூ மைதிலி ஜூவெலர்ஸ்** MJ **NEW MAITHILY JEWELLERS**

**No. 38, 40 Kasthuriyar Road, Jaffna**

**இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**நல்வரவை நாடும்: கடை உரிமையாளர்.**

(சி.12241) (45.6)

021 221 7878, 021 221 7877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.

# கேள்வி அறிவித்தல் - 2014

கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2014 இலிருந்து 31.12.2014 வரையான காலப்பகுதிக்கு நடத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி :- 27.11.2013 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:- 28.11.2013 நண்பகல் 12.00 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி :- 28.11.2013 பி.ப 02.00 மணி

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புபப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 01. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையமும் (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 15,000.00 | 1,500,000.00 |
| 02. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 1,200,000.00 |
| 03. | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கோழிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 500,000.00 |
| 04. | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 5,000.00 | 220,000.00 |
| 05. | உடையார்கட்டு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 700,000.00 |
| 06. | உடையார்கட்டு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 100,000.00 |
| 07. | றெட்பானா பொதுச்சந்தை | 1,000.00 | 1,500.00 | 5,500.00 |
| 08. | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 15,000.00 | 660,000.00 |
| 09. | விசுவமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 15,000.00 | 1,100,000.00 |
| 10. | விசுவமடு பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 200,000.00 |
| | ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | |
| 01. | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 1,000.00 | 5,000.00 | 55,000.00 |
| 02. | கற்சிலைமடு பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 200,000.00 |
| 03. | முத்துஐயன்கட்டு இடதுகரை பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 200,000.00 |

நிபந்தனைகள்.

- கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதிகளைச் செயலாளர், பிரதேச சபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதியைப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்குப் பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் மூன்றிலொரு பகுதியை 06.12.2013ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரத்தினைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- மரக்கறிச்சந்தையை அண்மித்துள்ள இடங்களில் (1Km சுற்றுவட்டாரத்துள்) நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடம் கட்டணம் அறவிடுவதன் மூலம் வியாபார நடவடிக்கையை ஊக்குவித்தல் கூடாது. அத்துடன் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளித்தல் கூடாது.
- சந்தையைக் குத்தகைக்குப் பெறுபவர் சந்தைக்கு வரும் சந்தைப் பொருள்களின் மொத்தப் பெறுமதியின் 4% கட்டணம் அறவிடலாம். மீன். மரக்கறிச்சந்தை வியாபாரிகளிடம் இடத்திற்கு (4'X4') ரூபா 40.00க்கு மேற்படாமலும் கட்டணம் (இடவாடகையாக) அறவிடலாம். இதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது. சந்தையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டி ஒவ்வொன்றிற்கும் ரூபா 5.00ம் மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 10.00ம் அறவிடலாம். அதற்கு மேலதிகமாக எந்தவித கட்டணமும் அறவிடக்கூடாது.
- இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளைத் தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.
- இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்குப் பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடைவாடகையாகச் சபைக்குத் செலுத்துதல் வேண்டும்.
- சந்தை வளவின் உட்புறமாக உள்ள கடைகளுக்கு எந்த விதமான வரியும் அறவிடக் கூடாது.
- ஏற்கனவே ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு தவறுநர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவே இதில் பங்குபற்ற இயலாது.
- சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும்.

**செயலாளர்,**
**பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**

(C/12242)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பாகச் செயல்படும் கூ.சங்கங்களுக்குப் பரிசு

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ .13

91 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு, குடாநாட்டில் சிறப்பாகச் செயற்பட்டு வரும் முதல் மூன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விருதுகள் வழங்கப்படும் என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

மாவட்ட மட்டத்தில் அதிகூடிய தொகைக்கு வியாபாரத்தில் ஈடுபடும் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு, அவை கௌரவிக்கப்படவுள்ளன. அத்துடன் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்கு அயராது பாடு பட்ட சங்கங்களின் சிறந்த பொது முகாமையாளர்கள், தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

அதேநேரம் .சங்கக் கிளை விற்பனை நிலையங்களில் கூடுதலான வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் கிளை முகாமையாளர்களுக்கும் விசேட பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் குடாநாட்டில் மிக சிறப்பாகச் செயற்பட்டு வரும் கூட்டுறவு நகர் மற்றும் எரிபொருள் விற்பனை நிலையங்களும் தெரிவு செய் யப்பட்டு அவற்றின் முகாமையாளர்களுக்கும் பரிசில்கள் வழங்கப் படும்-என்றார்.

(ந-17)

# வீட்டில் வைத்த நகை மாயம்

வீட்டு அறையொன் றின் மேசை மீது வைக்கட்டிருந்த மூன்ற ரைப் பவுண் நிறையு டைய தங்க நகை பட்டப் பகலில் காணாமல் போயுள்ளது.

இந்தச்சம்பவம் அண்மையில் அச்சுவேலி வடக்கில் இடம்பெற்றது.

வீட்டு அறையின் மேசையில் நகையை வைத்து விட்டு குறித்த வீட்டுப் பெண்மணி சமையல் வேலையில் ஈடுபட்டு விட்டு பின்னர் வந்து பார்த்த போதே நகை மாயமாக மறைந்திருந்தமை தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் தொடர் பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

(ந-9)

**வீடு வாடகைக்கு**

3 அறை வீடு வாடகைக்கு உண்டு. 529 (991) கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு சந்திக்கு அருகில்
தொடர்பு: 077 555 4878, 011 267 8519, 021 221 7055
(39999)(6.3.4)

**ஆசிரியர் தேவை**

பிரபல தனியார் பாலர் பாடசாலைக்கு மானிப்பாய், சங்கானை, சாவகச்சேரி, நல்லூர், கோப்பாய், அச்சு வேலி, பருத்தித்துறை ஆகிய இடங்களில் கற்பிப் பதற்கு ஆசிரியைகள் தேவை. (39982)(7.6)
இலக்கம் 64, கோயில் வீதி,யாழ்ப்பாணம்.
தொடர்பு : 077 362 7055, 077 468 2951

**விற்பனைக்கு**

100 அடி நீளம் 30 அடி அகலம் கொண்ட சீற், மரத்துடன் கூடிய கூரை மட்டும் விற்பனைக்குண்டு.
தொடர்பு :
புதிய உயர் கல்லூரி
95, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (சி/12251)(7.6)
தொ.பே. இல: 021 222 8148, 077 846 9721

**IT Diploma Courses**



- Diploma in Information Technology
- Dip. in Computerized Accounting
- Dip. in Pre-Press Desktop Publishing
- Dip.In Web Designing & Development
- Dip. in Video Production & Multimedia
- AutoCAD
- Tally Accounting

புதிய பிரிவுகள் ஆரம்பம்

- JAVA
- .VBNET
- PHP
- C, C++

Diploma in Hardware Engineering

PC &LapTop

COURSE FEES RS. 3 400.00 இச்சலுகை இவ்வாரம் மட்டும்

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி
இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும்
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC Reg.No. P25/0056)

DMI COMPUTER EDUCATION

**DMI COMPUTER EDUCATION**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கஸ்தூரியார் வீதி | M.M.V. வீதி. | கண்டி வீதி, (HNB அருகில்) | 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) |
| Tel.: 021-222 4403 | Tel.:021-226 2470 | Tel.:021-227 0775 | Tel.:021-224 1970 |

**க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு**

யாழ் நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினால் நாளை 14 மற்றும் 15ஆம் திகதிகளில் க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கொன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளது. பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

இடம் : முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி
காலம் : 14.11.2013 – 15.11.2013
நேரம் : 8.30a.m – 4.00p.m
பாடங்கள் : 14.11.2013 – வரலாறும் விஞ்ஞானமும்
15.11.2013 – தமிழும் கணிதமும் (சி/12250)(7.6)

குறிப்பு : குறித்த கருத்தரங்கு யாழ்ப்பாணத்தின் பிரபல ஆசிரியர்களினால் முன்னெடுக்கப்படவுள்ளது.

## போதனாசிரியர் பதவி; விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ.13

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்டத்தில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களில் போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிறுவர், பெண்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், வீட்டு மின்சார உபகரண திருத்துநர், வெளியிணைப்பு இயந்திரம் திருத்துநர், மின் மோட்டார் மீள் முறுக்குநர், கணினி பட வடிவமைப்பாளர், நீர்க்குழாய் பொருத்துநர் ஆகிய கற்கை நெறிகளுக்கான போதனாசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்போர் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம், ஆங்கிலம் உட்பட 4 திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் தொடர்புடைய துறையில் பட்டம் பெற்றிருப்பதுடன் 2 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக உதவிப் பணிப்பாளர், இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை, வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். (ஓ-14)

# கடன் தொகைக்கு வட்டி குறைப்பு

## சாவகச்சேரி வணிகர் மன்ற அங்கத்தவருக்கு

தென்மராட்சி, நவ.13

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் அங்கத்தவர் சேமிப்பு நிதியிலிருந்து அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகைக்கான வட்டி வீதத்தைக் குறைத்துள்ளனர்.

கடந்த மே மாதம் நடைபெற்ற மன்றத்தின் பொதுக் கூட்டத்தில் சங்கத்தின் நன்மை கருதி அங்கத்தவர்களால் செலுத்தப்படும் சேமிப்புத் தொகைக்கு 15 வீத வட்டி வழங்குவதெனவும், சேமிப்புத் தொகையிலிருந்து வியாபார விருத்திக்காக கடன் கோரும் மன்ற அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் தொகைக்கு 26 வீத வட்டி அறவிட வேண்டும் எனவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

கடன்பெற்ற வர்த்தகர்கள் சிலர் வட்டித் தொகை அதிகமாக உள்ளதால் வியாபார விருத்தி கருதி குறைக்குமாறு கோரியிருந்தனர். இந்தக் கடிதம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மன்றத்தின் நிர்வாகக் கூட்டத்தில் ஆராயப்பட்டு சேமிப்புப் பணத்துக்கு 15 வீத வட்டி வழங்குவதெனவும் கடன் பெற்றவர்களிடம் 17 வீத வட்டி அறவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக மன்ற அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ந-9)

# மாகாண மட்ட வணிகப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

வட மாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட வணிகப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை பேச்சு, குறுவினா, கட்டுரை என மூன்று விடயங்களை உள்ளடக்கி நடத்தப்பட்டன.

இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

பேச்சுப் போட்டியில் தரம்-10 இல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ச.சங்கர்ஜி முதலாம் இடத்தையும், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த பி.பிரதீஸ் இரண்டாம் இடத்தையும், முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயத்தைச் சேர்ந்த வி.டினுசாந் மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

தரம்-11 இல் கிளி நொச்சி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த க.பவித்திரா முதலாம் இடத்தையும், அளவெட்டி அருணோதயக் கல்லூரியைச் சேர்ந்த இ.இனோஷா இரண்டாம் இடத்தையும், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியைச் சேர்ந்த வி.கார்த்திகாயினி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

தரம் -12 இல் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த வோ.கமில்டன் 1 ஆம் இடத்தையும், யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மீசாந்தன் 2 ஆம் இடத்தையும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த த.டினோஜா 3 ஆம் இடத்தையும் பெற்றனர்.

கட்டுரைப் போட்டியில் தரம் 10 இல் யோகபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அ.விதுர்சாயினி 1 ஆம் இடத்தையும், கிளி/முழங்காவில் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ந.அகல்யா 2 ஆம் இடத்தையும், சிதம்பரக் கல்லூரியைச் சேர்ந்த இ.லதா 3 ஆம் இடத்தையும் பெற்றனர்.

தரம் -11 இல் வ/விபுலானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த த.பிறீடோ 1 ஆம் இடத்தையும், கிளி/தருமபுரம் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த க.கிருஷாயினி 2 ஆம் இடத்தையும், வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சி.ஜதீஸ்கண்ணா 3 ஆம் இடத்தையும் பெற்றனர்.

தரம் - 12 இல் யாழ்.இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பா.சயந்தன் 1 ஆம் இடத்தையும், கிளி/முருகானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த தி.தயந்திகா 2 ஆம் இடத்தையும், வ/விபுலானந்தாக் கல்லூரியைச் சேர்ந்த என்.சுரவீனா 3 ஆம் இடத்தையும் பெற்றனர்.

குறுவினா போட்டியில் தரம் 10 இல் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த ஏ.அனுசூயா 1 ஆம் இடத்தையும், வ/இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சூ.தபோசினி 2 ஆம் இடத்தையும், வட இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த இ.விஜித்திரா 3 ஆம் இடத்தையும் பெற்றனர்.

தரம் - 11 இல் மன்/ பற்றிமா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.சிவரூபன் 1 ஆம் இடத்தையும், மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த ரி.நேகாசினி 2 ஆம் இடத்தையும், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த தி.கிருஷாந்தி 3 ஆம் இடத்தையும் பெற்றனர்.

தரம்-12 இல் வரணி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அ.கார்த்திகா 1 ஆம் இடத்தையும், வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ப.துஷானி 2 ஆம் இடத்தையும், வட இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த இ.நிஜந்தி 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். (422)

## ஆலயச் சூழலில் இளநீர் கோம்பைகள்

### உடன் அப்புறப்படுத்துமாறு அறிவுறுத்து

தென்மராட்சி, நவ.13

இந்து ஆலய வீதிகளில் நிறைந்து காணப்படும் இளநீர்க் கோம்பைகளை உடனடியாக அப்புறப்படுத்துமாறு பொலிஸாரும் சுகாதாரப் பகுதியினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த வாரம் ஆலயங்களில் இடம்பெற்ற கேதார கௌரி விரதம் மற்றும் கந்தசஷ்டி விரதம் ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்ட இளநீர்க் கோம்பைகள் ஆலய வீதிகளில் பெருமளவு காணப்படுகின்றன. மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இவற்றினால் டெங்கு நுளம்பு பெருகக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதால் இவற்றை ஆலய வீதிகளிலிருந்து அப்புறப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பரிசோதனைகளின் போது அவை அப்புறப்படுத்தப்படாமல் காணப்படின் ஆலய நிர்வாகம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## சுன்னாகம் லயன்ஸ் கழக ஆளுநர் வருகையும் கலாசார நிகழ்வும்

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் வருகையும், கலாசார நிகழ்வும் கந்தரோடை ஸ்கந்தவ ரோதயக் கல்லூரியின் கந்தையா உபாத் தியாயர் அரங்கில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் இடம்பெறும்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவரும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் ரஞ்சித் பெர்னாண் டோவும் லயன் சீமாட்டி டில்கானி பெர்னாண்டோவும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

சிறப்பு நிகழ்வுகளாக ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவிகளின் தமிழர்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நடன அவைக் காற்றுகையும் கர்நாடக இசைப்பாடலும் இடம்பெற உள்ளன. (ஓ)

## இருவருக்கு அபராதம்

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் சட்டவிரோத கசிப்பை விற்பனைக்கு வைத்திருந்த இருவரைச் சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொதுமக்கள் கொடுத்த இரகசியத் தகவலையடுத்து அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்த பொலிஸார் இருவரையும் கைது செய்தனர்.

குறித்த இருவருக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 25 |
| 05 | 10 |
| 1940 | 2012 |

அமரர்

**கணபதி மார்க்கண்டு**

ஆண்டு ஒன்று ஆகியதோ!
ஆதாரமே உம்மைப் பிரிந்து
பார்க்கும் இடம் எல்லாம்
உம் விம்பம் தானே தெரிகிறது
நீர் வாழ்ந்த வீடு இன்று கலகலப்பை
இழந்த வெறுமையில்
கனவினில் அடிக்கடி வரும் உம்முகம்!
உம் ஆத்மசாந்திக்காக என்றும்
பிரார்த்திக்கின்றோம்.

(40052) (7.8)

வளர்மதி வீதி,
கைதடி மத்தி, கைதடி.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் என்பு முறிவு வைத்திய நிபுணரும், யாழ்.ஜெய்ப்பூர் நிறுவன வைத்திய ஆலோசகருமான

**டாக்டர் க.உமாபதி**

அவர்களின்

**நாகராஜா கணபதிப்பிள்ளை**

அன்புத் தந்தை அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த கவலையடைவதோடு, அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(39900) (12.6)

முகாமைத்துவக் குழுவினரும், பணியாளர்களும்,
யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனர், யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

**திருமதி கமலாம்பாள் இரத்தினக்குருக்கள்**

இந்தியாவைப் பிறப்பிடமாகவும் மாதகல், கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பாள் இரத்தினக்குருக்கள் நேற்று (12.11.2013) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

(40056) (12.6)

C.C.T.M.S லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
T.P:021 205 2667/021 321 8409

தகவல்:
குடும்பத்தினர்.

## 16ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 27 | 29 |
| 08 | 10 |
| 1927 | 2013 |



அமரர்

**இரத்தினவேலு வேதரட்ணம்**

கடந்த 29.10.2013 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி இரத்தினவேலு வேதரட்ணம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.11.2013) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சீமா,
அளவெட்டி வடக்கு.

இ.கேதீஸ்வரன், இ.ஞானசம்பந்தர்
(நாதஸ்வரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28.01.1951



மறைவு
06.11.2011

அமரர் **நன்னியர் கணேஷ்**

திதி : 13.11.2013
(வளர்பிறை ஏகாதசி)

பாசமுடன் பார்போற்ற வையகத்தில் வாழ்ந்தீரே
காலனவன் கண்பட்டதோ கணேஷா
கவர்ந்துவிட்டான் உம் உயிரை - அப்பா
ஆண்டுகள் இரண்டு உருண்டோடிச் சென்றதையா
ஆனாலும் அழியாது உங்கள் நினைவுகள்!
எங்கள் குடும்பத் தலைவா! குலவிளக்கே
ஏங்குகிறோம் உங்கள் முகம் காண!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(40053) (7.6)

ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10.10.1934



மறைவு
22.10.2007

அமரர்
**சின்னப்பிள்ளை சுப்பிரமணியம்** (J.P)

(தென்மராட்சி மேற்கு, கைதடி ப.நோ.கூ.சங்கத் தலைவரும்,
யாழ்.விவசாய நகர்ச்சி கூ.ச.சமாசத் தலைவரும்)

திதி : 13.11.2013

ஆறாண்டு ஆனதுவோ உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்.
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்!
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(39996) (7.6.3)

கைதடி தெற்கு,
கைதடி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## வடக்கிற்கு வந்த ஊடகவியலாளர்கள் வவுனியாவில் நீண்ட நேரம் தடுத்து வைப்பு

ஓமந்தை, நவ.13

பொதுநலவாய மாநாட்டையொட்டி வருகை தந்துள்ள சர்வதேச ஊடகவியலாளர்கள் சிலர் வடக்குக்கு பயணம்செய்ய முற்பட்ட வேளையில் வவுனியாவில் தடுத்து நிறுத்தப் பட்டுள்ளனர்.

சனல் 4 வைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் வருகை தந்துள்ளனர் என்று புலனாய்வாளர்களுக்குத்தகவல்கிடைத்ததையடுத்தே அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் இவர்களில் சனல் 4 வைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பதனை உறுதி செய்ததன் பின்னர் அவர்களை வடக்கிற்கு செல்ல அனுமதித்துள்ளனர்.

கார் ஒன்றில் வடக்கு நோக்கி முதலில் சென்ற சர்வதேச ஊடகவியலாளர்களை வவுனியா கல் குணாமடு பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரண் பகுதியில் தடுத்து நிறுத்திய பொலிஸார் சுமார் அரை மணி நேரத்தின் பின்னர் வடக்கு நோக்கி, செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதனையடுத்து வான் ஒன்றில் வடக்கு நோக்கி பயணித்த சர்வதேச ஊடகவியலாளர்கள் மீண்டும் கல்குணாமடு பொலிஸ் காவலரணில் சுமார் 5 மணி நேரம் தடுத்து நிறுத்தப்பட்டு அவர்கள் தொடர்பிலானவிபரங்களைபெற்றதன்பின்னரே வடக்கு நோக்கி செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# துயர் பகிர்கின்றோம்

யாழ். போதனா வைத்தியசாலை யின்
என்பு மூட்டு வைத்திய நிபுணர்
**க.உமாபதி** அவர்களின்
தந்தையார்
**நாகராஜா**
**கணபதிப்பிள்ளை**



அவர்கள் நேற்றுமுன்தினம் (11.11.2013)
இறைபதம் அடைந்த செய்திகேட்டு துயரடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.
**Vanikaa Medicals**
(39896)(45.6) 203, Hospital Rd,Jaffna.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
12 - 07 - 1937

இறப்பு
13 - 11 - 2010

திருமதி **மனோன்மணி பழனிநாதன்**

துடித்தது இதயம் உந்தன் நினைவால்
மூன்று வருடங்கள் உருண்டோடி விட்டதம்மா
எத்தனை வருடங்கள் சென்றாலும்
ஆறாதம்மா உன் நினைவு

36/2, காட்டுக்க்ந்தோர்
ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (39988)(3.6.4)

என்றும் நினைவில்
கணவர்.

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**துரையப்பா**
**ஜெயரட்ணம்**



(ஓய்வு பெற்ற பரிசோதகர், பொலிஸ் தலைமைக் காரியாலயம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் உதவி வடமாகாண ஆணையாளர், அகல் பாதுகாப்பு சேவை இயக்குநர், முன்னாள் திடீர் மரண விசாரணை அதிகாரி,

மண்மகிழ
22.06.1936

கண்நெகிழ
06.11.2011

திதி: பூர்வபக்க ஏகாதசி

சீருறு கரவாண்டு ஐப்பசித் திங்கள் இருபது
பேருறு பூர்வபக்க ஏகாதசியில் -பார் புகழும்
துரையப்பா ஜெயரட்ணம் எனும் பண்புடைய பேராளன்
பரம பதம் சென்றடைந்த நாள்

புலவனார் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(39978)(3.6.4)

அன்பு மனைவி ராஜேஸ்வரி,
மகள் அகல்யா நவரட்ணம் (ஜேர்மனி),
மகள் சுகன்யா ரகுநாதன் (சுவிஸ்),
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை மேவி பாயும் கடல் நீர்

## மண்டைதீவு மக்கள் அச்சத்தில்



யாழ்ப்பாணம், நவ.13

மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மண்டைதீவு பிரதான வீதிக்கு மேலாக கடல்நீர் ஊடறுத்துப் பாய்கின்றது. இதனால் இந்த வீதியூடாகப் பயணிக்கும் வாகனங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றன.

பண்ணை வீதியில் மண்டைதீவுச் சந்தியில் இருந்து மண்டைதீவுக்குச் செல்லும் பிரதான வீதி புனரமைப்பின்றி நீண்டகாலமாக குன்றும் குழியும் நிறைந்ததாக காணப்படுகின்றது.

வீதியில் எந்தப் பகுதியும் சைக்கிள் மட்டுமல்ல பாதசாரிகள் கூட பயணிக்கக்கூடிய நிலையில் இல்லை.

வீதியிலுள்ள பாலங்கள், மதகுகள் உடைந்து காணப்படுகின்றன.

வீதியின் சில பகுதிகளில் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்திச் செல்லக் கூடியதாக இல்லை. விலத்திச் செல்ல முயன்றால் விபத்துக்களைத் தான் சந்திக்க வேண் டியிருக்கும் என வாகனச் சாரதிகள் கூறுகின்றனர்.

பல தடவைகளில் வீதிய்யத் திருத்தக் கோரி மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அங்குள்ளவர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது பெய்த மழையால் வீதியின் சகல பகுதிகளுமே சேதமடைந்துள்ளன. இவ்வாறு மழை தொடர்ந்து பெய்தால் வீதி முற்றாக நீரில் மூழ்கி விடுவதுடன் மண்டைதீவுடனான தொடர்புகளும் துண்டிக்கப்படலாம் என்று பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். வ-7)

## மயானங்களில் துப்புரவுப் பணிகள்

அக்கராயன், நவ.13

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக இங் குள்ள மயானங்களில் துப்புரவுப் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

அந்த வகையில் 10 இற்கும் மேற்பட்ட மயானங்கள் இதுவரை துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

கண்ணகைபுரம் மயானத்தில் நீண்ட காலத்துக்குப் பின்னர் துப்புரவுப் பணிகள் இடம் பெற்றுள்ளன.

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் இங்குள்ள மயானங்கள் கவனிப்பாரற்ற நிலையில் காடுகள் மண்டிக் காட்சியளித்தன. தற்போது இங்கு துப்புரவுப் பணிகள் இடம்பெறுவதால் மயானங்கள் துப்புரவாக் காட்சியளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-எ-18)

**காணவில்லை**



மாசார்பளையைச் சேர்ந்த **பிரகாஸ்** என்பவரை கடந்த (06.11.2013) புதன் கிழமையில் இருந்து காணவில்லை . இவருக்கு 16 வயது, சிவத்த சேர்ட்டும், வெள்ளை நிற ரவுசரும் அணிந்திருந்தார். இவரை கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு : 077 388 8513

(40061)(14.8)

## மனித உரிமைகள் குறித்த செயலமர்வு

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் முதல்வர், தவிசாளர், நகர சபைத் தலைவர், உபதவிசாளர், எதிரணித் தலைவர் ஆகியோருக்கான மனித உரிமைகள் தொடர்பான செயல மர்வு இலங்கை ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இந்தச் செயலமர்வு எதிர்வரும் 17 ஆம் திகதி மு.ப.9 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் ஒழுங்கையில் உள்ள கிறீன் கிராஸ் விருந்தக மண்டபத்தில் இடம்பெறும். செயலமர்வில் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீட விரிவுரையாளர்கள் வளவாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் விளைத்திறன் கொண்டதாக அமைய மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு இன்றியமையாத ஒன்றாக அமைவதுடன் உள்ளூராட்சி மன் றங்களுக்கும்மனிதஉரிமைகள் ஆணைக்குழுவுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தும் நிகழ்வாக இது அமையும் எனவும் யாழ்.பிராந்திய இணைப்பாளர் க.கனகராஜ் அறிவித்துள்ளார். (வ-9)

**கடை விற்பனைக்கு**

இல.137, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 120 அடி நீளம் 13 அடி அகலம் கொண்டது. தொடர்பு கொள்ளவும். (40057)(2.6)

தொடர்பு: 077 351 8131, 077 763 8134

**பணிநிலை வெற்றிடங்கள்**

**01. நிர்வாக உத்தியோகத்தர்**
பால் :- ஆண்
கல்வி :- க.பொ.த.(உ/த), கணக்குத்துறையில் முன் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.
வயது :- 50 வயதுக்கு மேற்பட்டவர்

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**விசேட குறிப்பு:-**
சைவசமய பற்றுடையவராகவும் சிறுவர்களை நன்னெறிப் படுத்தக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**02. பாதுகாப்பு உத்தியோகத்தர்**
பால் :- ஆண்
வயது :- 50 வயதுக்கு மேல்

**விசேட குறிப்பு:-**
கடமையில் முன் அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது.

**03. சமையலாளர்**
பால் :- பெண்
வயது :- 30 வயதுக்கு மேல்

**விசேட குறிப்பு:-**
சைவசமயத்தவராகவும் சமையல் கலை தெரிந்தவராகவும் விடுதியில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:-** சம்பளம் நேர்முகத்தேர்வில் கலந்து ஆலோசித்துத் தீர்மானிக்கப்படும்.
**விண்ணப்பமுடிவு திகதி:-** 25.11.2013

தலைவர்,
ஸ்ரீ பரமானந்த சிறுவர் முதியோர் இல்லம்,
வதிரி,
கரவெட்டி. (சி/12263)(2.6)
021 226 3136,
021 321 5156.

நிதியியலில் சர்வதேச அங்கீகாரமுடைய பிரித்தானியத் தராதரம் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம்

CISI
CHARTERED INSTITUTE FOR SECURITIES & INVESTMENT

ADB EKSP
Education for Knowledge Society Project

GATEWAY

கல்வி அமைச்சின்
EKSP செயற்றிட்டத்தின் கீழ்
முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
புலமைப்பரிசில்கள் பற்றிய விபரங்களுக்கு
அழையுங்கள்....

New GATEWAY TECH - Jaffna

யாழ்ப்பாணம் : 021 567 5555
சாவகச்சேரி : 021 567 6444
நெல்லியடி : 021 567 7606
கிளிநொச்சி : 021 567 4433

**யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிஷன் வித்தியாலயம்**
**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான பாராட்டு விழா-2013**



| | | | |
|---|---|---|---|
| து. அபிராம் | - 185 | இ. கிஷானன் | - 157 |
| வி. கிஷானன் | - 176 | ம. யதுஷாளினி | - 156 |
| சி.செல்வகஜன் | - 168 | ச. பகிரதன் | - 154 |

Best Wishes

இவர்களுடன் புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும், அதிபர் மற்றும் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.
ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்.

(40062)(10.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சம்பளக் கொள்கையை வகுப்பதற்கு

# 21 உறுப்பினர்களுடன் ஆணைக்குழு நியமனம்

கொழும்பு,நவ.13
தேசிய சம்பளக் கொள்கையை வகுப்பதற்காக அரசுக்கு அறிவுரைகள், ஆலோசனைகளை வழங்குவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் 21 உறுப்பினர்களைக் கொண்டுள்ள தேசிய சம்பளங்கள் ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் புதிய ஆணைக்குழுவின் நியமனத்தை அடுத்து இதுவரையில் நடைமுறையில் இருந்துள்ள தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர் எண்ணிக்கை ஆணைக்குழு கலைக்கப்பட்டுள்ளது.

அது குறித்து அதி விசேட வர்த்தமானி வெளியீடு மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

முக்கியத்துவம் பெறும் 12 விடயங்கள் சம்பந்தமாக இந்தத் தேசிய சம்பளங்கள் ஆணைக்குழுவால் அரசுக்கு அறிவுரைகள், வழிகாட்டல்கள், யோசனைகள், செயல்முறைகள் மற்றும் பரிந்துரைகள் முன் வைக்கப்படும்.

அரச ஊழியர்கள் குறித்து அரசால் வெளியிடப்படும் சம்பள மீளாய்வுகள் அல்லது கொள்கைத் தீர்மானங்களுக்கு அமைய அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பு பெற்று தேவைக்கேற்றவாறு அரச சேவையின் சட்டவரைவுகள் ஆள் சேர்ப்பு ஒழுங்குகள் திருத்தத்தையோ, பதவி உயர்வு ஒழுங்குகள் திருத்தத்தையோ மறுபரிசீலனை செய்வது குறித்து உரிய அதிகாரிகளுக்கு இந்தச் சம்பளங்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரைகள் முன் வைக்கப்படவுள்ளது.

அரச சேவையில் நிரந்தரப் பதவிகளை வகிக்கும் தொழில்சார் தகைமைகள் மற்றும் திறமைகளைக் கொண்டுள்ள அதிகாரிகள் அரச மற்றும் தனியார் பிரிவுகளில் இணைந்து கொள்வதற்காக அரச சேவையிலிருந்து விலகிச் செல்வதைத் தடுத்து விடுவதற்காக உரிய சம்பளங்கள் மற்றும் வேதன மறுபரிசீலனைகளை இடையிடையே அரசுக்கு பரிந்துரைப்பதும் இந்த ஆணைக்குழுவுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் இணைத் தலைவர்களாக டீ.எச்.நெவில் பியதிகம, ஜே.ஆர்.விமலசேன திஸாநாயக்கவும், செயலராக பந்துல சிறி விஜேரத்னவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்று ஜனாதிபதி செயலர் லலித் வீரதுங்க தெரிவித்தார். (ச-22)

## மாநாட்டால் 2 நாள்களுக்கு வாகன நெரிசல் ஏற்படலாம்

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு,நவ.13
பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ள இன்றும், நாளையும் அதிகளவிலான வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அதனால் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதி, பேஸ்லைன் வீதி, பௌத்தாலோக்க மாவத்தை, பம்பலப்பிட்டிச் சந்தியில் இருந்து பழைய நாடாளுமன்ற சுற்றுவட்டம் வரையான காலி வீதி ஆகியவற்றில் எதிர்வரும் இரு நாள்களுக்கு போக்குவரத்து மட்டுப்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களின் போக்குவரத்துக்கு மாற்று வீதிகளை பயன்படுத்துமாறும் சாரதிகளிடம் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். (ச)

## மாநாடு குறித்து பேசவும் தடை

கொழும்பு, நவ.13
பொதுநலவாய நாடுகளின் மாநாடு தொடர்பில் பேசுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

COLOMBO
10-17 NOVEMBER 2013
CHOGM 2013 Sri Lanka

பொதுநலவாய நாடுகளின் மாநாடு குறித்து பொய்யான பரப்புரைகளை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே அதற்கான பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க தெரிவித்தார்.

மாநாடு நடைபெறும் நாள்களில் கொழும்பில் வீதிகள், வர்த்தக நிலையங்கள் மூடப்படமாட்டாது.(ச)

### தவறிவிட்டது.

முத்துராஜா மஞ்சநாத் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (891280297V), வாகன அனுமதிப் பத்திரம், வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், என்பன சத்தி ரச்சந்திக்கும் ஒஸ்மானியாக் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்து தவவும் சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:- 077 2534174

மாநாட்டை முன்னிட்டு

## இறக்குமதி செய்த கார்களில் 3 நாசம்

கொழும்பு,நவ.13
பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட 54 , எஸ் 400 ரக பென்ஸ் கார்களில் மூன்று கார்கள் விபத்துக்கு உள்ளாகி பயன் படுத்த முடியாத நிலையில் உள்ளன என்று கூறப் படுகிறது.

இந்த வாகனங்களில் அரச தலைவர்களை அழைத்துச் செல்லும் வீதிகளில் நடத்தப்பட்ட முன் ஒத்திகையின் போது மூன்று கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டது.

54 பென்ஸ் கார்கள் சுங்க வரியுடன் இறக்குமதி செய்யப்பட்டதுடன் அதற்காக 88 கோடி ரூபாவையும் அரசு செலவிட்டது.

இந்த நிலையில் விபத் துக்குள்ளாகி பயன்படுத்த முடியாமல் போயுள்ள மூன்று கார்களின் பெறுமதி மூன்று கோடி 88 லட்சத்து 88 ஆயிரத்து 900 ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ச)

## புலமைப் பரிசில் பரீட்சையின் தரம் குறித்து ஆராய நடவடிக்கை

கொழும்பு,நவ.13
புலமைப்பரிசில் பரீட்சையின் தரம் தொடர்பில் கல்வி நிபுணர்களிடம் விடயங்களைக் கேட்டறிந்து கொள்வதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் 35 கல்வி நிபுணர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படவுள்ளனர் என்று அதன் ஆணையாளர் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்தார்.

அவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்படவுள்ளனர் என்று அவர் கூறினார். (ச)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியைகள் திருமதி மலர்விழி அன்ரன் தவராசாவின் தாயும், திருமதி சிறீஸ்வரி புஸ்பராசாவின் மாமியுமாகிய

திருமதி
**தங்கப்பொன்னு மாணிக்கம்**

அவர்கள் 12.11.2013 அன்று இறைபதம் எய்தியதையிட்டு துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

(சி/12264) (10,14)

### மரண அறிவித்தல்

**சோமசுந்தரம் இராசையா**
(வட்டுக்கோட்டை சின்னராசா)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் இராசையா நேற்று (12.11.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் குறித்த விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அங்களப்பாய், இணுவில் கிழக்கு, இணுவில்.
(40063) (10,14)
தகவல்: குடும்பத்தினர்.

### மரண



திருமதி **தங்கேஸ்வரி இரத்தினம்**

யாழ். கலட்டி சீனியர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், கனடா ஸ்காபரோவை வதிவிடமாகவும் கொண்ட தங்கவேஸ்வரி இரத்தினம் நேற்று முன்தினம் (11.11.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற அப்புக்குட்டி - செல்லாச்சி தம்பதியரின் அன்புமருமகளும் அப்புக்குட்டி இரத்தினத்தின் அன்பு மனைவியும் ஜெயக்குமார் ஜெயந்தி, உதயகுமார், ஆனந்தி ஆகியோரின் அன்புத்தாயும் ரதிவதனி, நாகேஸ்வரன், அதிஸ்டலக்ஷ்மி, ரவிகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான யோகரெத்தினம், மகேஸ்வரி, கந்தசுவாமி (புதுமைலோலன்), ஜெயராஜசிங்கம் மற்றும் குணராஜா (செங்கை ஆழியான்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, நடராசா, கனகம்மா, சபாரெத்தினம் மற்றும் தங்கம்மா, கனகமணி, சிவனேஸ்வரி, கமலாம்பிகை , ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரேணுகா, பிரியா, ஹம்சா ஆகியோரின் ஆசை அத்தையும் லக்சிகா, அனுசிகா, அருண், அஜந்தன், மிதுன், யதீஷன், ஆகாஷ், அவினேஷ், அபினா ஆகியோரின் அன்புப்பேரத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2013) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு (கனடா நேரப்படி) கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அப்புக்குட்டி இரத்தினம்
(கனடா - 4162871968)

கலாநிதி க. குணராசா
75/10A, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.
021 2222337

(40064)(8.14)

### மரண அறிவித்தல்

**திருமதி தங்கப்பொன்னு மாணிக்கம்**



சரசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் யோகபுரம் மல்லாவியில் .வசித்து வந்தவருமான திருமதி தங்கப்பொன்னு மாணிக்கம் நேற்று (12./11/2013) செவ்வாய்க்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னர்-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யோகம்மாவின் அன்புச் சகோதரியும், தேவகாந்தம், ஸ்ரீசந்திரபோஸ் (ஓய்வுபெற்ற இ.போ.ச ஊழியர்), தேன்மொழி (சுகாதார உத்தியோகத்தர் மல்லாவி வைத்தியசாலை ), புஸ்பராஜா (மெக்கானிக் சாவகச்சேரி), மலர்விழி (ஆசிரியை சாவகச்சேரி ம.கல்லூரி), தேவ்காந்தன் (ஆசிரிய ஆலோசகர், துணுக்காய்) ஆகியோரின் அன்புத் தாயும், நாகேஸ்வரன், அற்புதமணி, ஸ்ரீறீஸ்வரி (ஆசிரியை-சாவகச்சேரி ம. கல்லூரி), அன்ரன் தவராசா, கவிதா (ஆசிரியை- அராலி இந்துக் கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமியும், தீபன், துஷித்தா, திலீபன், அஜித்தன், லக்சன், கோசலா (ஊவா வெல்லஸ்வ பல்கலைக்கழகம்), துஷிந்தன் (வட்டு தொழிநுட்பக் கல்லூரி), சுலோஜன், இந்துசன், நிருஜன், கோபிகா, தமிழ்நிலவன், மகனியா, அபிராமி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சாம்பவி, ஆகாஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2013) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible], பருத்தித்துறை வீதி,
சரசாலை தெற்கு, சரசாலை

(40065.14.17)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### போரில்

நாடாளுமன்ற செயலர் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.
வரும் வழியில் போரில் உயிர்நீத்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஆனையிறவுக் கடல் நரேரியை அண்டியதாக ஏ-9 வீதியில் மலர் வளையம் ஒன்றை வைத்து மௌன வணக்கம் செலுத்தினார். போரில் உயிர் நீத்தவர்களுக்காக போர் நடைபெற்ற பகுதியில் அஞ்சலி செலுத்திய முத லாவது வெளிநாட்டு இராஜதந்திரி தீபக் ஒப்ராய் ஆவார். (த-5)

### மாநாட்டில்

நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்பதாக அதன் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.
பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கெடுக்கக் கூடாதென்று தமிழக சட்டசபை ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியிருந்தது. இதனையடுத்து இந்தியப் பிரதமர் இந்த மாநாட்டில் பங்கெடுக்க மாட்டார் எனவும், வெளிவிவகார அமைச்சர் பங்கெடுப்பார் எனவும் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இதனையடுத்து நேற்று அவசரமாக கூட்டப்பட்ட தமிழகச் சட்டசபையில் மேற்படி தீர்மானத்தை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா முன்மொழிந்தார்.
அதில் அவர் தெரிவித்ததாவது:-
தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்துப் பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும். இலங்கைத் தமிழர் படுகொலையை கண்டித்து 2011 இல் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. பெயரளவில் கூட பொது நலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்று ஏற்கனவே சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொதுநலவாய அமைப்பிலிருந்து இலங்கையை தற்காலிகமாக நீக்க வேண்டும்.

**மனவருத்தம்**

தமிழர்களுக்குச் சாதகமான நடவடிக்கையை மத்திய அரசு எடுக்கவில்லை. வெளி விவகார அமைச்சரை அனுப்பியிருப்பது தமிழரின் உணர்வுகளைக் காலில் போட்டு மிதிப்பதற்குச் சமம். மத்திய அரசின் முடிவுக்கு தமிழக அரசு தன் வருத்தத்தை தெரிவிக்கிறது.
தமிழர்களுக்கு ஆறுதல் அளிக்காத, உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத மத்திய அரசின் முடிவு மனவேதனையை தருகிறது. இலங்கைக்கு ஆயுதப்போர் உதவி அளித்ததற்கு பரிகாரமாக இந்தியாவிலிருந்து யாரும் பங்கேற்கக்கூடாது.

**வழக்கமான முடிவு**

பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் பங்கேற்காதது வழக்கமான முடிவாக இருக்கிறது. கடந்த 1993 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற 10 மாநாடுகளில் 5 இல் பிரதமர் பங்கேற்கவில்லை. மத்திய அரசின் முடிவைத் தமிழக மக்கள் ஒரு போதும் ஏற்கமாட்டார்கள்.
இலங்கையில் மாநாடு நடத்துவது போர்க்குற்றம் நடத்தியவர்களை பாதுகாப்பது போல் உள்ளது. மாநாட்டில் இந்தியா பங்கேற்றால் இலங்கையின் போர்க்குற்றத்தை அங்கீகரித்தது போலாகிவிடும். இலங்கையை அங்கீகரித்த பழி இந்தியாவுக்கு ஏற்படுவதை தமிழர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

**ஈழத் தமிழர்கள் துயரத்தில்**

இலங்கையில் போர் முடிந்து 4 ஆண்டுகள் முடிந்த நிலையில் தமிழர்களுக்கு எந்த உரிமையும் வழங்கப்படவில்லை. தமிழர்கள் பகுதியில் சிங்களவர்கள் வசிக்கின்றனர். தொடர்ந்து பல்வேறு இன்னல்களை இலங்கைத் தமிழர்கள் அனுபவித்து வருகின்றனர். போர்க்குற்றம் செய்தவர்கள், இனப்படுகொலை புரிந்தவர்கள் தண்டிக்கப்படவில்லை. இதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றிய முதலமைச்சர் தெரிவித்தார்.
இதன் பின்னர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**வரவேற்பு**

தமிழக அரசினால் நேற்று மாலை நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வர வேற்பதாக அதன் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.
வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் தொடர்கின்றது. இராணுவத்தினருக்கான காணி சுவீகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றை இலங்கை அரசு நிறுத்திக் கொள்வதற்கு இவ்வாறான அழுத்தங்கள் வழங்கப்படுவது வரவேற்கதக்கது என்று குறிப்பிட்டார்.
மேலும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வரும் மத்திய அரசின் முடிவை விமர்சிப்பதற்கு தனக்கு உரிமையில்லை என்றும் அவர் கூறினார்.

**விக்னேஸ்வரன் பங்கேற்கார்**

கொழும்பில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பங்கேற்கமாட்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாரும் பங்கேற்க மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (த-5)

### வெளிநாட்டு

தெரிவிக்கப்படுகின்றது.
கொழும்பில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டின் ஓர் அமர்வான சிவில், சமூக அமர்வு கெக்கிராவையில் இடம் பெற்று வருகின்றது.
இதில் பங்கெடுக்கவந்துள்ள அரசுத்தலைவர்கள், சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளடங்கிய 50 பேர் கொண்ட குழுவினர் இருநாள் பயணமாக வடக்கு வருகின்றனர்.
இரணைமடு விமான நிலையத்தை வந்தடையும் இந்தக் குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தின் அரச அதிபரை சந்திந்துக்கலந்துரையாடிய பின்னர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சென்று பார்வையிடவுள்ளனர்.
இன்றிரவு 8 மணியளவில் யாழ்ப்பாணத்தை குறித்த குழுவினர் வந்தடையவுள்ளனர்.
நாளை வியாழன் காலை குறித்த குழுவினர் நயினாதீவு நாகபூசனி அம்மன் கோயிலுக்கும், நாகதீப விகாரைக்கும் செல்வதுடன் யாழ் மாவட்ட செயலகத்தில் யாழ் அரச அதிபரைச் சந்திந்துக் கலந்துரையாடவுள்ளனர்.
இதனைத் தொடர்ந்து நல்லூர் கந்தசுவாமி கோயில், உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கும் இவர்கள் செல்வுள்ளனர். வலி.வடக்குக்குச்சென்று நிலைமைகளைப் பார்வையிடவுள்ளனர்.

### வடக்கு

களிலும் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்த மக்களின் மீளக்குடியமர்வு நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. உள்ளூரில் இடம்பெயர்ந்த ஏறக்குறைய 3 லட்சத்து 53 ஆயிரத்து 272 மக்கள் தமது இடங்களில் மீளக்குடியமர்த் தப்பட்டுள்ளார்கள்.
மீளக்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்துக்கான செயற்றிட்டங்கள்' அடிப்படை உட்கட்டுமான வசதிகள் என்பன குறிப்பிடத்தக்க அளவு அரசினாலும் நிறுவனங்களாலும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன - என்றார்.
இதேவேளை, வடக்கின் முக்கியமான பகுதியான வலி. வடக்கில் மக்கள் தம்மைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துமாறு கோரி நேற்றுமுதல் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

### வாழ்விடங்களை

நடைபெறும் நிலையில் சர்வதேசக் கவனத்தை ஈர்ப்பதற்காக எதிர்வரும் 16 ஆம் திகதி வரை தொடர் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் மாவிட்டபுரத்தில் நடைபெறும்.
வலி.வடக்கில் 24 கிராம சேவையாளர் பிரிவுகள் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாமல் சுவீகரிப்புச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சுவீகரிப்புச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலப்பரப்பில் உள்ள வீடுகளை இடித்து அழிக்கும் நடவடிக்கைகள் கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்த நிலையில் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வலி.வடக்கு மக்கள் [illegible] போராட்டத்தில் [illegible] துள்ளனர்.
மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முன்பாக நேற்றுக் காலை 8 மணியளவில் இந்தப் போராட்டம் ஆரம்பமானது.
இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன் ஆகியோரும் வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா, தவிசாளர் சி.வீ.கே. சிவஞானம், மாகாண சபை உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், பா.கஜதீபன், இ.ஆர்னல்ட், கே.சயந்தன், க.சிவாஜிலிங்கம், க.சர்வேஸ்வரன், திருமதி அனந்தி சசிதரன், அ.பரஞ்சோதி, வே.சிவயோகன், அ.பசுபதிப்பிள்ளை ஆகியோரும்,
பிரதேச சபைத் தவிசாளர்களான அ.உதயகுமார், திருமதி நா.ஐங்கரன், தி.பிரகாஷ், ப.வசந்தகுமார், அ.ஜெபநேசன், பொ.குகராஜா ஆகியோரும் கலந்துகொண்டனர்.
வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் உபதவிசாளர் ச.சஜீவன் ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.
வலி.வடக்கு மக்களில் ஆயிரக் கணக்கானோர் நேற்றைய முதல் நாளிலேயே திரண்டிருந்தனர்.
காலை 8 மணிக்கு ஆரம்பமான உணவு தவிர்ப்புப் போராட்டம் மாலை 4.30 மணி வரை இடம்பெற்றது. பெருமளவான புலனாய்வாளர்கள் அங்கு குவிக்கப்பட்டிருந்தபோதும் மக்கள் போராட்டம் எழுச்சியுடன் இடம்பெற்றது. (த-5-86)

### தமிழகத்தில்

இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி உள்ளிட்ட 300 பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கொழும்பில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு நடைபெறவுள்ளது. இலங்கையின் இறுதிக்கட்டப்போரில் மனித உரிமை மீறல்களில் இலங்கை அரசு ஈடுபட்டதெனவும் இதனால் அதற்குத் துணை போகும் வகையில் இந்த மாநாட்டில் இந்தியா பங்கெடுக்கக் கூடாதெனத் தமிழகத் தலைவர்கள் பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.
இது தொடர்பான தீர்மானமும் தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆயினும் பொது நலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளமாட்டார் எனவும் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்சித் கலந்து கொள்வார் எனவும் இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.
இதனை அடுத்து இந்தியா சார்பில் யாரும் பங்கெடுக்கக் கூடாது என தெரிவித்து தமிழகம் முழுவதும் 21 அமைப்புகள் கடையடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தன.
இதன் போது ம.தி.மு.கவினர் ரயில் மறியலிலும் ஈடுபட்டனர். இவ்வாறு ரயில் மறிப்புச் செய்த வை.கோ. உள்ளிட்ட 300 பேர் கைது செய்யப்பட்டனர். (த-5)

### இசைப்பிரியா

வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்ததாவது:-
நாங்கள் பொதுநலவாயத்தின் விழுமியங்களில் அக்கறையாக இருக்கின்றோம். பொதுநலவாயத்தின் முக்கிய விழுமிய மான பேச்சுச் சுதந்திரம் மற்றும் எழுத்துச் சுதந்திரத்தில் அக்கறையாக இருக்கின்றோம். அவற்றின் நிலைமைகள் இலங்கையில் எப்படியிருக்கின்றது என்பதைப் பார்க்கவே இங்கு வந்துள்ளேன்.

**இலங்கை அரசு பொறுப்புடன் நடக்கவில்லை**

ஊடக நிறுவனங்கள், ஊடகவியலாளர்கள் தாக்கப்படும் சம்பவங்களில் இலங்கை அரசு பொறுப்புடன் நடக்கவில்லை - என்றார்.
'சனல்-4' தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்ட இசைப் பிரியாவின் காணொலி தொடர்பில் கனேடிய அரசின் நிலைப்பாடு என்ன என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

**இசைப்பிரியா காணொலி**

இசைப்பிரியாவின் காணொலியைப் பார்த்தேன். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று முன்னரே வலியுறுத்தப்பட்டுள்ளது: அதை நாம் தொடர்ந்து வலியுறுத்துவோம்.
அது எங்களின் கொள்கை.

**தென்னாபிரிக்கா முன் உதாரணம்**

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். தென்னாபிரிக்காவில் எவ்வாறு நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்காக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அமைக்கப்பட்டதோ- அதனை முன் மாதிரியாகக் கொண்டு இலங்கை செயற்பட வேண்டும் - என்றார். (த-5)

### யாழ். - கொழும்பு

மாநாட்டில் பங்கெடுக்க வரும் அரசுத் தலைவர்கள் வடபகுதிக்கும் செல்ல வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்த நிலையில், பொதுநலவாய மாநாடு முடியும் வரையிலான காலப் பகுதி வரை யாழ்ப்பாணத்துக்கான விமான சேவை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
உள்நாட்டு விமானப் போக்குவரத்துச் சபையினால் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமையவே இந்தச் சேவைகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் இடைநிறுத்தியுள்ளதாக விமான சேவையில் ஈடுபடும் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.
பொதுநலவாய மாநாட்டில் பங்குபெறவரும் தலைவர்கள் செய்தி சேகரிப்புக்கு வருகைதரும் ஊடகவியலாளர்கள் வடபகுதிக்குச் செல்வதைத் தடுக்கும் நோக்கத்துடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. (த-5)

### இன்னுமா இல்லை



ஆழ்ந்த கரிசனையை இலங்கை அரசிடம் சுட்டிக்காட்டுவோம் என்று தெரிவித்தார் தீபக் ஒப்ராய்.
யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த கனேடிய நடாளுமன்றச் செயலர் தீபக் ஒப்ராய் 'உதயன்' அலுவலகத்துக்கும் வருகைதந்தார். 'உதயன்' மீது இதுவரை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் அவர் விரிவாகக் கேட்டறிந்தார். அது தொடர்பான ஒளிப்படங்களையும் பார்வையிட்டார்.
இதன் பின்னர் அவர் கருத்துத் தெரிவிக்கையில் இந்தப் படங்களைப் பார்த்தபோது அதிர்ச்சியாக இருக்கின்றது. இவை பேச்சுச் சுதந்திரத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் இந்த மாதிரி நடத்தப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் வழக்குகள் தொடரப்படாமை எமக்கு அதிருப்தியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகின்றது.
ஊடகங்கள் மீதான தாக்குதல் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்புடன் நடக்கவில்லை. பொதுநலவாயத்தின் விழுமியங்களை நிலைநாட்ட கனடா தொடர்ந்தும் வலியுறுத்தும்.
ஊடகங்கள் மீதான தாக்குதல்களுக்கு அரசு பொறுப்புக் கூற வேண்டும். ஊடகங்களைப் பாதுகாக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இலங்கை அரசு அவ்வாறு செயற்பட வில்லை. இதனை ஆழ்ந்த கரிசனைக்குரிய விடயமாக இலங்கை அரசிடம் சுட்டிக் காட்டுவோம். இலங்கை அரசின் கடமை பத்திரிகையாளர்களையும், பத்திரிகை நிறுவனங்களையும் பாதுகாப்பது- என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதம் விளாசினார் ஜெயதர்ஷன் ஹாட்லியை வென்றது சென்றல்



யாழ்ப்பாணம்,நவ.13
ஜெயதர்ஷன் சதம் விளாசியதால் பருத்தித்துறை ஹாட்லியை வெற்றி கொண்டது யாழ். மத்திய கல்லூரி அணி.

அகில இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் 13 வயதுப் பிரிவு அணிகளின் பிரிவு III இற்கான கிரிக்கெட் ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.



இதில் தனது முதலாவது இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி 21 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் கோபிநாத் 12 ஓட்டங்களையும், கஜிதரன், 4 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் மதுஷன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 4 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் பனுசியன் 6 பந்து பரிமாற்றங்கள் பந்துவீசி 10 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இனிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணியினர் 52 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் ஜெயதர்சன் ஆட்டம் இழக்காமல் 100 ஓட்டங்களையும், மதுஷன் 48 ஓட்டங்களையும், ராஜ்கிளிங்ரன் 14 ஓட்டங்களையும், அனஸ்ராஜ் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஹாட்லிக் கல்லூரி அணி சார்பில்

> “_”
>
> யாழ். மத்திய கல்லூரி அணி ஒரு இன்னிங்ஸ் 110 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

கஜீபன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு இரண்டு இலக்குகளை வீழ்த்தினர்.

தனது 2 ஆவது இனிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிக் கல்லூரி அணியினர் 64 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 64 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் விபுலன் 17 ஓட்டங்களையும் கோபிநாத் 8 ஓட்டங்களையும் அபிராம் 5 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி சார்பில் அனஸ்ராஜ் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 14 ஓட்டங்களுக்கு 4 இலக்கினையும் வனுசியன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 4 இலக்கினையும் வீழ்த்தினர்.

யாழ். மத்திய கல்லூரி அணி ஒரு இன்னிங்ஸ் 110 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (த-23)

## சங்கானை கோட்டத்தின் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.13
சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயது, 16 வயது,18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சுழிபுரம் விக்ரோறியா மைதானத்தில் இடம் பெற வுள்ளது. (த-23)



## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ .13
வவுனியா உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே பண்டாரவன்னியன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு வவுனியா வைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் மூன்றாவது காலிறுதியாட்டத்தில் கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)



இலங்கை காரத்தே சம்மேளனத்தால் நடத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான காரத்தே சுற்றுப் போட்டியில் ஜே.கே.எம்.ஓ கழகத்தின் சார்பில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்கள். (த-17)

# முல்லைத்தீவில் உதைபந்தாட்டப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ.13
அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்காக முல்லைத்தீவு மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையே நடைபெறும் விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான உதைபந் தாட்டப் போட்டி இன்று புதன்கிழமையும், கரப்பந்தாட்டப் போட்டி நாளை வியாழக் கிழமையும் இடம்பெறவுள்ளன. (த-23)

# ஆட்டங்களில் சாதித்த அணிகள்

யாழ்ப்பாணம், நவ.13
உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயதுப் பிரிவு, 16 வயதுப் பிரிவு, 18 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் கடந்த வாரம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து ஏழாலை சிறிமுருகன் வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் இணுவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மயிலணி சைவ மகா வித்தியாலய அணி



மோதிக் கொண்டது.

இதில் இணுவில் இந்துக் கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிக் கொண்டது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அணியை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் குப்பிளான் சைவ வித்தியாலய அணியை எதிர்த்து புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் குப்பிளான் விக்னேஸ்வரா வித்தியாலய அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தைத் தன தாக்கிக் கொண்டது.

18 வயதுப் பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து இணுவில் மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# எவ்.ஏ.கிண்ண ஆட்டம் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், நவ.13
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இது வரையில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் பொலனறுவை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

திருகோணமலை ஈஸ்ரேர்ன் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் பொலனறுவை நந்தமித்திர விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் திருகோணமலை ஈஸ்ரேர்ன் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)



> “_”
>
> திருகோணமலை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிஸ்பா மீது யூசுப் விமர்சனம்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் மீது பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் மொஹமட் யூசுப் கடுமையான விமர்சனங்களை வெளிப் படுத்தியுள்ளார். பாகிஸ்தான் அணியின் தோல்விகளை யடுத்தே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் அணி தென்னாபிரிக்காவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை 1-4 என்ற கணக்கில் இழந்துள்ளதையடுத்தே இந்த விமர்சனம் முன்வைக்கப் பட்டுள்ளது.

மிஸ்பா உல் ஹக் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களுக்குத் தவறான உதாரணம் எனக் குறிப்பிட்ட மொஹமட் யூசுப், வேகப்பந்து வீச்சாளர்களுக்கெதிராகத் துடுப்பெடுத்தாடுவ தற்கு மிஸ்பா உல் ஹக்கின் துடுப்பாட்ட நுட்பம் பிழை யானது எனத் தெரிவித்தார்.



மிஸ்பா உல் ஹக்கிடம் போதுமான துடுப்பாட்ட அடிகள் கிடையாது எனக் குறிப்பிட்ட மொஹமட் யூசுப், அதன் காரணமாக மிஸ்பா உல் ஹக்கினால் முன்வரிசையில் துடுப்பெடுத்தாட முடியாதுள்ளது எனவும், அதன் காரணமாக அணியை உற்சாகப்படுத்தும் விதமாக அவரால் செயற்பட முடியாதுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

மிஸ்பா உல் ஹக்கிடம் விநோதமான துடுப்பாட்ட நுட்பமொன்று காணப்படுவதாகக் குறிப்பிட்ட மொஹமட் யூசுப், ஆரம்பத்தில் மிஸ்பா உல் ஹக் அதிக பந்துகளை எடுத்துக் கொள்வதாகவும், அவரால் போட்டியின் முடிவைத் தீர்மானிக்கும் இனிங்ஸ்களில் விளையாட முடியாது எனவும் குறிப்பிட்டார்.

மிஸ்பா உல் ஹக் ஒரு சுயநலவாதித் துடுப்பாட்ட வீரர் எனக் குற்றஞ்சாட்டிய மொஹமட் யூசுப், ஏனைய துடுப்பாட்ட வீரர்களிலும் இந்தச் சுயநலவாதத் தன்மை தற்போது வெளிப்பட ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (கு)



# ஆஸியின் ஆஷஷ் குழாம் அறிவிப்பு

ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஆஷஷ் தொடரின் முதலாவது போட்டிக்கான ஆஸ்திரேலிய குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. 12 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 21ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டிக்கான குழாமே அறிவிக்கப்பட்டுள்ளது.

மைக்கல் கிளார்க் தலைமையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் குழாமில் எதிர்பார்க்கப்பட்ட வீரர்களே இடம்பெற்றுள்ளனர். ஜோர்ஜ் பெய்லி, ஜேம்ஸ் பக்னர், மிற்சல் ஜோன்சன் ஆகியோர் இக்குழாமில் சேர்க்கப்பட் டுள்ளனர்.

அண்மைக்கால ஆஸ்திரேலிய ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்திய ஜோர்ஜ் பெய்லி, அண்மையில் இடம்பெற்ற இந்தியத் தொடரில் அணித்தலைவராகவும் சிறப்பாகச் செயற்பட்டிருந்தார்.

ஜோர்ஜ் பெய்லி தவிர, மிற்சல் ஜோன்சனும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியத் தொடரில் காயமடைந்த சகலதுறை வீரர் ஷேன் வொட்சனும் இந்தக் குழாமில் இடம்பெற்றுள்ளார். அவர் முதலாவது போட்டிக்கு முன்னதாகக் குணமடைந்து விடுவார் என்ற நம்பிக்கை காணப்படுவதாகவும், அத்தோடு, முதலாவது போட்டியில் பந்துவீசுவார் என்ற நம்பிக்கை காணப்படுவதாகவும் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

கிறிஸ் றொஜர்ஸ், டேவிட் வோணர், ஷேன் வொட்சன், மைக்கல் கிளார்க், ஸ் ரீவன் ஸ்மித், ஜோர்ஜ் பெய்லி, பிரட் ஹடின், ஜேம்ஸ் ஃபோக்னர், மிற்சல் ஜோன்சன், பீற்றர் சிடில், றயன் ஹரிஸ், நேதன் லையன்.(கு)

# அணியில் சமநிலை வேண்டும்

அணியில் இளைய வீரர்களும் அனுபவ வீரர்களும் இணைந்த சமநிலை தேவை என இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

நியூஸிலாந்து அணி இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் கொண்ட தொடரில் பங்குபற்றிவரும் நிலையில், இத்தொடரின் முதலாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டிருந்தது.

இந்தத் தொடரை வெல்வதே இலங்கை அணியின் முக்கியமான நோக்கமாக உள்ளதாகவும் முதலிரு போட்டிகளையும் வென்று தொடரைக் கைப்பற்றினால் மூன்றாவது போட்டியில் இளைய வீரர்கள் அநேகருக்கு வாய்ப்பு வழங்கப்படுவதைப் பற்றி ஆராயப்படுமெனவும் அஞ்சலோ மத்தியூஸ் முன்னர் தெரிவித்திருந்தார்.

தற்போது முதலாவது போட்டி முடிவின் றிக் கைவிடப்பட்டதால் இளைய வீரர்கள் தொடர்பான திட்டங்கள் மாற்ற மடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள் ளார்.

ஏற்கனவே தெரிவித்ததன்படி இந்தத் தொடரை வெல்வதே தங்களது முக்கிய நோக்கமாக உள்ளதாகக் குறிப்பிட்ட அஞ்சலோ மத்தியூஸ், அதற்காக அடுத்த 2 போட்டிகளையும் நிச்சயமாக வெல்ல வேண்டியுள்ளதாகக் குறப்பிட்டார்.



இலங்கை அணியின் துடுப்பாட்டத்தில் திலக ரட்ண டில்ஷான், மஹேல ஜெயவர்த்தன, குமார் சங்கக்கார ஆகியோரைத் தவிர ஏனைய வீரர்கள் அனைவரும் இளைய வீரர்களாகவே ஏற்கெனவே உள்ளதாகக் குறிப்பிட்ட அவர், அணியில் இளைய வீரர்களும் அனுபவ வீரர்களும் இணைந்த சமநிலை தேவைப்படுவ தாகக் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் 2 போட்டிகளில் மாத்திரம் பங்குபற்றியிருந்த திமுது கருணாரத்னவுக்கு முதலாவது போட்டியில் வாய்ப்பு வழங்கப்பட்டி ருந்தபோதிலும், அவர் முதலாவது பந்திலேயே ஆட்டமிழந்திருந்தார். எனினும் அவருக்கான வாய்ப்புக்கள் தொடர்ந்தும் வழங்கப்படுமென அஞ்சலோ மத்தியூஸ் உறுதியளித்துள்ளார். (கு)

# மற் பிரயர் சந்தேகம்



ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான சரித்திரப்பூர்வமிக்க ஆஷஷ் டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணியின் உப தலைவரும், விக்கெட் காப்பாளருமான மற் பிரயர் பங்குபற்ற மாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது. அவருக்கு ஏற்ப டுள்ள உபாதை யையடுத்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்து அணியின் அண்மைக்கால வெற்றிகளில் முக்கிய பங்காற்றியவர் எனக் கருதப்படம் மற் பிரயர், பயிற்சிப் போட்டியில் பங்குபற்றிக் கொண்டிருக்கும்போது உபாதைக்குள்ளாகியிருந்தார். அவரது கெண்டைக்கால் பின் தசையில் அவருக்கு உபாதை ஏற்பட்டிருந்தது.

போட்டியிலிருந்து அவர் உடனடியாக விலகியதோடு, 'ஸ்கான்' பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டிருந்தார். அதன்போது மற் பிரயருக்கு கெண்டைக்கால் பின் தசையில் கிழிவு ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர் முதலாவது போட்டியில் பங்குபற்றுவாரா என்ற சந்தேகம் காணப்படுகிறது. அவருக்கான வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுவதாகவே கருதப்படுகிறது. இந்நிலையில் மற் பிரயர் முதலாவது ஆஷஷ் போட்டியில் பங்குபற்ற முடியாது போனால், அவருக்குப் பதிலாக ஜோனி பெயர்ஸ்ரோ விக்கெட் காப்பாளராகக் களமிறங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஆஷஷ் போட்டி நவம்பர் 21ம் திகதி ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36 கோடி ரூபா பரிசுத் தொகை தட்டிச் சென்றார் ஜோகோவிச்

ஏடிபி உலக கிண்ணப் போட்டியின் இறுதிச் சுற்றில் நடாலை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார் ஜோகோவிச்.

உலகத் தரவரிசையில் முதல் 8 இடத்தில் உள்ள வீரர்கள் பங்கேற்ற ஏடிபி உலகக் கிண்ண இறுதிப் போட்டி லண்டனில் நடந்தது.

இதன் இறுதி போட்டியில் நேற்று முன் தினம் முதல்நிலை வீரரான ஸ்பெயினின் நடால், 2ஆம் நிலை வீரரான சேர்பியாவின் ஜோகோவிச்சை எதிர்த்து ஆடினார்.

ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 6-3, 6- 4 என்ற நேர் செற்றில் நடாலை தோற்கடித்துச் சம்பியன் பட்டம் வென்றார்.

இந்த ஆட்டம் 1 மணி நேரம் 36 நிமிடங்கள் நடந்தது. சம்பியன் கிண்ணத்துடன் ஜோகோவிச்சுக்கு ரூ.36 கோடி பரிசுத் தொகை வழங்கப் பட்டது.

2ஆவது இடம் பிடித்த நடால் ரூ. 18 கோடி பரிசுத்தொகை பெற்றார். (த)



## CHEMISTRY RANK LIST A/L 2014

| | MEDIUM | NAME | SCHOOL | MARKS | RANK |
|---|---|---|---|---|---|
| 1 | T | Abiramy Sothithasan | J.V.G.H.S | 92 | 1 |
| 2 | T | Mathumai Thevamanoharan | J.V.G.H.S | 87 | 2 |
| 3 | E | P.Darukeesan | J.H.C | 84 | 3 |
| 4 | E | K.Kowsingan | J.H.C | 84 | 3 |
| 5 | T | Kanagarajah Pavalayan | J.H.C | 76 | 5 |
| 6 | T | Pavalakanthan Pirathees | J.H.C | 76 | 5 |
| 7 | E | Brihadiswaran Gunavaran | J.H.C | 76 | 5 |
| 8 | T | Narmatha Thirugnanaselvan | J.V.G.H.S | 72 | 8 |
| 9 | T | Saranga Sabhanayakam | J.V.G.H.S | 72 | 8 |
| 10 | T | Kumararatnam Umasuthan | J.H.C | 71 | 10 |
| 11 | T | Robert Dean Jenifert | J.S.J.C | 70 | 11 |
| 12 | T | Kirushnapillai Piriyangan | J.H.C | 70 | 11 |
| 13 | T | Mayuravaani Mathurananthan | | 70 | 11 |
| 14 | T | Dhadchayini Rajahram | J.V.G.H.S | 69 | 14 |
| 15 | T | Tharshika Sathiyathasan | J.V.G.H.S | 68 | 15 |
| 16 | T | Senthitchelvan Arunan | J.H.C | 68 | 15 |
| 17 | E | Sharmija Jeyarajah | J.V.G.H.S | 68 | 15 |
| 18 | T | Nithusha EdwinSelvanayagam | J.C.G.C | 67 | 18 |
| 19 | T | Vaishnavi Thangarajah | J.V.G.H.S | 67 | 18 |
| 20 | T | I.Mayurathan | | 67 | 18 |
| 21 | T | Bakeerathan Ragavi | J.V.G.H.S | 67 | 18 |
| 22 | E | Muhunthan Thanushihan | J.S.J.C | 67 | 18 |
| 23 | E | Peranantharajah Deneshan | J.H.C | 67 | 18 |
| 24 | E | Anosha Ignatius | J.V.G.H.S | 67 | 18 |
| 25 | E | Mohanathas Moganalakshan | J.H.C | 66 | 25 |
| 26 | T | Ashokumar Thiruventhan | J.H.C | 65 | 26 |
| 27 | T | Pararajasingam Sivaniruban | J.S.J.C | 65 | 26 |
| 28 | T | Sukumar Piriyatharshan | | 65 | 26 |
| 29 | E | Sivalingam Ampatishan | J.H.C | 65 | 26 |
| 30 | E | Thilakshi Chandrasekar | J.V.G.H.S | 65 | 26 |

Dias B.Sc (Hons) Spl in Chem

New Science World Jaffna


# பொலார்ட் இல்லை

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகலதுறை வீரர் கெரான் பொலார்ட் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடர் இடம் பெற்றுவரும் நிலையில், ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடர் நவம்பர் 21ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. இந்தத் தொடரில் 3 போட்டிகள் இடம் பெறவுள்ளன.



மேற்கிந்தியத் தீவுகள் அணியின் சகலதுறை வீரர் கெரான் பொலார்ட் இத் தொடரில் பங்குபற்ற முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்டுள்ள தோட்பட்டை உபாதை காரணமாகவே அவர் இத் தொடரில் பங்குபற்ற முடியாது போயுள்ளது. இவர் தவிர, வேகப் பந்து வீச்சாளர் கேமர் றோச்சும் உபாதை காரணமாகப் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற முத்தரப்பு ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர், பாகிஸ்தானுக்கெதிரான தொடர் ஆகியவற்றில் இடம் பெற்றிருக்காத கெரான் பவல், வீரசம்மி பேர்மாள், நர்சிங் டியோநரைன் ஆகியோர் இக்குழாமில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

டுவைன் பிராவோ தலைமையில் இந்தக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்: டுவைன் பிராவோ, ரீனோ பெஸ்ற், டெரன் பிராவோ, ஜோன்சன் சார்ல்ஸ், நர்சிங் டியோநரைன், கிறிஸ் கெய்ல், ஜேசன் ஹோல்டர், சுனில் நரைன், வீரசம்மி பேர்மாள், கெரான் பவல், டினேஷ் ராம்டின், ரவி ராம்போல், டெரன் சமி, மார்லன் சாமுவேல்ஸ், லென்டில் சிமன்ஸ். (த)

# மைக்கல் கிளார்க் புலம்பல்

ஆஸ்திரேலிய அணியின் அணித்தலைவரான மைக்கல் கிளார்க் டி.ஆர்.எஸ் முறை சந்தேகம் தரும் வகையில் உள்ளது என தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில் நடக்கும் போட்டித் தொடர்களில் டி.ஆர்.எஸ் முறை பயன்படுத்தப்படுகிறது.

சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த ஆஷஸ் தொடரில், டி.ஆர்.எஸ் முறையில் வழங்கப்பட்ட பல தீர்ப்புகள் சர்ச்சையை கிளப்பின.

இதனால், இப்போது பல அணிகள் டி.ஆர். எஸ்., குறித்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்த வரிசையில் இணைந்துள்ளார் மைக்கல் கிளார்க்.

இது குறித்து அவர் கூறுகையில், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்டில் ஸ்டூவர்ட் பிராட், பேட்டில் பந்து பட்டது தெளிவாகத் தெரிந்தது. அவரை எல்.பி.டபிள்யு முறையில் வெளியேற்றி இருக்க வேண்டும்.

இதற்கு நடுவர்கள் ஆட்டமிழப்புத் தரவில்லையெனில், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உறுதி செய்திருக்க வேண்டும்.

அணித்தலைவர் என்ற முறையில், தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சரியான முடிவுகளை பெறவேண்டும் என்று தான் நானும் விரும்புகிறேன்.

ஒருவேளை தொழில்நுட்பம் சரியில்லை எனில், இதை பயன்படுத்தக் கூடாது. ஹொட்ஸ்பொட் முறையை உருவாக்கிய வாரன் பிரென்னன் கூட, அனைத்தையும் கண்டு பிடிக்க முடியாது என்பதை ஒத்துக் கொண்டுள்ளார்.

இதனால், முழுமையான நம்பிக்கை வரும் வரை இம்முறையை நிறுத்தி வைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார். (த)


SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச,தனியார் ஊழியர்கள்,பல்கலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
சனி,ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 16.11.2013 சனிக்கிழமை
பிரிவு:1 01.00-03.00 பிரிவு:2 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் எவராவது சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பிவழங்குவதற்கான உத்தரவாதம்.
SAAMSON Language School 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

அரிய சந்தர்ப்பம்!
ஜேர்மனியில் படிக்க IELTS தேவையில்லை
ஜனவரியில் மாணவர் உள்வாங்கல்
விண்ணப்பமுடிவு 16.11.2013
மிகக் குறைந்த கட்டணங்கள் பகுதியாகச் செலுத்தலாம்.
முன்னர் ஆலோசனை பெற்றவர்களும் இலவசமாக ஆலோசனை பெறலாம் (நிபந்தனைகளுடன்) (59894)(5.6.4)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

மிகப் பிந்திய அதிரடி வரவு
ஆஸ்திரேலியாவில் Hotel முகாமைத்துவத்தில் படிக்க உழைக்க PR பெற அரியவாய்ப்பு
விசா வகை 457
குடும்பமாகச் சென்று படிக்க உழைக்க அரிய வாய்ப்பு
3 பேருக்கு மட்டுமே முத்தான வாய்ப்புகள், முன்னர் ஆலோசனை பெற்றவர்களும் இவ் ஆலோசனையை இலவசமாகப் பெறலாம்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

புதிய அத்தியாயம்
டென்மார்க்கில் படிக்க உழைக்க அரியவாய்ப்பு!
உணவு, இருப்பிடம் இலவசம் 17.11.2013 மட்டுமே இவ்வாய்ப்பு
5 பேர் மட்டுமே இணைக்கப்படுவர் (59876)(5.6.4)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090

திசைகாட்டி தரும் அதிரடி வரப்பிரசாதம், பகுதிகளாக கட்டணங்கள் செலுத்தலாம்
* கனடாவில் படிக்க மாதாந்தம் 2 இலட்சம் வரை உழைக்க சட்ட ஆலோசனை உணவு இருப்பிடம் இலவசம் 3 பகுதிகளாகக் கட்டணங்கள் செலுத்தலாம். இவ்வாய்ப்பு 16.11.2013 வரை மட்டுமே
* முன்னர் ஆலோசனை பெற்றவர்கள் இந்த ஆலோசனைய்ய இலவசமாகப் பெறலாம்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 2219016, 021 5689090



தேவை (Peon)
யாழ். நகரிலுள்ள நிறுவனம் ஒன்றிற்கு காரியாலய உதவியாளர் (பெண்கள்) தேவை.
தொடர்பு: 078 528 5342 (39875)(4.6.3)

கணனி, ஆங்கில கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
நடைமுறை வாழ்விற்கு அவசியமான ஆங்கில பேச்சுப் பயிற்சிகள் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்
குறுகிய காலத்தில் மிகக்குறைந்த கட்டணத்துடன் உங்கள் ஆங்கில பேச்சுத்திறனை வளர்த்துக் கொள்வதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
16.11.2013
18.11.2013 காலை 10.00 மணி
மேலதிக விபரங்களுக்கு :-021 4 922 741
IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

தேவை
பளை, எழுதுமட்டுவாழ், கொடிகாமம் போன்ற இடங்களில் தென்னந்தோட்டம் தேவை. வெறுங்காணி ஆயினும் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 077 4163146, 021 320 5939

வீடு வாடகைக்கு தேவை
யாழ் மாநகர சபைக் குட்பட்ட இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:- 077 5704493


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

> பொறுமையுள்ளவனாயின் அனைத்தையும் நல்லதாக்கி விடுகிறான்; ஆத்திரம் உள்ள மனிதன் நல்லதையும் தீயதாக்கி விடுகிறான்.
>
> ஓர் அறிஞர்


# புதன் பொய்கை A

உதயன் · நவம்பர் 13 2013 புதன்கிழமை பக்கங்கள்: எட்டு


ராஜராஜன்



# பூமித்தாய் மன்னிக்க மாட்டாள்

மெல்ல மெல்லச் சுழன்று கொண்டிருக்கும் உருண்டை வடிவிலான பூமிப் பந்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்தப் பிரபஞ்சத்தில் பூமியில் தான் உயிரினங்கள் வாழமுடியுமென இதுவரை கூறப்பட்டு வந்தது. ஆனால் அதனைப் பொய்ப்பிக்கும் வகையில் செவ்வாய்க் கிரகத்திலும் உயிரினங்கள் வாழ முடியுமென்ற நம்பிக்கை தற்போது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மனிதர்கள் அங்கு செல்வதற்கான ஏற்பாடுகளும் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காலப்போக்கில் மனிதர்கள் அங்கே நிரந்தரமாகக் குடியேறுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவையெல்லாம் பூமியின் இருப்புத் தொடர்பான அவநம்பிக்கையின் வெளிப்பாடுகளாகவும் இருக்கலாம். ஏனென்றால் சமீப நாள்களாகவே பூமியின் ஆயுள்காலம் தொடர்பான விவாதங்கள் இடம்பெற்று வருவதைக் காண முடிகின்றது.

பூமியானது சூரிய கிரகத்திலிருந்து பிரிந்த ஒரு பகுதியெனக் கூறுவார்கள். ஆரம்பத்தில் இதில் உயிரினங்கள் வாழ்வதற்கான சூழ்நிலை காணப்படவில்லை. பின்னர் இதன் வெப்பநிலை தணிந்து உயிரினங்கள் வாழ்வதற்குரிய ஏதுநிலை உருவாகியது. காற்று, நீர், வெப்பம் என்பன சாதகமான நிலையில் காணப்பட்டதால் உயிரினங்கள் இங்கு தோன்ற ஆரம்பித்தன.

ஆதிகால மனிதர்கள் இயற்கையை ஒட்டியதாகத் தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டதால் பூமித் தாய்க்கு எந்தவிதமான தொல்லைகளும் ஏற்படவில்லை. அன்று வாழ்ந்த மனிதர்கள் பூமியைத் தமது தாயெனப் போற்றினர். பூமித்தாயும் அவர்களை அரவணைத்து மகிழ்ந்தாள், அள்ளி அள்ளிக் கொடுத்தாள்.

ஆனால் இன்று அந்த நிலை இல்லை. மனிதர்கள் தாம் வாழ்கின்ற பூமிக்கு எவ்வளவு கெடுதல்களைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து கொண்டிருக்கின்றனர்.

தம்மை வாழ வைப்பதே இந்தப் பூமிதான் என்ற நன்றியைக் கூட மறந்து கெடுதல் புரிகின்றனர். இதனால் ஏற்படக்கூடிய எதிர் விளைவுகளை இவர்கள்தான் அனுபவிக்க வேண்டும் என்பதை எண்ணுவதற்கு இவர்கள் ஒரு போதுமே முற்படுவதில்லை.

பூமியின் சம அளவைப் பேணுவதற்கு அதன் மூன்றில் இரண்டு பகுதி நீராகவும், மூன்றில் ஒரு பகுதி காடுகளாகவும் அமைந்திருத்தல் வேண்டும். மேலும் மரங்கள் பெரும் பயனுள்ளவையாகக் காணப்படுகின்றன. மழை பெய்வதற்கும், தீமை விளைவிக்கின்ற காற்றை உறிஞ்சுவதற்கும் உயிரினங்களுக்குத் தேவையான காற்றை வெளிவிடுவதற்கும் மரங்கள் பெரும் பங்கை ஆற்றி வருகின்றன.

மேலும் நிலத்தின் வளமும் மரங்களால் பாதுகாக்கப்படுகின்றது. இவை நிழலைத் தருவதோடு விலங்குகளுக்குப் பாதுகாப்பும் வழங்குகின்றன. இவ்வாறு பெரும் பயனுள்ளவையாக விளங்கும் மரங்கள் பல்வேறு தேவைகளுக்காக அழிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலை தொடருமேயானால் எதிர்காலத்தில் காடுகளே இல்லாததொரு நிலை உருவாகிவிடும். இதனால் பாதிக்கப்படுவது இந்தப் பூமிதான் என்பதை மனிதர்கள் ஒரு கணமாவது எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேலும் உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கு தூய்மையான நீர் அவசியமானது. இதனால்தான் 'நீரின்றி அமையாது' உலகு என்று கூறிச் சென்றார்கள் எமது முன்னோர். இதனைக் கவிஞர்கள் வானம் அழும்போது பூமித்தாய் சிரிக்கிறாள் என்று கூறுவார்கள். மழை பெய்து பூமியில் உள்ள பயிரினங்கள் எல்லாம் செழித்து வளர்ந்து பூரிப்புடன் காணும்போது அதன் அழகே அலாதியானது. இந்த வேளையில் பூமித் தாயும் அழகுடன் காட்சி யளிக்கின்றாள். மேலும் போதிய மழை பொழியும்போதுதான் உயிரினங்களுக்குத் தேவையான உணவுகளும் விளைய முடியும். இதற்கு மரங்கள் பேருதவி புரிந்து வருகின்றன. இவை அழிக்கப்படும் போது மழைவீழ்ச்சி குறையும். பூமியும் வறண்டு போய் பரிதாபமாகக் காட்சியளிக்கும்.

இன்று உலகம் வெப்ப மயமாவது குறித்துப் பல்வேறு கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றன. இதனால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள் குறித்தும் எச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றன. நவீன விஞ்ஞானம் பூமிக்குத் தந்த பரிசுதான் இது. இதன் விளைவாகத் துருவப் பிரதேசங்களிலும், உயர்ந்த மலைகளிலும் உறைநிலையில் காணப்படும் பனிப்பாறைகள் உருக ஆரம்பிக்கும். இதனால் கடல் மட்டம் உயர்ந்து நிலப் பகுதிகள் கடலினுள் ஆழ்ந்துவிடக்கூடிய நிலையொன்று உருவாகும். மேலும் நதிகள் பெருக்கெடுப்பதால் மக்கள் பேரவலங்களை எதிர்கொள்வார்கள்.

பூமியில் அடிக்கடி ஏற்படும் நில நடுக்கங்களுக்குப் பெரிய அணைக்கட்டுக்கள் அமைக்கப்பட்டு நீரைத் தேக்கி வைப்பதும் ஒரு காரணமென விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பிட்டதொரு இடத்தில் அதிகளவு நீரைத் தேக்கி வைப்பதால் பூமி தனது சமநிலையை இழப்பதாகவும் இதனால் பூமியின் அச்சுப் பகுதியிலுள்ள பாறைகள் நகர்ந்து நில நடுக்கம் ஏற்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் காலநிலையில் ஏற்படும் மாற்றங்களால் சூறாவளி, சுனாமி, கடல் கொந்தளிப்பு போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

உலக சனத்தொகை மிக வேகமாக அதிகரித்துச் செல்வதும் மற்றுமொரு நெருக்கடியாக உருவெடுத்துள்ளது. மக்களின் பெருக்கத்துக்கு ஏற்ற வகையில் உலகின் வளங்களும் அதிகரிக்கப்படாமை காரணமாக பெரும் அவல நிலையொன்று உருவாகி வருகின்றது. இப்போதே வறிய நிலையிலுள்ள நாடுகளைச் சேர்ந்த மக்கள் ஒருவேளை உணவு கூடக் கிடைக்காத நிலையில் பட்டினியால் வாடி வருகின்றனர். இந்த நிலையில் தற்போது 700 கோடியாக இருக்கும் மக்கள் தொகை இன்னும் 40 ஆண்டுகளில் 900 கோடியை எட்டிவிடுமென்ற அதிர்ச்சித் தகவலும் வெளியாகியுள்ளது.

உலக மக்கள் தொகை அதிகரிப்பினால் இந்தப் பூமிக்கு ஏற்படக்கூடிய தீய விளைவுகளுக்கு உதாரணமாக ஒன்றைக் கூறலாம். சீன நாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவரும் குறிப்பிட்டதொரு உயரத்தில் நின்று ஒரே வேளையில் நிலத்தில் குதிப்பார்களாயின் அந்த விநாடியே இந்த உலகின் தலைவிதி முடிந்து விடுமெனக் கூறப்பட்டுள்ளது. இதனால்தான் வாழுகின்ற பூமிக்கு மனிதனே அழிவைத் தேடித் தரப் போகின்றான் என்பது தெளிவாகப் புலனாகின்றது.

மனிதர்கள் ஆறறிவு படைத்தவர்கள், ஏனைய உயிரினங்கள் அனைத்தையும் விட உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் பொய்ப்பிக்கப்பட்டு வருகின்றது. மனித விழுமியங்கள் உதாசீனம் செய்யப்பட்டு மனிதன் மிருகமாகவே மாறி வருகின்றானோ என்ற எண்ணம் மேலோங்கி வருகின்றது. மனிதர்களின் இன்றைய செயற்பாடுகளைப் பூமித்தாய் கூட மன்னிப்பாளா என்ற சந்தேகம் உருவாகியுள்ளது.

தன்னை உருவாக்கி அரவணைத்து வளர்த்த இந்தப் பூமியை உதாசீனம் செய்து எட்டி உதைக்கும் இந்த மனிதர்கள் இனிமேல் திருந்தி விடுவார்களென்ற நம்பிக்கை அறவே இல்லாமல் போய் விட்டது. தன்னைப் பெற்று வளர்த்த தாயை ஒருவன் எவ்வாறு கொடுமைப்படுத்துகிறானோ அந்த நிலைதான் எம்மைத் தாங்கி நிற்கும் இந்தப் பூமிக்கும் ஏற்பட்டுள்ளது. பொறுமையின் அவதாரமான பூமாதேவி கூட இந்த மனிதர்களை மன்னிக்கவே மாட்டாள் என்பது தான் யதார்த்தம். ✱


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டு குருவியும் குட்டி யானையும்



ஒரு காட்டில் யானைக் குட்டி ஒன்று இருந்தது. அதற்கு எப்போதுமே தானே பெரியவன் என்ற நினைப்பு, தினமும் காட்டில் நடந்து கொண்டு தன் தும்பிக்கைக்கு எட்டும் மரக் கிளைகளை எல்லாம் ஒடித்துச் சாப்பிட்டுக் கொண்டே போகும். அப்படி ஒரு நாள் ஒரு மரத்தை நெருங்கிய போது, அங்கே இருந்த சிட்டுக்குருவி கையை ஆட்டி, "வணக்கம் யானை நண்பா" என்று கூறியது. அதைக் கேட்ட யானைக் குட்டி அலட்சியமாக "உன்னுடைய உருவம் சிறியது? என்னுடைய உருவம் எவ்வளவு பெரியது? நாம் எப்படி நண்பர்களாக இருக்க முடியும்?" என்றது. உடனே குருவி பதில் சொன்னது

"ஏன் முடியாது. நட்புக்கு உருவம் முக்கியம் இல்லை. மனம் தான் முக்கியம், நான் இந்த மரத்தில் நிறைய நாள்களாக இருக்கிறேன். நீ இதை முறித்தால் , நானும் இங்கே இருக்கின்ற மற்றப் பறவைகளும் எங்கே போவது?" என்று கேட்டது. அதற்கு யானை கேலியான குரலில் சொன்னது.

'இந்த மரம் உங்களுக்கு வீடாக இருக்கலாம் ஆனால் எனக்கு இது தான் உணவு' எ்ன்றது. அதைக்கேட்ட குருவி சொன்னது. 'அப்படியென்றால் நமக்குள்ளே ஒரு போட்டி வைத்துக்கொள்ளலாம். அதில் நீ வெற்றி அடைந்தால், இந்த மரத்தின் கிளைகளை உடைத்துச் சாப்பிட்டுக்கொள். நான் வெற்றி அடைந்தால் மரத்தை முறிக்கக் கூடாது என்றது' சிட்டுக் குருவி.

'பொடிப் பயல் உன்னோடு போட்டியா? பரவாயில்லை , சரி சொல்லு' என்றது யானைக் குட்டி.

'நாம் இருவரும் அந்த மலை வரைக்கும் பறந்து செல்ல வேண்டும். அதில் யார் முதலில் போய்ச் சேர்கிறோமோ, அவர்கள்தான் வெற்றி அடைந்தவர்கள்' என்றது சிட்டுக் குருவி.

யானை தன்னாலே பறக்க முடியாது என்று தெரிந்த போதிலும் வீம்புக்காக 'இவ்வளவு தானா பறந்திட்டால் போகுது' என்று போட்டிக்கு ஒப்புக் கொண்டது

போட்டி ஞாயிற்றுகிழமை காலை நடைபெறும் என்று நாள் முடிவு செய்யப்பட்டது. இப்போது யானைக்கு ஒரு பிரச்சினை, நாலு நாளைக்குள் எப்படியாவது பறக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், என்ன செய்வது? யாரிடம் கற்றுக் கொள்வது? எனக் குழம்பியது

பறக்கிறது என்பது பெரிய விடயமா என்ன, லேசாகக் கற்றுக் கொள்ளலாம் என்று நினைத்த யானை வழியிலே ஒரு கோழியைப் பார்த்தது.

'கோழி கோழி, எனக்கு ஒரு உதவி செய்யவேண்டும், நான் எப்படியாவது பறக்க வேண்டும். அதுக்கு ஒரு வழி சொல்லு' என்றது.

அதைக்கேட்ட கோழி சொன்னது 'அது மிக இலகுவானது அண்ணே. நான் என்ன செய்கிறேன் என்று கவனி! அதே மாதிரி செய்தால் நீயும் பறக்கலாம்' என்றது. யானையும் ஒப்புக் கொண்டது

கோழி அங்கே இருந்த ஒரு பாறை மேலே ஏறி நின்று கொண்டு சடசட என்று தனது இறக்கையை அடித்தபடியே தாவியது, சில நொடிகள் அந்தரத்தில் பறந்தவாறு கீழே வந்து சேர்ந்தது. அவ்வளவு தான், சுலபம், எங்கே நீ பறபாக்கலாம் என்றது.

யானையும் கஷ்டப்பட்டு பாறை மீது ஏறி நின்று கோழி மாதிரிக் காலை விரித்துக் கொண்டு தாவியது, அவ்வளவு தான், டமார் என்று கீழே விழுந்து நல்ல அடி, (தொடரும்)



# தாவர உண்ணி டைனோசர்



ஜு ராசிக் பார்க் என்ற ஹாலிவுட் திரைப்படத்தில் டைனோசர் தோன்றுவதைப் பார்த்திருப்போம். சுமார் 65.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு டைனோசர் இனம் வாழ்ந்துள்ளன. அப்பொழுது பூமியின் மீது விண்வெளியில் இருந்து சக்தி வாய்ந்த பெரிய விண்கல் ஒன்று மோதியதாகவும் அதனால் ஏற்பட்ட பேரழிவால் அந்த இனம் அடியோடு அழிந்துவிட்டதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கருதி வந்தனர். தற்போது டைனோசர் பற்றி புதிய தகவல் கிடைத்துள்ளது. இந்த டைனோசர்கள் தாவரம் மட்டும் உண்பவை, மாமிசம் உண்பவை, நிலத்தில் வாழ்வன, நீர் வாழ்வன என பல பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டு உள்ளன. இதில் ஹேட்ரோசார் என்ற டைனோசர் தாவர உண்ணி வகையை சார்ந்தது. இதன் வாய்ப்பகுதி மிகவும் பெரியதாகும். இது ளொட்ரபஸ் என்ற நீர்வாழ் உயிரினத்தின் அலகு போல் காணப்படும் (வாய்ப்பகுதி). தற்போது நியூமெக்ஸிக்கோவில் இவ்வகை டைனோசர் ஒன்றின் எலும்பு புதை பொருளாகக் கிடைத்துள்ளது. இதனை ஆய்வு செய்ததில் அதன் வயது 64.8 மில்லியன் ஆண்டுகள் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



சி.கஜானி, தரம்-9டி
கிளி/இந்துக் கல்லூரி




# கல்வி பற்றிய பழமொழிகள்

1. கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு. நாம் கற்றது சிறியளவு, கற்காதது அதிகளவு (அளப்பெரியது கல்வி)
2. கல்வி கடல் போன்றது. கல்வி அளப் பெரியது.
3. அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் கல்லார். கற்றவருடையு இயல்பும், கல்லாதவருடைய இயல்பும்.
4. அறிய அறியக் கெடுவார் உண்டோ? கல்வியை கற்பதால் நன்மையே உண்டாகும்.
5. அறிவு இல்லாதார் தமக்கு ஆண்மையுமில்லை. கல்வி கற்காதாருக்கு ஆண்மை அதாவது வலிமையுமில்லை.
6. அறிவுடையாரை அரசும் விரும்புவான். கற்றார் சிறப்பு
7. ஆயிரம் நட்சத்திரங்கள் கூடினாலும், ஒரு நல் நட்சத்திரத்துக்கு ஈடாகாது. அறிவற்றவர்கள் ஆயிரம் பேர் கூடினாலும் ஒரு அறிவுள்ளவனுக்கு இணையாகாது.
8. இளமையில் கல்வி சிலையில் எழுத்து. இளமைக் கல்வி நிலையானது.
9. நிறைகுடம் தளம்பாது குறைகுடம் தளம்பும். முழுமையாக ஆழமாகக் கற்ற கல்வி நிலையானது அரைகுறையாக கற்றகல்வி நிலையற்றது.
10. அற்ப அறிவால் ஆபத்து. அரைகுறையான அறிவு ஆபத்தாக முடியும்.

இ.கலைப்பருதி, தரம்- 7 B
யா/ உடுவில் பெண்கள் உயர்தர பாடசாலை.

# முரண்பாடுகளை தவிர்ப்போம்

நமது சமூகத்தில் பல்வேறு குணங்களையும், தன்மைகளையும் கொண்ட மனிதர்கள் காணப்படுகின்றனர். மனிதர்கள் மத்தியில் அன்றாடம் முரண்பாடுகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. கடந்த காலத்தை விட தற்காலத்தில் இன, மத, கலாசார ரீதியில், அரசியல் ரீதியில், பொருளாதார ரீதியிலும் முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

சிறந்த ஆளிடைத் தொடர்புகள் முறிவடையும் போது முரண்பாடுகள் தோன்றுகின்றன. முரண்பாடுகள் வாய்ச் சண்டையாக மாறி, கை கலப்பாகி, பல உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. பிள்ளைகள், சகோதரர், பெற்றோர், அயலவர் போன்ற பலருக்கிடையிலும் பல முரண்பாடுகள் ஏற்படும். குடும்பத்தில் பிள்ளைகளுக்கிடையில் பெற்றோர் காட்டும் ஏற்றத்தாழ்வு ஒருவர் மீது பழி சுமத்தல் போன்ற காரணங்களால் முரண்பாடுகள் ஏற்படலாம். நாம் விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, பொறுமை, சகிப்புத் தன்மை போன்ற பண்புகளை வளர்த்துக் கொண்டு முரண்பாடுகளைத் தவிர்த்து பொன்னான நல்வாழ்வு வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமியை நோக்கி வீழ்கிறது செயற்கை கோள்

விண்வெளியில் பழுதடைந்துள்ள செயற்கை கோள் ஒன்று பூமியின் மீது விழப்போகிறது என்ற அதிர்ச்சி தகவலை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஐரோப்பிய விண்வெளி ஆய்வுக்கழகம் கடல் ஆராய்ச்சிக்காக செயற்கை கோள் ஒன்றை செலுத்தியது.

பூமிக்கு மேற்பரப்பில் சுழன்றபடி ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்த அந்த செயற்கைகோள் எதிர்பாராத விதமாக பழுதடைந்து விட்டது.

இந்நிலையில் இந்த செயற்கைகோள் பூமியை நோக்கி வரத்தொடங்கியுள்ளதால் விஞ்ஞானிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தினமும் 2 மைல் கீழே இறங்கிக் கொண்டிருக்கும் செயற்கைகோள், இன்னும் ஓரிரு நாளில் பூமியின் விழ உள்ளது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் 10ஆம் திகதி நள்ளிரவு அல்லது 11ஆம் திகதி அதிகாலை விழலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் குறிப்பாக எத்தனை மணிக்கு, எந்த பகுதி மேல் விழும் என்பதை விஞ்ஞானிகளால் துல்லியமாக கணிக்க முடியவில்லை. விஞ்ஞானிகள் செயற்கைகோளை கண்காணித்தபடியே உள்ளனர் என்று கூறப்படுகின்றது.











Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மர்மங்கள் நிறைந்த அமேசன்



பூமியில் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் ஆறுகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்போம். அதிகமாக அறியப் படாத வித்தியாசமான ஆறு ஒன்றைப் பற்றிய தொகுப்பு இது.

**மாய ஆற்றை உருவாக்கும் மரங்கள்**

தென் அமெரிக்க கண்டத்தின் மையப் பகுதியை வளப்படுத்திக் கொண்டிருக்கும் அமேசன் ஆறு பல அதிசயங்களைக் கொண்டது. உலகிலேயே இரண்டாவது நீளமான ஆறாக இருப்பதும், உலகின் மிகப் பெரிய வடிகாலாக அறியப்படுவதும் அமேசன் தான்.

உலகின் அனைத்து ஆறுகளில் ஓடும் நீரின் மொத்த அளவில், ஐந்து ஒரு பங்கு நீர் அமேசன் ஆற்றில் ஓடுகிறது. பல்லாயிரம் உயிரினங்கள், மர வகைகள் என உலகின் உயிர்சூழலில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி அமேசன்.

**பறக்கும் ஆறு**

இந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த அமேசன் ஆற்றில் அதிகம் அறியப்படாத ஓர் அம்சம் உள்ளது. அதுதான் பறக்கும் ஆறு. கண்ணுக்குத் தெரியாத இந்த ஆறு அமேசன் காட்டுப் பகுதிக்கு மேல் பறந்து கொண்டிருக்கிறது. முற்றிலும் நீராவியால் உருவாகியுள்ளமை இந்த ஆற்றின் சிறப்பம்சம். தரையில் ஓடும் சாதாரண ஆற்றில் உள்ள நீரோட்டத்தைப் போல இந்தப் பறக்கும் ஆற்றில் நீராவியோட்டம் இருக்கிறது.

அமேசன் ஆற்று நீரை உறிஞ்சும் மரங்கள் அதை நீராவியாக வெளியேற்றுவதால் இப்படியொரு ஆறு உருவாகியுள்ளது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த மரங்கள் ஒரு நாளில் மட்டும் வெளியேற்றும் நீராவியின் மொத்த எடை பல ஆயிரம் கோடி தொன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆர்ஜென்டினா, உருகுவே, பராகுவே, வெனிசுலா, கயானா, சூரினாம் என பல நாடுகளிலிலும் பரவியிருக்கிறது இந்தப் பறக்கும் மாய ஆறு. தென் அமெரிக்காவின் ஆன்டிஸ் மலைத் தொடர் இந்த பறக்கும் ஆற்றுக்கு இயற்கையே வகுத்துத் தந்த கரையாக உள்ளது. இதனால் பிரேசில் மட்டுமல்லாமல் தென் அமெரிக்காவின் பல நாடுகளிலும் பெருமளவு மழைப் பொழிவுக்கு அமேசனின் பறக்கும் ஆறே காரணமாக இருக்கிறது.

பருவநிலை மாற்றம் காரணமாக கடந்த சில ஆண்டுகளில் படிப்படி யாக அழிந்து வருகிறது இந்தப் பறக்கும் ஆறு.






அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ கடற் கரையை ஒட்டிய கடல் பகுதியில் கூகுள் நிறு வனம் அமைத்து வரும் மிதக்கும் கட்டடங்கள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. இந்த மிதக்கும் கட்டடங்களை கூகுள் நிறுவனம் எதற்காகப் பயன்படுத்தப் போகிறது என்பது குறித்து அதிகாரப்பூர்வமான அறிவிப்பு இது வரை வெளியிடப்படவில்லை. அதற்குள்ளாக, இவை தகவல் மையங்களாகவே, கூகுள் கிளாஸ் போன்ற வருங்காலத் தயாரிப்புகளுக் கான விற்பனை அரங்குகளாகவே பயன் படுத்தப்படலாம் என்ற தகவல் பரவி வருகி றது. தகவல் மையங்களுக்கு குளிர் வூட்டும் வசதியே மிகப் பெரிய பிரச்னையாக இருந்து வருகிறது. அதற்குத் தீர்வு காணும் வகையில் கடலிலேயே இதுபோன்ற கட்டடங்களை அமைக்க கூகுள் திட்டமிட்டிருக்கலாம் என் றும் கூறப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org


நீர்வைக்கிழார்.

# கலைப் பாரம்பரியத்துக்கு வளம் சேர்க்கும் மிருதங்க அரங்கேற்றம்

யாழ்.வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஞானவேல் வசந்தின் மிருதங்க அரங்கேற்ற ஆற்றுகை அண்மையில் வவுனியா கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இவர் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கணிதத்துறையில் பயில்கி றார். மிருதங்கத்துறை மீது கொண்ட ஆர்வத்தால் விரிவுரையாளர் நல்லை க.கண்ணதாச னிடம் முறைப்படி மிருதங்கம் பயின்றார். கலைக் கற்கை ஒன்றின் வெற்றி. கலைஞனின் உள்ளார்ந்த ஆர்வத்தில் தங்கியிருக்கிறது. வசந்தின் உள ஆர்வம் அவரது லயஞானமாக வெளிப்பட்டது. எந்த வொரு கடினமான சொல்லையும் அதன் அமைப்புக் குன்றாது லாவக மாக வாசிக்கும் இயற்கையான திறன் அவரிடம் அமைந்திருந்தது. குரலிசையை தவமைந்தன் தவநாதன் றொபேட்டும் வயலினி சையை இசைஞான திலகம் உ:இராதா கிருஷ்ணனும் வழங்கினர். அரங்கேற்ற நாயகன் ஞானவேல் வசந்தன் மிருதங்க இசை நல்கினார். கலைமாணி நா.சிவசுந்தரசர்மா கெஞ்சிராவை யும். நுண்கலை மாணி சி.சிவசிவா கடத்தையும் கலாவித்தகர் சி.செந்தூரன் முகர்சிங் கையும் வாசித் தனர். இசைமாணி க.ரஜீவன் தம்புராவை மீட்டினார். "எவ்வரி..." எனத் தொடங்கும் பட்டணம் சுப்பிரம ணிய ஐயரின் தெலுங்குத் தாள வர்ணத்துடன் கச்சேரி ஆரம்பமானது. தொடர்ந்து வள்ளலாரின் கலைநிறை கணபதி சரணம்... என்ற கீர்த்தனை இடம்பெற்றது. தனி ஆவர்த்தன வேளையில் கச் சேரி சூடு பிடித்தது. முதல்தர கலைஞர்களுக்குத் தான் எவ்வகையிலும் சளைத்தவர் அல்ல என் பதை வசந்த் நிரூபணம் செய்தார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் தலை மையில் நடைபெற்ற இவ் அரங் கேற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக கலைப்பீடா திபதி வி.பி.சிவநாதன் பிரதம விருந்தினராகவும் ஆங்கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன். முன்னாள் மிருதங்க விரிவுரையாளர் 'தண்ணுமை வேந் தன்" மா.சிதம்பரநாதன், 'கலைஞர்' வேல்.ஆனந்தன், வவுனியா தெற்கு கல்வி வலய நடன பாட ஆசிரிய ஆலோசகர் சூரியயாழினி வீரசிங் கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மதிப்பீட்டுரை நல்கிய வவுனியா மிருதங்க வித்துவான் கலா பூஷணம் க.கனகேஸ்வரன், வசந்தின் லயஞான கரவேகத்தினை மனதாரப் பாராட்டினார். யாழ்.மண்ணில் சிதம்பரம் ஏ.எஸ். இராமநாதன் தொடக்கி வைத்த மிருதங்கப் பாரம் பரியம் இன்று வவுனியாவுக்கும் தொற்றுகை அடைந்துள்ளது. தமிழ்நாடு சிதம்பரத்தில் பிறந்த வரான அவர் இராமநாதன் நுண்கலைக்கழகத் தில் விரிவுரையாளராக இருந்து பலருக்கு மிருதங்க இசையைப் பயிற்றுவித்தார். அந்த மரபு வசந்தில் இன்று பாய்ச்சப்பட்டிருக்கிறது. வவுனியா மண்ணின் கலைப்பாரம்பரியத்துக்கு வளம் சேர்க்கக் கூடிய நம்பிக்கை நட்சத்திரமாக வசந் எல்லோர் கண்களிலும் தெரிகின்றார்.



# வண்ணம் மாறும் கார்



காரை வாங்கிய பிறகு, அதன் கலர் சரியில்லை என்று இனி வருத்தப்படத் தேவையிருக்காது. ஓட்டுநரின் மனநிலை மற்றும் விருப்பத்திற்கு ஏற்ப காரின் வர்ணம் மாறும் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்ய டொயோட்டா நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இந்த மாதம் நடைபெற உள்ள வாகனக் கண்காட்சியில் வர்ணம் மாறும் கார் அறிமுகமாகும் எனத் தெரிகிறது. டொயோட்டா எஃப் வி 2 என்ற பெயரில் ஓட்டுநரின் முக பாவனை மற்றும் குரலை உணரக்கூடிய ரோபோ தொழில்நுட்பம் இதில் பயன்படுத்தப்படும் எனத் தெரிகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்குற்றி வடிவில் தலையணை





வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக மரக்குற்றிகளின் வடிவில் தலையணைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
இந்த வகையான தலையணை ஒன்றின் பெறுமதி 17 டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாரடைப்பு வருவதை முன்கூட்டியே கண்டறிய தொழில்நுட்பம் தயார்



மாரடைப்பு வரக்கூடிய நிலையில் ஒருவர் இருக்கிறாரா என்று கண்டுபிடித்துச் சொல்லக்கூடிய ஒரு வழியை, ஏற்கனவே புற்றுநோயைக் கண்டுபி டிக்கப் பயன்படுத்தப்பட்டுவரும் ஒரு ஸ்கானிங் முறையின் மூலம், தாங்கள் கண்டுபிடித்திருப்பதாக எடின்பரோவில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
கதிரியக்கத்தை வைத்துக் கண்டறியும் இந்தத் தொழில்நுட்பம், இதயத்துக்குச் செல்லும் இரத்தக் குழாய்களில் ஆபத்தான பொருள்கள் அடைந்து கிடந்தால் அவற்றை ஒளிரவைத்து, அதிகக் கூர்மையுள்ள ஸ்கான்களின் மூலம் அவைகளை மருத்துவர்கள் பார்க்க உதவுகிறது என்று வல்லுநர்கள் கூறுகிறார்கள். மாரடைப்பு ஏற்பட்ட 40 பேர் மீது நடத்தப்பட்ட பரிசோதனைகளில், இந்த ஸ்கான், 37 நோயாளிகளின் இதயத்தில் , சேதம் ஏற்பட்டிருந்ததைக் காட்டியது. இந்த ஆய்வு முடிவுகள் மருத்துவ சஞ்சிகையான, லேன்செட்டில் வெளியிடப்பட்டுள்ளன.

# நெஞ்சு வலி மாரடைப்பின் அறிகுறி அல்ல

சின்னக் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இன்று எல்லோருக்கும் நெஞ்சு வலி வருகிறது. மற்ற வலிகளைக் கண்டு பயப்படுகிறோமோ, இல்லையோ, நெஞ்சு வலி என்றால் துடித்துப் போகிறோம்.
காரணம், நெஞ்சுவலியை மக்கள் எப்போதும், மாரடைப்பின் அறிகுறியாகப் பார்ப்பதுதான். எல்லா நெஞ்சு வலிகளும் மாரடைப்பின் அடையாளமில்லை என்கிறார் வலி நிர்வாக சிறப்பு சிகிச்சை நிபுணர் குமார்.

மாரடைப்பால் வரும் நெஞ்சு வலியானது, முதலில் நெஞ்சின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கும்.
மயக்கம், படபடப்பு, அதிக வியர்வை, வலி இடது கைக்குப் பரவுவது, நெஞ்சைப் பிசைகிற மாதிரியோ, அழுத்துகிற மாதிரியோ வலிப்பது, மூச்சுத் திணறல், அரிதாக சில நேரம் கழுத்திலும் வலி போன்றவை இருக்கும்.
தோள்பட்டை வலியானால், தோள்பட்டை தேய்மானம் மற்றும் வீக்கத்தைக் குறைக்க, தோள்பட்டை சந்திப்பில் ஊசியின் மூலம் மருந்தைச் செலுத்தி, சில பயிற்சிகளும் பரிந்துரைக்கப்படும்.
நெஞ்செலும்பு சந்திப்புகளில் வயதானவர்களுக்கு வரும் வலிக்கு மாத்திரைகளும், பயிற்சிகளுமே தீர்வு.
சரியான சிகிச்சை கொடுத்தால் நெஞ்சு வலியிலிருந்து மீண்டு நிம்மதியாக வாழ முடியும்.



# கண்ணீரை வரவழைக்காத 'வெங்காயம்'

இரத்தத்தை சுத்தமாக்கும் தன்மை, பூண்டுக்கு உண்டு. அந்தக் குணங்களை புது வெங்காயத்தில் உருவாக்கியுள்ளோம்.

கண்ணீரை வரவழைக்காத வெங்காயத்தை, அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.
இது குறித்து வெங்காயத்தை உரு வாக்கியுள்ள விஞ்ஞானி, கோலின் இயாடி கூறியதாவது:
சமையலில் பெரும்பங்கு வகிக்கும் வெங்காயம், அதை உரிப்பவர்களுக்கு கண்ணீரை வரவழைக்கிறது. வெங்காயத்தில் உள்ள கந்தக அமிலம் தான் கண்ணீரை வரவழைக்கிறது. எனவே, கந்தக அமிலத் தன்மையில் மாற்றம் செய்து, புதுவகை வெங்காயத்தை உருவாக்கி யுள்ளோம்.
இந்தப் புது வெங்காயம், கண்ணீரை வரவழைக்காது; பூண்டில் உள்ள அனைத்துக் குணங்களும், புது வெங்காயத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.
ரத்தத்தைச் சுத்தமாக்கும் தன்மை, பூண்டுக்கு உண்டு. அந்தக் குணங்களை புது வெங்காயத்தில் உருவாக்கியுள்ளோம்.
இதன் மூலம் இதய சம்பந்தமான நோய்கள் தவிர்க்கப்படும். உடல் எடையும் குறையும். -என்றார்.

# புற்றுநோயைக் குணப்படுத்தும் பசுப்பால்



இரைப்பை புற்றுநோயை பசுப் பால் குணப்படுத்தும் என்று ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.
ஆசிய நாடுகளில் பெரும்பாலான மக்கள் இரைப்பை புற்றுநோயால் இறக்கின்றனர்.
இது குறித்து தைவானின் தேசிய ஜலன் பல்கலைக்கழக கால்நடை அறிவியல் துறை விஞ்ஞானி வை-ஜங்-சேன் கூறியதாவது:-
பாலில் உள்ள எல்.எப்.சின் பி 25(லாக்டோபெரிசின் பிராக்மெண்ட்) என்னும் பெப்டைடு, மனிதர்களின் வயிற்றில் ஏற்படும் புற்றுநோயைக் குணப்படுத்துகிறது.
இந்த பெப்டைடை இரைப்பை புற்றுநோய் செல்லுக்கு அருகில் செலுத்திய ஒரு மணிநேரத்தில் புற்றுநோய் செல்லின் ஜவ்வுக்குள் நுழைவதையும், 24 மணி நேரத்துக்குள் புற்றுநோய் செல்லை சுருக்கி சிறிதாக்கித் தன்னுடைய வேலையை முடித்து விடுவது ஆய்வில் தெரியவந்துள்ளது.
இதுதவிர பெக்லின்-1 என்னும் புரதத்தை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்தப் புரதம் புற்றுநோய் செல்களை அழிப்பதில், எல்.எப்.சின் பி 25 ஐ விட அதிக ஆற்றலும், வேகமும் கொண்டது.-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமாண்ட விம்பங்களின் நாயகன் ஜேம்ஸ் கமரூன்




கனடாவில் பிறந்த ஜேம்ஸ் கமரூன் டெர்மினேட்டர், தி அபஸ், டைட்டானிக் அவதார், எலியன்ஸ் போன்ற சாதனை படைத்த திரைப்படங்களை இயக்கி பிரபல இயக்குநர் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டார். இவர் இயக்கிய ஒவ்வொரு திரைப்படமும் பார்வையாளர்களைப் பிரமிக்க வைக்கும் விதத்தில் அமைந்தவை என்றால் மிகையில்லை.

இவர் இயக்கிய தி அபஸ், டைட்டானிக் படங்கள் ஆழ்கடல் தேடலை அடிப்படையாகக் கொண்வை ஆகும். 59 வயதான ஜேம்ஸ் கமரூன் சின்ன வயதில் இருந்து அறிவியல் புனைகதைகளைக் கூடுதலாகப் படிக்கும் ஆர்வம் கொண்டவர். இதனால் அத்தகைய பல புத்தகங்களை படித்ததால் அந்தக் கதைகளில் வரும் காட்சிகளை ஒன்று. திரட்டி அவதார் என்ற படத்தை எடுத்தார்.

இந்தப் படத்துக்காக முழுக்க முழுக்க கணினியில் நடிகர்களை வடிவமைத்தார். இவருடைய புதிய தொழில் நுட்பம் பற்றி கேள்விப்பட்டு வியந்து அசந்த இயக்குநர்களின் பட்டியலில் ஸ்டீபன் ஸ்பெல் பெர்க்கும் ஒருவர். ஜூராசிக் பார்க்கில் டைனோசர்களை அலற விட்டவரையே அலற வைத்து விட்டு விட்ட தாம் இவரின் தொழில்நுட்பம். மற்றப் படங்களில் உள்ளது போல தனியே நடிகர்களை நடிக்க வைத்து பின்னர் கிராபிக்ஸ் காட்சியில் இணைக்காமல் கிராபிக்ஸ் காட்சியை கணினிக்கு இணையாக ஓடவிட்டு அதற்குத் தக்கபடி நடிகர்களை நடிக்க வைத்திருக்கிறார்.

இந்தக் கமரா ரெக்னிக் ஒரு முப்பரிமாண மாய உலகை கனகச்சிதமாக படம் பிடித்திருக்கிறது. நடிகர்களின் அசைவுகளை தவால்யம் எனும் கருவி மூலம் துல்லியமாகப் படம் பிடித்தார்.

அதனை கணினி இமேஜ்களுக்கு இறக்குமதி செய்திருக்கிறார். இதன் மூலம் டிஜிட்டல் உருவங்கள் அச்சு அசலாக மனித அசைவுகளைப் பிரதிபலிக்கும். அப்படி எடுக்கப்பட்ட அவதார் படத்தில் எது நிஜம், எது கிராபிக்ஸ் என்று தெரியாமல் பார்வையாளர்கள் குழம்பிப் போய் இருக்கிறார்கள். அவதார் திரைப் படத்தின் பெயரிலும் அவதாரின் நீல நிறத்திலும் இந்தியப் பாதிப்பு தெளிவாகவே தெரிகிறது.

அவதாரின் வர்ணத்தை சிவபெருமானின் நீலநிறத்திலிருந்து எடுத்துக் கொண்டார் ஜேம்ஸ். இப்படி ஒரு படம் இதுவரை வெளியாகவில்லை. இந்தப் படத்துக்கு 300 மில்லியன் டொலர் செலவாகி இருக்கின்றன. அவதார் பட நாயகன் ஜேக். இவர் ஒரு கடற்படை வீரர். போரில் காயமடைந்து இடுப்புக்கு கீழே உடல் செயல் இழந்த நிலையில் இருக்கிறார். அவர் மீண்டும் எழுந்து நடந்து பண்டோராவுக்குப் போகும் வாய்ப்பு வருகிறது.

பண்டோரா ஒரு தனிக்கிரகம். இந்தக் கிரகத்தில் பிரமிப்பையும், பயத்தையும் ஊட்டும் பல விதமான ஜீவராசிகள் வாழ்கின்றன.



அங்கே நவி என்ற ஒரு இன மனிதர்களும் வசிக்கிறார்கள். 10 அடி உயரம் நீளமான வால், நீல நிற தோல், பெரிய காது .சப்பை மூக்கு என வியக்க வைக்கும் உருவம்.

நவிகள் மனிதர்களை விட அதி பயங்கர சக்திகளுடன் இருக்கிறார்கள். இந்த கிரகத்தில் மனிதனால் சுவாசிக்க முடியாது. இதனால் நவி போல உரு வாக்கப்படும் மனிதர்கள் தான் அவதார்.

ஊனமுற்ற ஜேக் தனது அவதார் உருவத்தின் மூலமாக பண்டோராவுக்குள் நுழைகிறார். நவிப் பெண்ணுடன் காதலில் சிக்கிக் கொள்கிறார். பண்டோராவில் மனிதர்களின் தலையிடலை நவிகள் விரும்பவில்லை. இப்போது ஜேக் தன் இனமான மனிதர்களுக்கும் தன் காதலி இனமான நவிகளுக்கும் இடையே சிக்கிக் கொள்கிறார். அவர் எந்தப் பக்கம் சாய்கிறார். அதன் விளைவுகள் என்ன என்பதை அவதார் என்ற படத்தின் மூலம் சுவாரஸ்யமாக எடுத்திருக்கிறார் ஜேம்ஸ்.

டைட்டானிக்கப்பல் 1912 இல் பனிமலையில் மோதி உடைந்து அட்லாண்டிக் பெருங்கடலில் சுமார் 12,500 அடி, அதாவது சுமார் 4 கிலோ மீற்றர் ஆழத்தில் 1,500 பேருடன் மூழ்கியது. விசேடமாகச் செய்யப்பட்ட சம்மர்சிபன் என்றழைக்கப்படும் மூழ்கு கலத்தில் 4 கிலோ மீற்றர் ஆழம் வரை சென்று ஆழத்தில் இருட்டில் உறைந்து கிடக்கும் டைட்டானிக் கப்பலை கமராவில் தானே படமெடுத்து வந்து அதை டைட்டானிக் படத்திலும் இணைத்திருந்தார் என்பது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். இந்த ஆழ்கடல் சாதனையை இதுவரை எவரும் நிகழ்த்தியதில்லை. ஜேம்ஸ் கமரூன் சினிமாவில் மட்டுமல்ல நிஜவாழ்விலும் ஒரு சாகசக்காரர் தான்.

பார்வையாளன்.

# தாய் நிலத்தை இழந்தவன் பதவிகளால் பயனடைய மாட்டான்

கவிஞர் பாரதியார் தமது கவிதைகள் மூலம் பல்வேறு துறைகளையும் கண்டித்து விமர்சித்துள்ளார். சமூகத்துறைக்கு அவர் கொடுத்த அடிகள் பல. அவற்றுள் ஒன்று கல்லடியினும் கடுமையான சொல்லடியாய் அமைகிறது. "கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கை கொட்டிச் சிரியாரோ" என்பதே அந்தப் பாடல் வரியாகும். கண்ணை இழந்து விட்டால் சித்திரத்தைக் கண்டு களிப்பது எப்படி?" என்பதே அவரது கேள்வி. உயர்ந்த ஒரு சித்திரத்தைப் பார்த்து மகிழ்ந்து அதற்குத் தமது முக்கிய உறுப்பு களான கண்களையே விலையாகக் கொடுக்க முன்வரும் எண்ணம் உள்ளத்தில் தோன்றினாலும் தோன்றலாம் என எண்ணியே கவிஞர் முதலில் கண்களை விற்றுப் பிறகு சித்திரம் வாங்கும் கொடுமைதான் நகைக்கக் கூடியது என இப்பாடலில் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

கண்களை விற்றுச் சித்திரம் வாங்கிய, வாங்கும் செயல் எங்கோ, என்றோ, நடந்ததாகவோ நடக்கக் கூடியதாகவோ தெரியவில்லை. பின் ஏன் கவிஞர் இவ்வாறு கூறியிருக்கிறார் என எண்ணிப் பார்த்தால் இதனை எதற்கோ உவமையாகக் கூறியிருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. கவிஞர் பாரதியார் தாய் மண்ணை ஒரு கண்ணாகவும் தமிழ் மொழியை மற்றைய கண்ணாகவும் கருதி வாழ்ந்தவர். "எண்ணும் எழுத்தும் கண் ணெனத் தகும்" என்பது ஔவையின் கருத்து. "நாடும் மொழியும் நல்ல கண்கள்" என்பது பாரதியாரின் கருத்து. தமது தேவையை அடைவதற்குக் கொடுக்கப்படும், பதவிக்காகக் கொடுக்கப் படும், விலை தாய் நிலத்தையும், தமிழையும் காட்டிக் கொடுப்பதாக மட்டும் இருந்து விடக் கூடாது என்பதே கவிஞரின் கருத்து.

தாய் நிலத்தை அயலவர் அடிமைப் படுத்துவதைக் கண்களை விலை கூறி விற்பதற்கும், அதன் மூலம் பட்டம், பதவி, பணம், சலுகை முதலியவைகளைப் பெறுவதை சித்திரம் வாங்கும் செயலுக்கும் கவிஞர் ஒப்பிட்டுக் காட்டியிருப்பது உய்த்துணரத்தக்கது. கண்கள் இரண்டையும் விற்றுச் சித்திரங்களை வாங்கும் மனிதனும் தாய் நிலத்தையும் மொழியையும் விற்றுப் பட்டம் பதவிகளைப்பெறும் மனிதனும் ஒரே தரத்தினர் என்பது பாரதியாரின் முடிவு. கண்களை இழந்தவன் தான் பெற்ற சித்திரங்களால் ஏவ்வாறு பயனடைய மாட்டானோ, அவ்வாறே தாய் நிலத்தையும், மொழியையும் இழந்த எவனும் தான் பெற்ற பட்டம் பதவிகளால் பயனடையமாட்டான் என்பது கவிஞர் கூறியுள்ள உயர்ந்த கருத்து.

கண்களைப் பறிகொடுத்துச் சித்திரம் வாங்கும் தவறும், நாட்டை, மொழியைப் பறிகொடுத்துப் பட்டம் பதவி பெறும் தவறும், மன்னிக்க இயலாத தவறுகளாகும். தாய் நிலத்தில் வாழ்ந்து கொண்டே, தமிழ் மொழியைப் பேசிக் கொண்டே தாய் நிலத்தையும், தமது மொழியையும் பிறருக்குத் தாரை வார்த்துக் கொடுத்து அதன் மூலம் தமது வாழ்வை உயர்த்திக் கொள்ளும் அதிகாரிகளுக்கு கவிஞர் பாரதியாரின் சொல்லடி முகத்தில் ஓங்கி அறைந்தமைக்குச் சமமான ஒன்றாக அமைந்திருக்கிறது.

இதே போலத்தான் ஓர் அதிகாரி எமது பிரதேசத்திலும் இருக்கிறார். இவர் தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதில் கவனமாக இருக்கிறார். இதனால் தானோ என்னமோ, எந்தப் பிரதேசத்துக்கு அதிகாரியாக இருக்கிறாரோ. அந்தப் பிரதேச மக்கள் படும் துன்பங்களை, அவலங்களை ஏறெடுத்தும் பார்க்காமல் இருக்கிறார். கேட்டால் ஏதோ ஏதோ காரணம் சொல்லித் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறார். ஆனாலும் தான் தப்பித்துக் கொள்வதற்கான சரியான காரணம் கூற முடியாது போகப் போய் அவமானப்பட்டும் இருக்கிறார். மக்களுக்காக வேலை செய்ய இறங்கினால், தனதுபதவி பறி போய் விடும் என்ற காரணத்தால் அரசின் கைப் பொம்மையாக இருக்கிறார்.




இவரைப் பற்றி துரையண்ணையிடம் "ஊரைக் காவ வேண்டாம். அது அந்த இடத்திலேயே இருக்கட்டும் பிற கேன் ஊரைத் தோளில் தூக்கிக் காவிறார் என்று உந்த அதிகாரியை சொல்லுறாங்கள்" என்று கேட்டேன். அவரோ" அவர் ஊரைக் காவ இல்லை. ஊரைத் தாரை வார்த்துக் கொடுத்து விட்டு எல்லோ ஒன்றும் தெரியாத மாதிரி இருக்கிறார். இவருக்கு ஊரைக் காவுறார் என்று எப்படி விமர்சனம் வந்தது என்றால், ஒரு ஊருக்கு இவர் அடிக்கடி சென்று வருவதால் அவரை ஊரைக் காவுறார் என்று சொல்லிச்சினம். ஆனால் இப்ப அவர் அந்த ஊரைக் காவ இல்லை. காரில் ஒரு நகருக்கு சென்று வருகிறாராம்"- என்றார் நானோ "எந்த நகருக்கு என்று கேட்டேன் .அவரோ "றைவரிடம் கேட்டுப்பார்" என்று சொல்லி விட்டு கதைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்து விட்டார்.

ஆனாலும் நான் விடவில்லை. துருவித் துருவிக் கேட்டேன். கடைசியில் அவர் வாய் திறந்து கொட்டத் தொடங்கினார். "இருந்த இடத்திலேயும் இதே பிரச்சினைதானாம். யாழ்ப்பாணத்துக்கு வரேக்க கொஞ்சம் பயம் இருக்கும் என்று பார்த்தால், அவருடைய பயத்தை ஒரு சிலர் நீக்கி விட்டார்களாம். தாங்களுடைய தேவைக்காக இவரைப் பயன் படுத்தலாம் என்ற பேரா சையில் மிதந்து கடைசியில் இரண்டும் கெட்ட நிலையில் உள்ளனர். ஆனால் இந்த அதிகாரியோ தனது கடமையை மக்களுக்குச் சரியாகச் செய்கிறாரோ இல்லையோ, தனது தனிப்பட்ட வேலையை முழுமை யாக நிறைவேற்றிக் கொள்கிறா ராம்.

பொதுக்கூட்டத்தில் கூட இவருக்கு அருகில் வந்து காதுக்குள்ளே இரகசியமாக சொல்லுறதுக்கு பெண் அதிகாரி ஒருவருக்கு மட்டும் அனுமதி கொடுத்திருக்கிறாராம். அதனால் தானோ என்னவோ அந்தப் பெண் அதிகாரியின் நிர்வாகக் கட்டமைப்பில் உள்ள ஊரில் நடக்கும் எந்த நிகழ்வானாலும் அதில் கலந்து கொள்கிறாராம். என்ன வேண்டுமானாலும் செய்யட்டும்.ஏனென்றால்இவருக்குஅணைவாக சிலர் இருக்கும் போது இவரை மட்டும் குறை கூறி என்ன பயன் ? ஆனாலும், இவரை விடக் கூடாது. உயர் பாதுகாப்பு வலயம் என்று வலி. வடக்குப் பிரதேசத்தை தம் வசம் வைத்திருக்கும் படையினர் இப்பொழுது அங்குள்ள மக்களின் வீடுகளையும் இடித்தழிக்கினம். தங்கட குடும்பங்களை அங்கே கொண்டு வந்து குடியமர்த்தப் போயினமாம். இடம்பெயர்ந்திருக்கும் அந்தப் பகுதி தமிழ் மக்கள் தங்கடை சொந்தக் காணி பூமிக்காக பல போராட்டங்களை மேற்கொண்டு வரும் நிலையில் இந்த அதிகாரியோ அந்தப் பகுதியிலை வீடுகள் உடைத்து அழிக்கப்படுகின்றனவா என்பது குறித்துத் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்லி இருக்கிறார். உண்மையிலேயே நித்திரை கொள்பவனை எழுப்ப முடியும். நித்திரை கொள்பவன் போல் நடிப்பவனை எழுப்ப முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org